# குமாரலிங்கர் குறவஞ்சி



டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்

# குமாரலிங்கர் குறவஞ்சி

KUMARALINGAR KURAVANCI

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்

திருவான்மியூர் :: சென்னை-600 041

1 9 8 2

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலைய வெளியீடு எண்—69

முதற் பதிப்பு—1982—1000 பிரதிகள்

© மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலையம், திருவான்மியூர், சென்னை–600 041

விலை : ரூ. 6-00

Published with the Financial Assistance from the
Government of India,
Department of Culture, New Delhi.

# இப்புத்தகத்தில் அடங்கியவை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| **1.** | Introduction | ... | |
| **2.** | பதிப்பாசிரியர் குறிப்பு | ... | I |
| **3.** | நூன்முகம் | ... | ii-xix |
| **4.** | ஆராய்ச்சிக் குறிப்புக்கள் | ... | xx-xxi |
| **5.** | பிழையும் திருத்தமும் | ... | xxii |
| **6.** | குமாரலிங்கர் குறவஞ்சி மூலமும் குறிப்புரையும் | ... | *1—46* |
| **7.** | செய்யுட்களின் முதற்குறிப்பகராதி | ... | *48—54* |
| **9.** | அச்சான குறவஞ்சி நூற்களின் விவரம் | ... | *55—60* |

# INTRODUCTION

The *"Kumaralingan Kuravanci"* on Kumaralingama Nayak, a Chieftain of Nattam, near Madurai in Pandi Nadu, is another conventional Kuravanci dance, attesting to the increasing popularity of Kuravanci dances in the 18th Century A;D.

The present text is based on a single Palm-Leaf Manuscript preserved in the Dr. U V. Swaminatha Iyer Library (No. 354-Catalogue Vol. 1) The manuscript is somewhat damaged. The work is being published for the first time, edited by Sri K. V. Jagannathan the doyen of Tamil literature, assisted by Pandit Balasaranathan. Besides being an addition to the growing list of Kuravanci literature, it throws valuable light on the history of Nattam Chieftaincy.

## HISTORY

The hero of the poem is Kumaralingama Nayak, mentioned in the text as the son of Erradatu Lingama Nayaka. The following historical data, gleaned from the text are worth noting. The Hero belonged to the Sillavaru clan of the Nayaks and had the titles Kumaralinga Bhojan (P. 2) Uddandan (P. 4 L. 50) Garudaketane (whose standard was garuda) etc. and called the ruler of Erisai Country. The text also gives costumes and Jewellery worn by the Chieftain, his personal accomplishments, his retinue, religious persuation and contribution, besides some interesting social beliefs.

Lingama wore the headgear called *Pakai* with *Jarika* (Lace), *Muttondi Kadukkan* (ear ornament), *Sarappani Padakkam* (Pendant) *Tal Todu,* [redacted] *(Araijnan*(Waist Chain) *Motiram* (ring) *Kaiccadant) Tal Todu.* ... *Minci* (Ring worn on foot) *Nijar* (the Pant) *Angiram* (Arm chain)

(Shirt) and Suri (dagger). These illustrate the words used in 18th century, for some of the costumes and Jewels. It is also seen that when the Chieftains went in processions on Elephant's back, women went dancing in front, to the accompaniment of music sung by Nattuvars. Also preceded *Bherika, Ekkalam* (the large pipes) *Purika, Kombu* (horn) *Idakkayam, Suruti* (held on either side) and parasol. There were *Vallayakkarars*, bowmen, *Tadikarar* (club weilders) *Pattanis* on horse back (The Cavaliers are called Pattani ie. Arabs or Musalmans) Dalakarthar, Kanakkar (Accountant) and Maniyakkar as the retinue.

Kumaralingama Nayak is said to be a great devotee of Subrahmanya. He was in the habit of getting up in the early hours of the morning and take bath in the Mukta Nadi, river. After completing his daily rites, he used to pay respect to the Vedic Scholar, Alagar Aiyangar, to whom he gave gifts daily. Later he used to worship in the temple of Kailasanatha and Shanbagavalli and go to his audience hall.

He instituted *Trikala Naivedya* (food offering thrice a day) and the evening worship to *Siva, Mangaibhaga, Agastisvara*, Dvarapathi Thirukkotinatha, and Kailasanatha and also arranged for Nitya and Naimittika festivals and other Kattalais.

Among other interesting details mentioned in the text are the countries like ilam, Singalam, Malacca, Saurashtram, Kampili desa and the wealthy Delhi.

The Kurathi invokes the blessings of several gods and goddesses popular in and around Nattam. Among them are Talaiyatti Vinayaka, Dantimukha Pillaiyar, the Saptamatas of Kantamalai, Mariyammai, Mangalanayika, the Vairava of Sritali (Tirupputtur) Ashta Bhairava of Kodungundram, the Sevakaraya of Singanagar Kengeli, Duvarapati, Solaimalai Karuppan of the 18 steps (Alagar Koil), the Sasta of Manjumalai, Malaiyala Bhagavati, Nallakaruppan, Valli Nayaka and Kumara Velayudha.

The Kurathi also recites the sequence of worship, while fortune-telling is resorted to, giving an insight into this custom. The ground was smeared with cowdung and a kolam design drawn with sandal paste. A Pandal was erected decorated with

flowers, Plantain trees and Marikkolundu. Ganapati Puja was performed with the offering of Modaka, the three fruits (Mango, Plantain and Jackfruit) betel leaves, *Pittu, Ellurundai, Dosai, Aval*, and popcorn. A *Purna Kalasa* was placed on a spread of rice. A new saree *Kantacelai* was placed in front before sooth saying. Viranna, the village Guardian received propitiation with goat sacrifice and Pongal. A *Mudippu* was offered to Nayanmar, and the four directions worshipped. Five pons were set apart for worship and offering of *Dosai* to Alagar of Solaimalai (Alagar Koil). Kantamalai Kanni (Goddess) was then adored. Subrahmanya the family deity of Kumaralingama was worshipped. The Mariyamma was invoked with *Taraku Choru, Punnakku* and *Ilaikkari*. Ankalamman and Virannan were invoked, after which the kurathi told the fortune.

## ABOUT THE HERO

It is possible to date this work, with the help of Mackenzie Manuscripts. A certain Chokkalinga Nayaka of Nattam gave a Kaifiyat to Col. Collin Mackenzie in the year 1805 A.D. (Krodhana year, ref. D. 2831) His father was Kumaralingama Nayak, the hero of this Kuravanci. Kumaralingama is said to be the son of Erradatu Lingama Nayak, through his regular wife Tatammal. The Mackenzie Manuscript gives a detailed account of events that took place in the Chieftaincy of the hero. This nayak first had Anaikuttiya Pillai as his Adhikari to look after the affairs of the Chieftaincy. One Chokkaiya Pillai succeeded Anaikuttiya Pillai and this new officer proved treacherous. During that period, Hazarat Navab (Muhammad Ali) gave the Madurai Governorship to Khan Sahib, who later turned against the Navab, whereupon the Navab planned to march against Madurai. Yussuf Khan Seheb, induced Chokkayya Pillai to join his camp and through him sought the help of Kumaralingama Nayak, to close down the Nattam pass to the Navab. The Nayak refused to go against his master, the Navab. Yussuf Khan promised the rule of Nattam chieftaincy to Chokkayyapillai for his help and also hang the Nayak. Chokkayya Pillai captured Velangudi and Tattaneri and marched against Kumaralingama Nayak. The Nayak escaped to Sivaganga from where he later went to Trichy and met the Navab. The Nattam country was captured by Chokkaya Pillai, who tried

to establish his own rule; but the people deserted the country. Whereupon he tried to set up a Tottiya Nayak as the head, which also failed. He set up another pretender and ruled the Nattam territory for six months. The Navab helped Kumaralingama to regain Nattam with the assistance of Puchi Nayak. Yussuff Khan retreated. Chokkaya Pillai was captured and beheaded and the Nayak regained peace for some time.

Kumaralingama had seven consorts. The first three regular wives died after begetting a son each. The fourth, a concubine was very young (She was the mother of Chokkalinga Nayak, who gave this document to Mackenzie) After some persuation Kumara Lingama married the three daughters of Kamakshi Nayak of Iluppur. This started further conspiracies. Efforts were made to secure the Nattam Chieftaincy to the son of Meenammal (the Seventh wife of Kumaralingama) one of the daughters of Kamakshi Nayak. Kumaralingama used to visit and stay with each wife in turn. When he went to Meenammal's house attempts were made by her and her brothers to kill Kumaralingama who escaped to a nearby house and locked himself in. The efforts of the Traitors to open the door failed. In the meanwhile the people came to know of the treachery and marched to Meenammal's house and released the Nayak. Meenammal was excommunicated and her brothers were sent out of the country. Kumaralingama settled the order of succession and died. He was succeeded by his son Muthulingama Nayak, who had a brother Subbuswami Nayak, who died, due to a treachery.

## THE DATE OF THE WORK

The above accounts of Mackenzie manuscripts clearly show that Kumaralingama Nayak, the son of Erradatu Lingama Nayak, is identical with the hero of this Kuravanci. There is also a reference to Subbuswami, his son (P. 46 L. 72) who died later. It is therefore likely that this work was composed when Kumaralingama was at the height of his power and before his trouble with Yussuf Khan.

Muhammad Yussuf Khan was an officer under the British East India Company, who was sent to Madurai in 1756 A.D. to restore order. Yussuf Khan soon became powerful and turned against the

Nawab and the British, in 1763. In 1764 he was captured and hanged by the British. *(Madurai through the ages of* Devakunjari — P. 212) The trouble Kumaralingama Nayak had with Yussuf Khan, should be assigned to 1764 A.D. The present work "Kumaralingama Nayak Kuravanci' should have been composed before this trouble in 1764 and may be assigned to circa 1760 A.D. Thus this work would be later than the Kumbesa Kuravanci (1735 A.D.) and earlier to the Sarabhendra Raja Kuravanci (1825 A.D.)

## THE AUTHOR

The name of the author of this Kuravanci is not known. Another Tamil work called 'Kumaralingaman Kadal' has been published recently by the Tamil Nadu State Department of Archaeology. (Kadal Kottu—Editor—M. Rajendran—Madras—1981) It is seen that the hero of that work is identical with Kumaralingama (the son of Erradatu Lingama), the hero of this Kuravanci. The Colophon of the work gives the name of the poet as 'Venbapuli' ie., Tiger among composers of Venba. It is possible that the author of the present Kuravanci was also the same Venbapuli.

It is learnt from the few hints preserved by Dr. U. V. Swaminatha Iyer, that the poet Venbapuli, hailed from Manappaceer Village, Melur Taluk, Madurai district and that he belonged to the *Saiva Pandara caste. He is said to have received the patronage of* the Chieftains of Nattam, Pudukkottai, Ramnad and Sivaganga. He has a poem on Raja Raghunatha Nayak Kalandai Kumara Velayuda of Kumaravadi. He has also a poem in *praise* of a *Muslim* donor, Meera Pillai. A certain verse composed by him was inscribed on a stone and placed at the gates of Nattam palace of Lingama Nayak. Bodaguru the chieftain of Sivaganga, and the *zaminder of Ettayapuram were also celebrated* by this poet Venbapuli (Ref. Tanicceyyut Cintamani—P. 246) Another Tamil work by name "Sivagangai Rajendra Bhupati Kadal' included in the above publication *'Kadal Kottu' is on Bodaguru, the Sivaganga* ruler praised by this Venbapuli. It is not unlikely, that the work 'Sivagangai Rajendra Bhupati Kadal' was also by this Poet Venbapuli.

In the village of Nattam, *once the capital of this* Nayak, remnants of the Nayak's palace and the famous Kailasanatha

temple are still in existence. The palace is in ruins, only a few high walls are standing. The Kailasanatha temple is interesting. It bears early inscriptions from which we learn Nattam was originally a Brahmin settlement-Agara Brahma deya named Sundara Chola Ceturvedi Mangalam, situated in Tuvarapati Nadu, obviously established by the Chola Pandya viceroy Sundara Chola Pandya, the son of Rajendra Chola (11th Cent. A.D.)—Inscriptions of Maravarman, Sundara Pandya, the conqueror of Chola Nadu, of the 13th Century A.D. are also found in the temple, which call Lord Siva of the temple as Kailasamudaiya Sivaprakasesvara Nayanar. It is now called Kailasanatha Temple the name by which it is referred to in the Tamil Kuravanci. The goddess is called Shanbagavalli Amman.

The Mandapas in front of both the Siva shrine and Shanbagavalli Amman carry mural paintings. The paintings in the Siva Shrine carry the portraits of Lingama Nayaks besides the representations of several sacred Saivite and Vaishnavite shrines. One of the portrait carries a Label, reading "Sokkalingama Nayudu Sada Seva." Evidently it is the portrait of one of the predecessors of Kumara Lingama Nayak the hero of this Kuravanci. From Makcenzie manuscript it is learnt that Kumaralingama's father, Erradatu Lingama was preceded by one Tonti Lingama whose father was Chokkalingama Nayak, who may be assigned to 1700 A.D. Among the shrines depicted in the painting is the temple of Goddess Meenakshi and Sundaresvara of Madurai in which the Mukkuruni Ganesa is also shown. It is known that the Mukkuruni Ganesa was installed by Thirumalai Nayak of Madurai around 1650 A.D. The Nattam paintings are therefore later than 1650 and earlier than 1750 the age of Kumaralingama. It is interesting to see in the painting the Nayak is portrayed adoring Subrahmanya. The Kuravanci mentions the great devotion the Lingama family had towards Lord Subrahmanya. Interestingly the painting on the ceiling of the Mandapa of Amman Shrine depicts the birth of Subrahmanya, Kumarasambhava.

RAGAS

The author makes use of only the following well known ragas and does not use any of the decidedly Northern Indian

# பதிப்பாசிரியர் குறிப்பு

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்த்தாய்க்கு அரும்பெருந் தொண்டு செய்த புலவர்களின் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் முதலிடம் பெறத்தக்கவராவர் ஐயரவர்கள், பெருங் காப்பியங்களாகிய சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலியவற்றின் ஏட்டுச்சுவடிகளைக் கண்டெடுத்து விடாமுயற்சியால் அச்சிட்டுப் புத்தக உருவில் என்றும் அழியாவண்ணம் செய்தார்கள். அதற்காகத் தம் வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு இடமாகச் சென்று அலைந்து ஓலைச்சுவடிகளைத் தேடி எடுதது ஆராய்ச்சி செய்து சிறந்த முறையில் பதிப்பித்தார். இளமை முதற்கொண்டே தமிழார்வ மிகுதியால் தக்க ஆசிரியர்களிடம் சென்று ஐயந்திரிபறத் தமிழைக்கற்று மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் தலைசிறந்த மாணாக் கராய் விளங்கினார் ஆழ்ந்த அறிவும், ஆராய்ச்சிநோக்கும் அமையப் பெற்ற ஐயரவர்கள் நம் முன்னோர்கள் வைத்திருந்த தமிழ்ப் புதையலைத் தேடி நம்மிடையே இன்று நிலவி அரச்செய்தார்கள்.

ஐயரவர்களுடைய தொண்டு அவருக்குப்பின்பு ஐயாவர்கள் குமாரர் அமரர் கலியாணசுந்தர ஐயரவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, திருமதி. ருக்மிணிதேவி அவர்களால் திருவான்மியூரில் ஐயரவர்கள் பேரில் ஒப்பற்றதொரு நூல்நிலையம் நிறுவப்பெறறுச் செவ்வனே நடந்து வருகிறது.

இந்நூல் நிலையத்தின் வளர்ச்சிக்குக் காரணகர்த்தாவான சம்ஸ்கிருத சேவாரத்னம் திரு. டி. வி விசுவநாதையர் அவர்கள் அச்சில் வராத தமிழ் நூல்களையெல்லாம் விரைவில் பதிப்பிக்க வேண்டும் என்று அதற்க ஆவன செய்து வருகின்றார். அவரு ருடைய ஊக்கத்தினால் நூல்நிலையம் வளர்ச்சியுற்று வருகிறது என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூல்நிலைய வளர்ச்சிக்காக ஊக்கம் காட்டிவரும் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர். ஆர். நாகசாமி அவர்கள் அச்சாகாத நூல்கள் விரைவில் வெளிவருவதற்குவேண்டிய முயற்சிகளில் ஈடுபட்டு உதவிவருவது பாராட்டற்குரியது.

குறவஞ்சி சம்பந்தமாக நன்கு ஆராய்ச்சி செய்து உதவிய புதுதில்லி திரு. எஸ். ஸ்ரீநிவாஸ அய்யர் அவர்களுக்கு நன்றி.

மத்திய அரசு இப்பதிப்பு வெளிவருவதற்குப் பெருமளவு மானியம் அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்ப்புலவர்களும், ஆராய்ச்சியாளர்களும் இந்நூலைப்பெற்றுப் பயனடைவார்களென்று நம்புகிறோம்.

"குற்றம் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்"

வித்துவான் சு. பாலசாரநாதன்
ஆராய்ச்சித்துறைப் பிரிவு,
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலையம்.

திருவான்மியூர்
1-9-81

## நூன்முகம்

''பிரமன் செந்நாவும் பெரும்புலவர் நாவும்
வரமன்னும் வெண்டா மரையும் - திரமுறவே
மன்னி யுறைவதுபோல் மாணிலடி யேன்நாவும்
துன்னியுறை வாள்கலைமா து''

டாக்டர் ஐயரவர்கள்

குறவஞ்சி, செந்தமிழில் வழங்கிவரும் பிரபந்தவகைகளுள் ஒன்று. தமிழ்ப்பாடல்களை இசையுடன் பாடி அபிநயம் பிடிப்பதாலும், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் இதனுள் அடக்கம் என்பதாலும் நாடகத் தமிழில் குறவஞ்சி ஒரு முக்கிய வகையைச் சார்ந்ததாகும். பன்னிருபாட்டியலில் ''குறத்திப் பாட்டு'' என்னும் ஒரு பிரபந்தத்தின் இலக்கணமாக 'இறப்பு, நிகழ்வு, எதிர்வு, என்னும் முக்காலமும் திறம்படவுரைப்பது குறத்திப் பாட்டே' என்று சூத்திரம் ஒன்று உள்ளது (218). அவ்விலக்கணம் குறத்தி குறி கூறுவதாக இயற்றப்படும் ஒருவகை நூலுக்கு உரியதாகத் தோற்றுகின்றது.

குறத்தி குறி சொல்லுதலும் குறவஞ்சியில் வரும் பலசெய்திகளுள் ஒன்று. கலம்பகத்தில் குறம் என்ற ஓர் உறுப்பு உண்டு. அதன்கண் குறத்தி குறி கூறுதலொன்றே கூறப்படும். ''மீனாட்சியம்மை குறம்'' என்னும் நூலைப்போன்ற சிலவற்றில் குறத்தி குறி சொல்லுதற்கு முன்னும் பின்னும் சிலசெய்திகள் கூறப்படுகின்றன. பன்னிருபாட்டியல் இயற்றப்பட்ட காலத்தில் குறத்திப் பாட்டு என்ற ஒருவகைப் பிரபந்தம் வழங்கி வந்ததென்றும் அதனைப் பின்பற்றி ஓருறுப்பு கலம்பகத்தில் அமைக்கப்பட்டதென்றும் அவ்விரண்டையும் தழுவி இசைப் பாட்டும் கலந்து குறம் என்னும் நூல் தோன்றியதென்றும் அவற்றைப் பின்பற்றி நாடக முறையில் குறவஞ்சி என்னும் நூல் விரிவு பட்டது என்றும் கூறலாம்.

அண்மைக்காலத்தில் மக்களிடையே புத்துணர்ச்சி ஏற்பட்டு, ஏனைய நாட்டிய நாடகங்களைப்போன்று, குறவஞ்சி நாடகமும் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றது. குறவஞ்சியில் குறத்தி முக்கிய பாத்திரப்படைப்பாக இருப்பதால் குறவஞ்சி நாடகம் என்று பெயர் ஏற்படலாயிற்று.

திருக்குற்றாலக் குறவஞ்சி, கண்ணப்பர் குறவஞ்சி முதலிய நூல்களைக் கவனிக்குங்கால் ஒருகாலத்தில் குறவஞ்சி நூல்கள் பக்தியையே அடிப்படையாகக் கொண்டிருந்தன என அறியலாம். காலப் போக்கில் குறவஞ்சி நாடகங்கள் தெய்வத்தன்மை குறைந்து

மானிடர்களைத் தலைவர்களாகக் கொண்டு தோன்றின முதலாம் இராசராச சோழன் உலகம் போற்றும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலைக் கட்ட ஆரம்பித்தபோது அம்மன்னனது செயற்கரிய செயல், மக்களின் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்து மன்னனிடம் பெருமதிப்பை உண்டாக்கியது. இராசராச சோழன் கோயில் கட்டும்போது நிகழ்ந்த சுவையான சம்பவங்களைக் கொண்டு இராசராசேசுவர நாடகம் என்ற நாடக நூல் தோன்றிற்று. கி.பி. 1055 ஆம் ஆண்டு கல்வெட்டிலிருந்து தஞ்சைப் பெரிய கோயிலில், வைகாசித் திருவிழாவின்போது இராசராசேசவர நாடகம் நடிக்கப்பட்டு வந்ததாகத் தெரிகின்றது. சரபோஜி அரசர் (கி.பி. 1800-1832) நாடகத்தின் தலைவராக அமைக்கப்பெற்றுச் சரபேந்திர பூபால குறவஞ்சி என்னும் நூல் தோன்றியது.

நாடகப் பிரபந்தங்கள்:—

பழைய தமிழ் இலக்கியங்களில் திருக்குறளில் உள்ள காமத்துப் பால் முழுவதும் கூற்றுவகையாக அமைந்ததாதலின் அப்பகுதியை நாடக இலக்கியத்தின் பாற்படுத்தினர். அறந்துறைகளைப் பொருள் தொடர்படக் கோத்துப் பிற்காலத்தார் அமைத்த திருச்சிற்றம்பலக் கோவையார், பாண்டிக் கோவை முதலிய கோவை நூல்கள் இன்பச் சுவை ஒன்றையே பொருளாகக்கொண்டு எழுந்த நாடகப் பிரபந்தங்கள். அவ்வாறே மற்றப் பிரபந்தங்களுள் குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம் என்பவற்றையும் நாடக வகைகளுள் சேர்த்தல் பொருந்தும். சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம், முக்கூடற் பள்ளு நாடகம், நொண்டி நாடகம் என்னும் பெயர்களே இவை நாடக வகைகள் என்பதைத் தெரிவிக்கும். குறவஞ்சியைச் சார்ந்து குளுவ நாடகம் என்ற வகையும் உண்டு.

பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் சிறந்த சிவத்தலங்கள் பலவற்றில் விசேடகாலங்களில் நாடகம் நடத்தி வந்தார்கள். ஆகவே, தலசம்பந்தமான கதைகளை நாடகமாக்கி நடத்துவது அக்கால வழக்கமாக இருந்தது. திருக்கழுக்குன்றத்தில் சுரகுரு நாடகமும், மயிலாப்பூரில் பூம்பாவை விலாசமும் நடத்தி வந்தனர். வேறு சிவத்தலங்களில்குறவஞ்சி நாடகத்தை நடத்தினர்.

இந்த நாடகப் பிரபந்தங்கள் பெரும்பாலும் புனைந்துரை வகையைச் சார்ந்தன. ஒரே மாதிரியான அமைப்புடையன. ஒரு குறிப்பிட்ட சரித்திரச் செய்தியையோ, கதையையோ ஆதாரமாகக் கொண்டு எழுந்தனவல்ல.

**குறவஞ்சி இலக்கணம்:—**

குறவஞ்சி என்பது குறத்திப்பாட்டு என்றும் கூறப்படும்.

''இறப்பு நிகழ் வெதிர்வென்னு முக்காலமும்
திறம்பட வுரைப்பது குறத்திப்பாட்டே''

என்று 'பன்னிரு பாட்டியல்' சூத்திரம் (218) குறத்திப் பாட்டுக்கு இலக்கணம் கூறுகிறது. முக்காலமும் நோக்கிக் குறி சொல்லும் செய்தி ஒன்றே இச்சூத்திரத்தால் பெறப்படுகிறது.

தொடர்நிலைச் செய்யுட்களின் இலக்கணமாகத் தொல்காப்பியம் கூறும் வனப்பு எட்டனுள் ஒன்றான 'விருந்து' என்பதன் இலக்கணம்

''விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே'' (தொல். செய். சூ. 231) என்பதாகும். பல புதிய செய்திகளும் தொடர்ந்து வரலாம் என்று இந்நூற்பாவின் கருத்து. பல சிற்றிலக்கிய வகைகளுக்கு அடிகோலியது. அவ்வகையில்

''கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
ஓட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்'' (தொல்.

களவியல். 115) என்று தொல்காப்பியர் கூறும் குறிவகையினை அடியொற்றிப் பல புதிய மாறுபாடுகளுடன் குறவஞ்சி என்னும் நாடக நூல் தோன்றிற்று எனலாம்.

''குறத்திப் பாட்டே கூறும் இலக்கணம்
தலைவன் உலாவரத் தையலர் காமுறல்
மோகினி வரவு மொழிதல் உலாவந்த
தலைவனைக் கண்டு தான் மயங்குறுதல்
உவாமதி முதலிய உவாலம் பனத்தைப்
பாங்கி உற்றது என்என வினவல்
தலைவி பாங்கியோடு உற்றது உரைத்தல்
பாங்கி தலைவனைப் பழித்துக் கூறல்
தலைவி தலைவனைப் புகழ்ந்து கூறல்
தலைவி பாங்கியைத் தூது வேண்டல்
தலைவி சகியொடு தலைவன் குறிகூறல்
குறத்தி வரவு கூறல் தலைவி
குறத்தியை மலைவளம் முதலிய வினவல்
குறத்தி நிலவளம் மலைவளம் கூறல்
தலைவன் குலவளம் நிலவளம் சாற்றல்
குலமகள் குறத்தியைக் குறிகேற வினவல்
குறத்தி தெய்வம் பராவல் அக்குறிதேர்ந்து

நல்வரவு நவிலல் தலைவி பொருள் நல்குதல்
குறவன் வரவு புள்வரவு கூறல்
கண்ணி குத்தல் கான்பறவை படுத்தல்

இவ்வகை உறுப்பெலாம் இயையப் பொருந்திக்
கலித்துறை அகவல் கழிநெடில் விருத்தம்
கலிவிருத்தம் வெண்பா தரவு கொச்சகம்
பதமுதல் சிந்து பாடுதல் வேண்டும்''

என்று ''பிரபந்த தீபம்'' என்னும் இலக்கண நூல் குறத்திப் பாட்டுக்கு இலக்கணம் கூறுகிறது.

''பவனிமின்னூர் கூட்டமயற் பாவைவரல் கண்டு
திவளாரநீக்கியெதிர் செவ்வே - ளவனுறுப்புக்
கூறலரன் கூடல் குறியகவ னுடபிற
சோறல் குறியறி சிந்து' (பிரபந்தத்திரட்டு, 18)

என்று குறியறிசிந்தின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது பாட்டுடைத் தலைவனைக் காமுற்ற தலைவியொருத்தியைக் கண்டு குறத்தி குறி கூறுவதாக அமைவது மரபு அந்த மரபைப் பின்பற்றி எழுந்த பிரபந்தத்தில் தலைவன் பவனி வருதல், அதனைக் கண்ணுற்ற தலைவி மையல் கொள்ளுதல், குறததியின் வருகை, குறத்தி குறி சொல்லல், குறவன் குறத்தி காதல் முதலிய நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

குறத்திப் பாட்டு என்பது, பிற்காலத்தில் இலக்கிய மேன்மை பெற்று 'குறம்' என்றும் 'குறவஞ்சி' என்றும் இருவகையாக உருவாயிற்று.

குறம்:—

குறத்தில் கூறப்படும் பொருளாவது, மக்கட் பெண்டிருள் ஒருத்தி, கடவுள் தலைவனைக் கண்டு காமுற்ற பாடாண் பகுதியாகும் ஒருவனுடைய கீர்த்தியையும், ஆற்றலையும், கொடையையும், தண்ணளியையும் தெரிந்து சொல்லுதல் பாடாண் துறையாகும். ஒரு பெண் தலைவனைக்கண்டு காமுற்று, அத்தலைவனது திருத்தோளைச் சேர்தல் தனக்கு வாய்க்குமோ என்று வருந்தி நிற்கும் பருவத்து, குறத்தி, ஒருத்தி தோன்றி குறி சொல்லத் தொடங்கி 'இன்ன இன்ன குறிகள் நிகழ்கின்றனவாதலால், நீ கருதியவாறு தலைவனைக் கூடுதல் விரைவில் வாய்க்கும்' என்று கூறுவதே குறம் கூறும் பொருள்.

கலம்பகங்களில் வரும் 'குறம்' என்னும் உறுப்பின் தலைப்பில் வரும் செய்யுட்களைப் பார்த்தால், அவை தலைவியால் காதலிக்கப்

பட்ட தலைவன் யார் என்றும், அவனைக் குறிப்பிட்ட காலத்திற்குள் தலைவி அடைவது உறுதி என்றும் குறத்தி குறிதேர்ந்து கூறுவதாகப் பாடப்பட்டிருத்தல் தெரியவரும்.

> ''குழகர் மகற்கு மகள்கொடுத்த
> குடியிற் பிறந்த குறமகள் யான்''

என்று குறத்தி தன் குடிப்பெருமையைக் (காசிக் கலம்பகம், 64) கூறுதலும்

> ''முறத்தி விட்ட நெல்லை
> வகுத்துப் பார்த்துக்குறி கூறுவேன்''

(திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம், 74) என்று தன் ஆற்றலையும், வழக்கத்தையும் கூறுதலும்,

> ''என்குறி பொய்யல்ல
> பொய்ப்பன புன்சமயத்து ஏதிலர் தம்மொழி''

(திருக்கலம்பகம்,60)என்று தன் சமயத்தை உயர்த்திப்பேசுதலும்,

> ''ஒன்று மூன்று நாமு ரைக்க வந்து கேளு மரிவைமீ
> றுதய மான சுளகு நெல்லு மொற்றை பட்ட தாதலாற்
> கன்று மானு மழுவு மாக வொருவர் வந்து தோன்றினார்
> கண்ட மட்டி லேக றுப்பர் கைக்க பால ரவரையுஞ்
> சென்று நாடி லருணை மீது காண லாகு நாமமுந்
> தேவ ராய ரவர லாது தெய்வம் வேறு கண்டிலேம்
> நின்று வாடு மிவட னாசை யிடர்த விர்ப்ப ராதலா
> னீறு கொண்டு மூன்றி ரேகை நெற்றி மீதில் எழுதுமே''

(திருவருணைக் கலம்பகம்,50) காதலிக்கப்பட்ட தலைவன் யார்? என்பன போன்ற பல செய்திகளையும் கூறுதலையும் குறம் என்னும் உறுப்புச் செய்யுட்கள் அறிவிக்கின்றன. இவ்வகைச் செய்திகளையே சற்று விரிவாகக் கூறுவது குறத்திப்பாட்டு என்னும் சிற்றிலக்கியம் என்பர். இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலத்தும் நிகழ்வனவற்றை அறிந்து, குறத்தி திறமையாகக் குறியுரைப்பதனைப் பாடுவதே குறத்திப் பாட்டாகும். அஃது உழத்திப் பாட்டைப்போலப் (பன்னிரு. சூ. 218) பத்தே பாடல்களால் (பா. அல்லது பாவினம்) பாடப்படுதற்கு உரியதாகும். மீனாட்சியம்மை குறம், மின்னொளியாள் குறம் என்பவை, மேற்கூறிய இலக்கண அமைதி பெற்று எழுந்த நூல்கள்.

குளுவ நாடகம்:—

குளுவ நாடகம் என்ற ஒருவகை நாடக நூல் உண்டு. (குளுவன்-மலைவாணருள்ளே ஒருவகைச் சாதியான்) அந்நூல் நடிப்பதற்கென்றே தோன்றியது. இதில் குறவன், குறத்தி இவர்களுடைய வாழ்க்கைப் பகுதிகள் நாடக முறையில் விளக்கப்பட்டுள்ளன. மீனாட்சியம்மை குறம் போன்ற இலக்கிய அமைப்போடு குளுவ நாடக அமைப்பும் ஒன்றுகூடியே 'குறவஞ்சி நாடகம்' தோன்றியுள்ளது என்று ஊகிக்கலாம்.
பிரபந்தத் திரட்டு என்னும் நூல்

''குறவஞ்சிக் கொருகூறு குளுவநா டகமே
குளுவன்வரல் பறவைசிலே கல்வரவு சிக்கல்
உறுசிலஞர் செய்வேட்டஞ் சிலவன்றிச் சிக்கா
தோடலுக்குக் கற்பனையே களியன்வினை யாட்டே
துறுமலர்கொய் திடல்பிறவே சிங்கிதனைத் தேடல்
சொல்லுமுள்ளூர்த் தருவதற்குச் சொல்லுமூ லிகையே
அறைமணிமந் திரங்காட்டங் காணனின் றேச
லாஞ்சரணு தொடிமங்கள முன்னாக் கூறே''

(பி.தி.ஒ. 477) என்று குளுவ நாடகத்திற்கு விளக்கம் தருகின்றது. குறத்தில் குறத்தியின் கூற்று மாத்திரம் கூறப்படும். குறவஞ்சியில் குறவன், குளுவன், நூவன் முதலியவர்களின் கூற்றுக்களும் தொழில் திறங்களும் பலபடப் பாராட்டிக் கூறப்படும்.

குறவஞ்சி நாடகத்திற்குப்பின் தோன்றியது குளுவ நாடகம் என்று கொண்டால் குறவஞ்சி நாடகத்தில் இடம் பெற்ற செய்திகள் அனைத்தும் குளுவ நாடகத்திலும் இடம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறின்றிக் குளுவ நாடகம் மிகவும் சுருக்கமான அளவில் குறவன் செயல்களை விவரிக்கின்றது. கூர்ந்து நோக்குமிடத்து, குறவஞ்சியில் முன்னைய இலக்கியங்களில் கூறப்பட்ட பல செய்திகளே சற்று விரிவான முறையில் இடம் பெற்றிருக்கின்றன. ஆகவே, குளுவ நாடகத்தைப் பின்பற்றியே குறவஞ்சி தோன்றியிருக்க வேண்டும்.

குறவஞ்சியின் செய்யுள் அமைப்பு:—

வெண்பா, கலித்துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் போன்ற இயற்றமிழ்ச் செய்யுட்களுடன் சிந்து, கீர்த்தனை, தரு போன்ற இசைப்பாடல்களும் விரவி வருமாறு இயற்றப் பெறுவது குறவஞ்சி நாடகம், குற்றாலக்குறவஞ்சியில் பாத்திரங்களுக்கு ஏறப நடை மாறுபடுகிறது. குறவன், குளுவன் போன்றவர்கள்

'வதைக்குது', 'உதைக்குது', 'குத்தலையோ' போன்ற கொச்சை மொழியில் உரையாடுகின்றனர். நாட்டு மக்கள் மொழியில் நூல் இயற்றும் வழக்கம் தொல்காப்பியர் காலத்தும் உண்டு (தொல் செய். சூ. 242)

வசந்தவல்லி போன்ற உயர்நிலையில் உள்ளவர்கள் செந்தமிழில் பேசுகின்றனர். உலக அனுபவம் முற்றிய குறத்தியோ நாட்டு மொழியோடு செந்தமிழும் இடையிடையே பேசும் ஆற்றல் பெற்றிருக்கிறாள்.

சரபேந்திர பூபால குறவஞ்சியில் வரும் குறத்தி தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம் முதலிய பிறமொழிச் சொற்களையும் கலந்து பேசும் திறமை பெற்றவள்.

சிதம்பரக் குறவஞ்சியிலும் குறத்தி உலக வழக்குச் சொற்களைக் (லூட்டி என்பதுபோன்ற) கையாளுகிறாள். இவற்றை ஆராயும் போது குறவஞ்சி நாடகம் பொதுவாக நாட்டு மொழியிலும் செந்தமிழிலும் இயற்றப்படுவதற்குரியது என்பது புலப்படும்.

மாத்திரைக்கோல்:—

இக்காலத்துக் குறவஞ்சி நூல்களில் காட்டப்பெற்றுள்ளது போலவே பழைய இலக்கியங்களிலும் குறமகளிர் மாத்திரைக்கோல் ஏந்தி வருவதாகக் காட்டப் பெற்றுள்ளனர். இந்த உண்மையை "வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்'' (குறுந் 298) 'நுண் கோல் அகவுநர்' (அகம். 208) என்பன போன்ற அடிகள் தெரிவிக்கின்றன.

குறவஞ்சியின் கரு:—

தலைவன்மேல் தலைவி காமுறுதல், குறத்தி குறி சொல்லித் தலைவியின் மையலைத் தீர்த்தல் என்னும் கருத்து பழங்காலந் தொட்டே நம் நாட்டில் வழக்கிலும் மொழியிலும் வளர்ந்து வந்துள்ளது. முருகனை வள்ளி மணத்தல், அர்ச்சுனன் அல்லியையும், சுபத்திரையையும மணத்தல் போன்ற,குறிப்பாக, குறிஞ்சி நில மண நிகழ்ச்சிகளிலும் பிற திணை மணங்களிலும் குறத்தியின் திறனைப் பற்றிக் கேள்வியுற்றிருக்கிறோம். சங்க நூல்களில் குறவன், குறத்தி, மலைவளம், குறவர் ஆடும் குரவைக் கூத்து, தினைப்புனங் காத்தல், குறவரிடும் பூசை இவை, என குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கை வரலாறு முழுவதுமே குறிப்பிடப்பட்டுள்ளன நிலம், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று நான்காகப் பிரிக்கப்பட்ட நாள்

முதலே தமிழ் இலக்கணத்தில் ஒவ்வொருநிலத்துக்கும் உரிய கடவுள், மக்கள், கருப்பொருள், உரிப்பொருள் முதலியன வகுக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட விதத்தில் குறிக்கப்பட்ட குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கை சில புலவர்களால் ஒழுங்குபடுத்தப்பட்டது. இதன் சாயலை முதன் முதலில் நாம் குறுந்தொகையில் ஔவையார் பாடலில் காண்கிறோம்.

தலைவன்மேல் காமுற்ற தலைவி அவனையடைய வழிதெரியாமல் வருந்துகிறாள். தலைவியின் வேறுபாடு கண்ட தாய் முதலியோர் அவ்வேறுபாட்டின் காரணத்தைத் தெரிந்துகொள்ள முயல்கின்றனர். நெல்லை முறத்திலிட்டுக் குறி பார்ப்பவளாகிய கட்டுவிச்சியை அழைத்து வந்து கட்டுப் பார்க்கின்றனர். (கட்டுப் பார்த்தலாவது- ஒரு சுளகில் நெல்லை வைத்து அதை எண்ணிப் பார்த்து அவ்வெண்ணின் வழியே அறிந்த செய்திகளைக் கூறல்). கட்டுவிச்சி தெய்வங்களைப் பாடி, கூவியழைத்து, அத்தெய்வங்களின் துணைகொண்டு நிமித்தம் பார்ப்பாள், ஆதலின் 'அகவன்மகள்' எனப்படுவாள்.

குறத்தி ஒவ்வொரு மலையாக வர்ணித்துப் பாடிக்கொண்டே வரும்போது தலைவனது குன்றத்தையும் பாடுகிறாள். உண்மையை எங்ஙனமேனும் அறிவிக்க வேண்டும் என்ற எண்ணங்கொண்ட தோழி அந்த அகவன் மகளை அணுகுகிறாள். தலைவன் குன்றத்தைப் பாடி முடித்து வேறொன்றைத் தொடங்கும் முன் தோழி குறத்தியை நிறுத்தி,

> "அகவன் மகளே, அகவன் மகளே,
> மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்
> அகவன் மகளே பாடுக பாட்டே
> இன்னும் பாடுக பாட்டே, அவர்
> நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே"

(குறுந்தொகை,23) என்கிறாள். "ஏ. கட்டுவிச்சியே இன்னும் பாடுக; நீ பாடிய பாட்டுக்களில, அவருடைய நல்ல நெடிய குன்றத்தைப் புகழ்ந்து பாடிய பாட்டை மீண்டும் பாடுவாயாக" என்கிறாள்.

இந்த அகவன் மகளையே பிற்காலத்தார் குறத்தி என்று கூறுவர். நெல்லைக்கொண்டு குறத்தியால் கட்டுப் பார்ப்பதும், வேலனைக் கொண்டு கழங்கினால் கட்டுப் பார்ப்பதும் தொல்காப்பியத்தில்

> "கட்டினுங் கழங்கினும் வெறியென விருவரு
> மொட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்" (களவு, 24)

என்று கூறப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அகநானூற்றிலும், நற்றிணையிலும், குறிஞ்சிப் பாட்டிலும், பெருங்கதையிலும் இந்தக் கட்டுப்பார்க்கும் வழக்கம் கூறப்படுகிறது. பின்னர் வந்த இலக்கியங்களில் திருமங்கை யாழ்வார் அருளிய சிறிய திருமடலில் (20-22)

''கட்டுவிச்சி கட்டேறச்
சீரார் விதிர்விதிரா மெய்சிலி ராக்கை மோவா
பேராயிர முடையான் என்றாள்' என்று கூறுவதைக் காண் கிறோம். பிற்காலத்தில் குமரகுருபரர் இயற்றிய 'மீனாட்சியம்மை குறத்தில்,

''முந்நாழி முச்சிறங்கை நெல்லளந்து கொடுவா
முறத்திலொரு படிநெல்லை முன்னேவை யம்மே
இந்நாழி நெல்லையுமுக் கூறுசெய்தோர் கூற்றை
யிரட்டைபட வெண்ணினபோ தொற்றைபட்ட தம்மே
உன்னுமுன் வேள்விமலைப் பிள்ளையார்வந் துதித்தார்
உனக்கினியெண் ணினகரும மிமைப்பினிற்கை கூடும்
என்னுணை யெங்கள்குலக் கன்னிமா ரறிய
எக்குறிதப் பினும்தப்பா திக்குறிகா ணம்மே''

என்று விரிவாகக் குறத்தியின் செய்திகள் கூறப்படுகின்றன. மேற் சொன்னவைகளிலிருந்தும், பிற்காலத்தில் தோன்றிய கலம்பகத்துள் அமைந்த குறம் என்னும் உறுப்பாலும் இச்செய்திகள் புலனாகின்றன.

ஆகவே மலையையும், மலையைச் சார்ந்த இடத்தையும் பின் புலனாகக்கொண்டு, குறிஞ்சிக் கடவுள் குறவர், விலங்கு, புள், உணவு இவைகளைத் துணைப் பொருளாக அமைத்துக்கொண்டு, மானிடப் பெண் ஒருத்தி கடவுட்டலைவனைக் காமுற்று மையலடைந்து இருக் கையில் குறத்தி தோன்றி நிமித்தவகைகளால் ஆராய்ந்து, தான் காதலிக்கும் மணாளனைச் சேரும்பேறு வாய்க்குமென்று தலைவியைத் தேற்றுவிப்பதைப் பொருளாக அமைத்து, நாடக நயம் தோன்ற புனையப்பட்ட பிரபந்தம் குறவஞ்சியாகும்.

குறத்திலும், குறவஞ்சியிலும் பேசப்படும் தலைமைப் பொருள் ஒன்றுதான். குறம் என்னும் இலக்கியப் படைப்பு முன்தோன்றிக் காலப்போக்கில் அது நாடக அழகுகள் அமைதிகள் பலவற்றை யேற்று, குறத்தியுடன், இதர பாத்திரங்களையும் உட்புகுத்தி விரிவு பட்டுக் குறவஞ்சி நாடக உருவில் தோன்றியது எனத் தெரிகிறது.

பிற்காலத்தில் தமிழகத்தில நடிக்கப்பெற்ற நாடகங்களில் கணபதி வருதல், கட்டியக்காரன் வருதல், மோகினி வருதல், முதலியன முதலில் அமையும். அம்முறையைப் பின்பற்றியே குறவஞ்சி நாடகமும் தொடங்கப் பெறுகின்றது.

காப்பு, மங்களம் கூறப்பெற்றபின் கட்டியக்காரன் வருதலும், பாட்டுடைத் தலைவன் பவனிவருதலை அவன் கூறுதலும் குறவஞ்சி யின் முதலில் சிலவற்றில் அமைக்கப்படும். சில குறவஞ்சிகளில் கணபதி வருகை கூறப்படும். தலைவியின் பெயரைக் குறவஞ்சி ஆசிரி யர்கள் பலவிதமாகக் கூறுகின்றனர். அவற்றுள் சில வருமாறு:— மதனவல்லி, வசந்தவல்லி, காமரசவல்லி, தெய்வமோகினி, மோகினி, இராசமோகினி, மதனரதி, மோகனவல்லி, மோகனாங்கி என்பனவாம்.

கும்பேசர் குறவஞ்சி, சோலைமலைக் குறவஞ்சி, பெத்லஹாம் குறவஞ்சி ஆகிய மூன்று குறவஞ்சிகளிலும் காபபுச் செய்யுட்களைத் தொடர்ந்து 'தோடயம' இடம் பெறுகிறது. குமாரலிங்கர் குறவஞ்சியிலும் காப்புச் செய்யுட்களைத் தொடர்ந்து தோடயம்' இடம் பெற்றுள்ளது.

தலைவனைக் காமுற்ற தலைவி விரக வேதனையால் மன்மதனையும், சந்திரன், தென்றல், குயில் முதலியவற்றையும் நிந்தித்துப் புலம்பல் பற்றிய செய்திகள் வருகின்றன. பாட்டுடைத் தலைவனை விளித்து இரங்குதல் திருவாரூர்க குறவஞ்சியில் குறிககப்பெற்றுள்ளது.

தலைவியின் பாங்கி வருதலும், அவளைத்தலைவி தூது போக்கலும், அப்பொழுது குறத்தி வருதலும அவளுடையஇயல்பும, அவளுடைய வரவைப் பாங்கி தலைவியிடம் கூறுதலும, தலைவி அக்குறத்தியை அழைப்பித்தலும், அவள் வந்து வாசல வளம் கூறுதலும் காணப்படு கின்றன. சில குறவஞ்சிகளில் வாசல் வளம் கூறப்படவில்லை.

தலைவி குறத்தியை யாரெனக் கேட்டலும், தேசம், மலைவளம், சாதிவளம் முதலியவற்றைக் கேட்டலும அமைக்கப்படும். சில குறவஞ்சிகளில அண்டகோசங்களின பகுப்பைக் கூறுதல் உள்ளது. குறத்தி தன் இனத்தார் வசிக்கும் மலையின் பெருமையைக் கூறுதல் இடம்பெறுகிறது. ''யார் யாரிடத்தே குறிசொல்லி எவ்வளவுப் பரிசுகளை நீ பெற்றாய்?'' என்று தலைவி கேட்டலும், குறத்தி அவற் றைக் கூறுதலும, தலைவிக்குக் குறி சொலலப் பெற்ற வரிசைகள் இனவையென்று சொல்லுதலும உளளன.

தலைவி தனக்குக்குறி சொல்லவேண்டுமென்று கேட்டலும், குறத்தி தெய்வப் பூசைக்குரியவற்றைச் செய்யும்படி சொலலித தெய்வங்களை வேண்டிப் பினபு குறி சொல்லத் தொடங்கித் தலைவி

பாட்டுடைத் தலைவன்மேல் விருப்பமுற்றதைக் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் சொல்லி அவனது திருவருள் கிடைக்குமென்றும் அவன் உன்னை மணந்து அருள்வான் என்று கூறுதலும் உள்ளன.

மக்களும் குறவஞ்சி நாடகமும்:—

சங்க இலக்கியம் அரசர்களையும், வள்ளல்களையும் பாடியது. சமய நூல்கள் கடவுளைப்பாடின. குறவஞ்சி போன்ற சிற்றிலக்கியங்கள் கடவுளையும், மனிதர்களையும் பாடின. குறவஞ்சி நூல்கள் பாமரமக்களை நினைவிற் கொண்டு தோன்றின என்று கூறலாம். எனவே குறவஞ்சி நூல் மக்கள் இலக்கியம்.

இயற்கை வருணனைகளில் புலவர்கள் மிக்க ஈடுபாடுகொண்டவர்கள். குறவஞ்சி பாடும் புலவர்கள் இயற்கையை வர்ணிப்பதில் மிகவும் நாட்டங்கொண்டவர்கள். தெய்வத்தைத் தலைவனாகக் கொண்ட குறவஞ்சி நூல்கள் அத்தலத்தின் இயற்கையின் சிறப்புக்களைப் புலவர்கள் உள்ளங்கை நெல்லிக்கனியென எடுத்துக்காட்ட நாட்டுவளம், மலைவளம், தீர்த்த மகிமை, நகர்வளம், வாசல்வளம், பறவை முதலானவற்றைப் பாட வேண்டியிருப்பதால், குறவஞ்சி இயற்கையோடு பொருந்திய ஓர் இலக்கியம்.

குறவஞ்சியில் எட்டுச் சுவைகளும் ஆங்காங்கே கையாளப்படுகின்றன. சந்திரன், குயில், மன்மதன் ஆகியவற்றைத் தலைவி விரகதாபத்தால் பழிக்கும்போது அவலச்சுவையைக் காணலாம். குளுவன், நூவன் இவர்களுடைய பேச்சுக்களிலும் பறவைவேட்டையாடுதல் முதலிய இடங்களிலும் நகைச்சுவையைச் சுவைக்கலாம். தலைவியின் வருணனை, தலைவர் பவனி வருதல், பந்தாடல் முதலிய இடங்களில் வியப்புச் சுவை தோன்றுகிறது. தலைவி மயங்கும் சமயத்தில் தோழிகள் படும் தவிப்பில் அச்சச் சுவையையும், தலைவி, தலைவனைக் கண்டு மனம் உருகிப்பாடும் நிலையில் இளிவரல் சுவையையும் சுவைக்கலாம். குறியின் சிறப்பினைக் குறத்தி கூறும்போது பெருமிதச் சுவை கையாளப்படுகிறது. சிங்கன் சிங்கி உரையாடலில் வெகுளிச்சுவை காணப்படுகிறது. குறத்தி தலைவனின் ஊரும், பேரும் இன்னவை என்று குறிபார்த்துச் சொல்லும்போது தலைவிக்கு உவகை ஏற்படுகிறது. ஆகவே, குறவஞ்சி நாடக நூல்களில் எட்டுச் சுவைகளும், பக்திச் சுவையும் இடம் பெற்று ஒப்பற்ற ஒரு சுவைக் களஞ்சிய நூலாகத் திகழ்கின்றது.

குறவஞ்சி நூல்கள் ஒரே மாதிரியான கதைப் போக்கைக் கொண்டவை. ஒரு பெண் தலைவி இறைவன்மீதோ, அல்லது

குறுநில மன்னன் மீதோ காதல் கொள்ளுதலாகும். இறைவனைத் தலைவி காதலிக்கும் பாத்திரமாக ஆகும்போது இறைவன் பரிவாரங்கள் புடைசூழ, பவனிவருவதைக் குறவஞ்சி நூல்களில் காணலாம்.

தலைவி விரகதாபம் தாங்காமல் மன்மதனைப் பழிக்கிறாள். தென்றலைப் பழிக்கிறாள். அவ்வமயம் குறத்தி தோன்றித் தலைவியின் கைரேகையைப் பார்த்துக் குறி சொல்லுகிறாள். தலைவி குறத்திக்கு மனமகிழ்ந்து பரிசுகள் வழங்குகின்றாள். குறத்தி குறிசொல்லும் போது தங்கள் மலைவளம், நாட்டுவளம், சாதிப்பெருமை, தொழிலின் மேன்மை இவற்றைப் பற்றிப் பெருமையுடன் கூறுகின்றாள். சிங்கன் குறத்தியைக் காணாமல், பலவிடங்களில் தேடிக் கண்டுபிடித்துக் கேள்விகளைத் தொடுக்க, குறத்தியும் கேள்விகளுக்கு விடையளிக்கிறாள். இறுதியில் இருவரும் இறைவனை வணங்கிப் பாட்டுடைத் தலைவனையும் வாழ்த்துகின்றனர். சில குறவஞ்சி நூல்களில் இம்முறை வேறுபட்டு வருதலும் உண்டு.

குமாரலிங்கர் குறவஞ்சி:—

இந்நூல் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த நத்தம் என்னும் பகுதியை ஆண்டுவந்த குமாரலிங்க நாயக்கர்மீது இயற்றப்பெற்றது. (நத்தத்திற்கு எறிசை நகர் என்று பெயர்) 'நத்தம் ஜமீனுள்ள நாட்டுக்கு எறிசை' என்று பெயர் என ஐயரவர்கள் குறித்துவைத்துள்ள குறிப்பிலிருந்து அறியலாம். விருத்தம், அகவல் முதலிய செய்யுட்களையும் வசனத்தையும் விரவுவித்துக் கீர்த்தன வடிவாக அமைந்துள்ளது.

பாட்டுடைத் தலைவனுடைய முன்னோர்:—

தமிழகத்தில் நாயக்கர் ஆண்ட அரசாட்சிக் காலம் ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளாகும். இக்காலத்தில் இவர்கள் தமிழகம் முழுவதற்கும் அரசர்களாக இருந்து ஆண்டனர் என்று கூறலாம்.

விசுவநாத நாயக்கர் ஆட்சிக் காலத்தில் (1529-64) தமிழகம் 72 பாளையப்பட்டுகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. பாளையக்காரர்கள் விசுவநாத நாயக்கர் வேண்டியபோது படைகள் அனுப்பக் கடமை பெற்றிருந்தனர். அதற்குப் பதிலாக அவரவர்கள் பிரதேசத்தில் வரிவசூல் செய்துகொள்ள உரிமையையும் பெற்றிருந்தார்கள். வசூலித்த வரியில் மூன்றில் ஒருபங்கு மதுரை நாயக்கர்க்குக் கொடுத்து வந்தனர்.

பாளையக்காரர்கள் காலத்துக்கு முன்பு முஸ்லீம் படையெடுப்பால் பாண்டிய நாட்டு மக்கள் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாயினர்; கொலையும் கொள்ளையும் தலைவிரித்தாடின; பயமும் பீதியும் மக்களை வாட்டின.

இந்த நிலையிலிருந்து மக்களைக் காப்பாற்றியவர்கள் பாளையக்காரர்களும், பாளையப்பட்டுக்களை ஏற்படுத்திய நாயக்கர்களுமேயாம். பாளையக்காரர்களில் பலர் தெலுங்கர். மதுரை மாவட்டத்தில் இருபத்துநான்கு பாளையப்பட்டுக்கள் இருந்தன. அந்தஇருபத்து நான்கினுள் நத்தம் ஒன்றாகும்.

நத்தம்:—

இச்சொல் யாருக்கும் உரிமையில்லாமல் அரசினர் நிலமாக உள்ள மேட்டு நிலப்பகுதியைக் குறிக்கும். பல ஊர்களில் நத்தம் என்னும் பகுதி இருக்கிறது. பாலவநத்தம், கோட்டநத்தம், சாமநத்தம், புத்காநத்தம், சுக்கா நத்தம் என்ற அடைமொழியுடன் கூடிய பல ஊர்கள் இருக்க, இவ்வூர் நத்தம் என்னும் சொல்லையே பெயராகக் கொண்டுள்ளது. இவ்வூர் மதுரையிலிருந்து 35 கி.மீ. தொலைவில் உள்ளது.

பதினாறும் நூற்றாண்டில் விசுவநாத நாயக்கர் நத்தம் சீமையைத் தம் உறவினரான முதலாம் சொக்கலிங்க நாயக்கரிடம் ஆளும்படி ஒப்படைத்தார். ஆங்கிலேயர் ஆட்சியில் அவர்கள் நத்தம் ஜமீன்தார் என்ற பட்டம் பெற்றனர்.

லிங்கம நாயக்கர் மொகலாயப் படையை எதிர்த்துத் தோற்கடித்தார். சொக்கலிங்க நாயக்கர் மனமுவந்து எல்லா விருதுகளும், வெகுமதிகளும் கொடுத்துச் 'சவுடோலில்' (பல்லக்கு) அமரச் செய்து பட்டணப் பிரவேசம் பண்ணுவித்து இருக்கையில், மீண்டும் மொகலாயப் படை எதிர்த்துவர, அவர்களுடன் போராடி விரட்டி அடிக்கவே அவர்கள் சமாதானம் செய்துகொண்டார்கள்.

மதுரைக்கு வடக்குப்பக்கம் துவராபதி நாடான பூமியை லிங்கம நாயக்கருக்குக் கொடுத்துச் சந்திர சூரியர்கள் உள்ளவரை புத்திர பௌத்திர பாரம்பரியமாகச் சுத்தமானியமாக அனுபவித்துக் கொள்ளச் சொல்லி உத்தரவு கொடுத்தார்.

லிங்கம நாயக்கர் துவராபதி நாடான நத்தம் பூமியைக் காடு வெட்டி, கண்மாய், (ஏரி) குளங்கள் முதலியவற்றை உண்டாக்கி, ஊர்கள், கிராமங்கள் முதலியவற்றை ஏற்படுத்தினார். ஒன்பது ஆண்டுக்காலம் அரசாட்சியைச் செவ்வனே நடத்தி விண்ணுலகு அடைந்தார்.

அவருக்குப் பிறகு எரதாது லிங்கமநாயக்கர் பட்டத்துக்கு வந்து சிலகாலம் மக்கள் போற்றும்படி அரசாட்சி செய்தார். அவருக்குப் பின் அவரது குமாரரான குமாரலிங்க நாயக்தர் பட்டத்துக்கு வந்து நன்றாக ஆட்சி செய்து வந்தார். இவர் பேரில் பாடப்பட்ட நூலே குமாரலிங்கர் குறவஞ்சியாகும்.

குமாரலிங்கர் பல கண்மாய்களைவெட்டி நீர்வளம், நிலவளம் மிக்க நாடாகச் செய்தார். மக்களுடைய நலனை தன்னுடைய நலன் என்று நினைத்து அரசாட்சி செய்தார். தமிழ்ப் புலவர்களை நன்கு ஆதரித்தார். வேதத்தின் கரை கண்ட அந்தணர்களைப் போற்றி வந்துள்ளார். கோயில்களில் நித்திய நைமித்திக பூசைகள் செவ்வனே நடக்கும்படி செய்தார்.

பசித்தவர்களுக்குப் பால் பழம், அன்னம் முதலியவற்றைக் கொடுக்கும் தியாகி, முருகனிடத்தில் அளவு கடந்த பக்தியுடையவர் என்பதை,

> ''குமர சரவண குகன்றன் மனதில்
> அமர அருளின் அரசுசெய் லோலன்
> சண்முகர் அருளால் சந்தானம் பெற்றோன்
> கண்மணிப் புதல்வரைக் காங்கேயன் காத்திட
> இன்பமாய் முருகர் இணையடி வணங்கி''

எனவரும் அடிகளால் அறியலாம்.

இந்நூலாசிரியர் இவரை,

> ''புரூரவா எனத்தான் பொருநரைப் பொருத்தான்
> கிரீடிநேர் எனத்தான் கெருடகே தனத்தான்
> பேதைமை கொள்ளான் பின்னுரை விள்ளான்
> மூதுரை எள்ளான் மும்முரசு உள்ளான்
> பகீரதன் எனவே பகரும்உத் தண்டன்
> திகிரிமன் னவன்போற் செலுத்துமாக் கினையான்
> பரதள விபாடன் பல்கலைச் சேடன்
> தரணிஉத் தண்டன் சமர்தெறத் தண்டன்''

என்று பலபடப் பாராட்டுகின்றார்.

அழகரையங்கார் என்ற ஒரு புலவருக்கு இவர் சன்மானம் கொடுத்து ஆதரித்திருப்பதாகத் தெரிகிறது. இப்புலவர் இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சார்ந்தவர். இலக்கண இலக்கியங்களிலும் விரைந்து செய்யுள் இயற்றுவதிலும் வல்லவர். மதுரை மாவட்டத்தில் வழக்கறிஞராக இருந்தவர்.

நூலின் உட்பொருள் :—

கணபதி காப்பு, உமை, சண்முகர், கயிலைநாதர் முதலியோர் வணக்கத்தோடு நூல் தொடங்குகிறது. அடுத்து தோடயம், மங்களம் அமைந்துள்ளன. ஆசிரியர் அகவற்பாவில் பாட்டுடைத் தலைவனது அரும்பெருஞ்செயல்களை விளக்கிக் குமாரலிங்கர் குறவஞ்சியென்னும் இந்நூலைப் பாடுவதாகக் கூறுகிறார். கட்டியக் காரன் 'பராக்' சொல்லி வருகிறான். தோழி வருகிறாள் தலைவி வருகிறாள் (தலைவியின் பெயரே விரகமோகினி). தலைவியின். விரக தாபம் கூறப்படுகிறது.

தலைவி குமாரலிங்கர்மீது காதல் கொள்ளுகிறாள். மாலை நேரம் வருகிறது. சந்திரன் தோன்றுகிறான். தலைவி சந்திரனைப் பழிக்கிறாள். குயில் கூவுகிறது. அதையும் நிந்திக்கிறாள். தென்றல் வீசுகிறது. அதையும் ஏசுகிறாள். பின்பு மன்மதனைத் தூற்றுகிறாள்.

குறத்தியின் வருகை:—

திருமகள் போலச் சிறந்து விளங்குகிறாள். கரிய கூந்தலில் மல்லிகையுடன் முல்லை மலர்சூடி, நெற்றிச் சுட்டி அணிந்து, காதில் பொன்தோடு விளங்க, வயிரமூக்குத்தியுடன், கழுத்தில் முத்துமாலை யும், சங்குமாலையும் இலங்க, மார்பில் சந்தனக் கலவையைப் பூசி, இடுப்பில் ஒட்டியாணம் தரித்து, கைகளில் சங்குவளையல்கள் ஒலிக்க, கால்களில் சிலம்பின் ஒலிகேட்க, ஒருகையில் மாத்திரைக் கோலும், மற்றொரு கையில் குறப்பெட்டியும் கொண்டு, மனதில் முருகன் நினை வாகவே "தாமரையில் உலாவும் அன்னமோ இவள்" என்று எண்ணும்படி குறத்தி வருகிறாள்.

தலைவி, குறத்தியை அழைத்து, சாதி, வாசல், கல்வி, நாடு, மலை, ஐம்பத்தாறு தேசம் ஆகியவற்றின் பெருமைகளைக் கூறுமாறும் குறி சொல்லிப் பெற்ற விருதுகள் எல்லாவற்றையும் சொல்லும்படியும் கேட்க, குறத்தி சிறப்பாக எடுத்துரைக்க பின் தனக்கும் குறி சொல்லும்படி கேட்கிறாள்.

குறத்தி குறிசொல்லும் இடத்தை அலங்கரிக்கும்படியும், கணபதி பூசைக்குப் பாக்கு வெற்றிலை, முக்கனிகள், மோதகம், பிட்டு எள்ளுருண்டை, தோசை, அவல்பொரிகள் முதலியன வைத்து வேண்டிக்கொள்ளுமாறும், பூர்ணகும்பம் வைக்கும்படியும், ஒரு நாழி முத்து அளந்து வைக்குமாறும், புடைவையும் வாங்கி வைத்துக் கும்பிட்டு வேண்டிக் கொள்ளுமாறும் சொல்லி, தன் இஷ்ட தெய்வங்களை வணங்கித் தனக்கு நல்ல குறி சொல்லும்

ஆற்றலை அருளும்படியும் வேண்டிக்கொள்கிறாள். பின்னர் குறத்தி, தலைவியைப் பார்த்து ஒருமாசம், ஒரு பூ, ஒரு ராசி, சொல் என்று கேட்க, தலைவி தனுர் மாசம், தாமரைப்பூ, சிங்கராசி என்று சொல்லுகிறாள்.

குறத்தி தனுர்மாசம் என்று சொன்னதனால் குமாரலிங்க மன்னன் என்றும், சிங்கராசி என்றதனால் எறிசை நகர் மன்னன் என்றும், தாமரைப்பூ என்றதனால் குமாரலிங்க மன்னனையே "நீ மணவாளனாக அடைவாய்' என்றும் கூறுகிறாள்.

தலைவி உன் குறி பலிக்குமா என்று கேட்க, குறத்தி என் குறி பொய்க்காது என்று மறுமொழி பகர்ந்தாள். தலைவி குறத்திக்குத் தக்க பரிசுகள் கொடுக்கிறாள்.

குறத்தி இவ்வாறு இருக்க அவளுடைய கணவனான குறவன், குளுவனோடு வேட்டைக்கு வருகிறான். கண்ணிவைக்கும் முறைகள். அக்கண்ணியில் பறவைகள் வந்து விழும் முறைகள், விளக்கப்படுகின்றன. குறவன் தன் குறத்தியைத் தேடிக்கொண்டு வரக் குறத்தி எதிர்ப்படுகிறாள். அவள் அணிந்துள்ள அணிகளைக் கண்டு வியந்து கேட்கிறான். அவள் குறி சொல்லிக் கிடைத்த பரிசுகள் இவை என்று கூறுகிறாள். இருவரும் ஒன்று சேர்ந்து குமாரலிங்கனை வாழ்த்தித் தங்கள் இடஞ்சென்று இன்பமாக வாழ்கிறார்கள்.

**நூலாசிரியர்:—**

ஆசிரியர் இன்னார் என்று இந்நூலின் மூலமாகத் தெளிவாக அறிய இடமில்லை. ஆயினும் இவர் இயற்றியதாகக் கூறும் "குமார லிங்கன் காதல்" என்னும் நூலில்

> "ஆனினங்கள் வாழிமறை அந்தணர்கள் வாழியவே
> மானபர னசில்ல வார்குலமும் வாழியவே
> காவலன் தென்னெறிசைக் காதிபன் குமாரலிங்கன்
> பூவுலகில் வாழிவெண்பாய் புலிதமிழும் வாழியவே
> பார்வாழி தென்னெறிசைப் பார்த்திபன் குமாரலிங்கன்
> தார்வாழி வாழியவன் சந்ததிகள் வாழியவே"

என்ற அடிகளையும்,

குமாரலிங்கர் குறவஞ்சியிலுள்ள

> "ஆனிரை வாழி மேன்மேல் அந்தணர் வாழி என்றும்
> மாநிலம் வாழி மன்னர் மநுநெறி வாழி வாழி
> தீனரட் சகனும் எங்கள் சில்லவார் குலத்தில் வந்த
> மானவேற் குமார லிங்க மநுபதி வாழி வாழி"

என்ற வாழ்த்துச் செய்யுளையும்; நோக்குங்கால் இரண்டு நூலிற்கும் வெண்பாப் புலி என்னும் புலவரே ஆசிரியராக இருக்கலாமோ என்று கருத இடமிருக்கிறது.

இந்நூலாசிரியர் மதுரையைச் சார்ந்த மேலூர்த் தாலுக்கா மணப்பச்சேரி கிராமத்தில் வசித்த சைவப்பண்டார மரபினர். இவரது இயற்பெயர் தெரியவில்லை. வெண்பாப் பாடுவதில் திறமை யுடையவரா யிருந்தமையால் இயற்பெயர்மறைந்துவெண்பாப்புலி என்னும் காரணப்பெயர் இவருக்கு அமைந்ததுபோலும். இவரைச் சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, நத்தம் முதலிய சமஸ்தானாதிபதிகள் ஆதரித்து வந்துள்ளனர். குமாரவாடி ஜமீன்தா ரிடம் இவர் போயிருக்கையில் அங்கேயுள்ள தமிழ்ப்புலவர்கள் மேற்படி ஜமீன்தார் பெயராகிய ராயரகுநாத குழந்தைக் குமார வேலாயுத நாயக்கர் என்னும் பெயரையமைத்து ஒரு வெண்பா, பாடும்படி சொன்னார்கள். அப்பொழுது அவர் பாடிய வெண்பா

''ராயரகு நாதக் குழந்தைக் குமாரவே
லாயுதா கட்டழகா நன்றாய்நா - ருயிரஞ்
சம்வற் சரநீ தரும்வச் சிரகிரீ
டம்வச் சிரசரீ ரம்''

என்பது. தம்பிப் பட்டி வேலுக்கவிராயர் சிவகங்கைக் கௌரீவல்லப மகாராசா சபையில் இவரையும், இவரது குமாரரையும் சிறப்பித்து சொல்லிய பாடல் வருமாறு

''பொன்னிற்கு மார்பன் வெண்பாப் புலியருளுஞ்
சொக்கலிங்கப் புலவன் கல்வி
பன்னிற்கும் பனுமலைவா யிருக்கவு மற்றுள்
தமிழின் பாவ லோரைப்

பின்னிற்கும் படியே ப்ரசங்கமதிற் கன்னி முன்னும்
பெயரை நாட்டிச்
சொன்னிற்குங் கவிச்சக்ர வர்த்தி யெனப்பெயர்
பெற்றுத் துலங்கி னானே''.

இவர் சிவகங்கையிலிருந்து ஊருக்கு வரும்பொழுது சோழபுரத்தில் மிகுந்த தாகமடைந்தார். அங்கே கடை வைத்துக்கொண்டிருந்த மீராப்பிள்ளை என்னும்ஒரு மகம்மதியரை நோக்கித் தம் பசியைத் தீர்க்கும்படி கேட்டார். உடனே அவர் புலவரது பசியைப் போக்கினார். அப்பொழுது மகிழ்ந்து பாடிய வெண்பா இது.

"இறந்து கொடுத்தான்சீ தக்கா தியிதனைப்
பிறந்து வளர்த்தான்மீ ராப்பிள்ளை - சிறந்த
இவனிருந்து சோழபுரத் தின்றுதவா விட்டால்
சிவனிருந்து மென்னபலனை செப்பு."

இவர் குன்றக்குடிமலையில் ஏறியபோது தவறி விழுந்துவிட்டார். உடனே மிதிலைப்பட்டிக் குழந்தைக் கவிராயருக்கு ஒரு பாடல் எழுதி யனுப்பினார். குழந்தைக் கவிராயர் தம் தண்டிகையை (பல்லக்கு) அனுப்பிப் புலவரை வருவித்து ஆதரித்தார்.

இவர் நத்தம் ஜமீன்தார் லிங்கம நாயக்கருடைய அரண்மனை முகப்பில் கீழ்க்கண்ட பாடலை எழுதிவைத்தார்.

"இம்முடிலிங் கையதுரைக் கேற்ப நடந்தார்கள்
தம்முடிகொண் டேயுலகிற் றும்வாழ்ந்தார்-செம்மைமொழி
தப்பிநடந் தானதற்குச் சான்று பழநியான்
அப்பனெனுந் தொப்பைவீ ரன்"

இங்கு காட்டப்பட்ட ஆதாரங்களால் இவர் நத்தம் ஜமீனை ஆண்டுவந்த லிங்கம நாயக்கரால் ஆதரிக்கப்பட்டிருக்கிறார் என்றும் அறியவருகிறது. இவர் குமாரலிங்க நாயக்கருடைய காலத்திலும் அவைக்களப் புலவராக இருந்து இந்நூலை இயற்றியிருக்கலாம் என்றும் ஊகிக்கலாம்.

இவர் பாட்டுடைத் தலைவரான குமாரலிங்கரை, குமாரலிங்க தீரன் என்றற்போல நிருபன், போசன், ராயன், புரவலன், சுமுகன், தயாநிதி, துரந்தரன் என்று பலபடப் போற்றுகின்றார்.

நூல்நிலையத்தில் அச்சில் வராத தமிழ் நூல்கள் பல இருக்கின்றன. அவற்றுள் ஒன்றான இந்நூலைப் பதிப்பிக்க 354 எண்ணுள்ள ஓர் ஓலைச்சுவடி மட்டுந்தான் உள்ளது. அச்சுவடியும் ஓரங்களிலும், நடுவிலும் ராமபாணப்பூச்சியால் அரிக்கப்பட்டுப் புள்ளிவிழுந்து எழுத்துக்களைத் தெளிவாக அறியமுடியாத வகையில் உள்ளது. மேலும் சிதிலமாவதற்கு முன்பே பிரதிசெய்து ஆராய்ந்து, வாகீச கலாநிதி திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களால் திருத்தப்பெற்று இப்பொழுது பதிப்பிக்கலாயிற்று.

# ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

**தசாங்கம் :** மலை—கரந்தை மலை, நதி—விரிசிலை, நாடு—துவராபதி, ஊர்—எறிசை (நத்தம்), தார்—முல்லை, குதிரை—உச்சைச்ரவஸ் போன்ற தெய்வத்தன்மையும், வீரமும் உடைய குதிரை, யானை—ஐராவதம்போன்ற சிறந்த யானை, கொடி—கருடக்கொடி, ஆணை—திருமால் போன்ற ஆணை, பறை—பேரிகை.

**அணிகள் :** ஆரம், கண்டசரம், கொந்தள ஓலை, கொப்பு, சரப்பணி, தங்கக்கங்கணம், தங்கவளையல், நத்தை, பரிபுரம். பொற்சுட்டி, முத்துமாலை, ரெத்னப்பந்து.

**தெய்வங்கள் :** அஷ்டவயிரவ மூர்த்தி, உமை, ஏழுகன்னித் தாயர், கங்காளி, கணபதி, கயிலைநாதர், சண்முகன், சீதளிவாழ் வயிரவர், செண்பகவல்லி, சேவகராயர், தலையாட்டி விநாயகர் திருக்கோடிநாதர், பதினெட்டாம்படி கறுப்பன், மங்களநாயகி, மலையாள பகவதி, மாதங்கி மாரியம்மை, முருகன், வள்ளிநாயகி.

**ரேகைகள் :** ஊர்த்த ரேகை, கூர்ம ரேகை, சங்க ரேகை, சந்தான ரேகை, மதன ரேகை.

**நதிகள் :** மணிமுத்தா நதி, விரிசிலை.

**மலைகள் :** அருணகிரி, இமையகிரி, கரந்தைமலை, குடகுமலை, கைலாசகிரி, கொச்சிமலை, கொல்லிமலை, சத்யகிரி, சதுரகிரி, சுவாமிமலை, சோமகிரி, சோலைமலை, தோகைமலை, நாகமலை, நீலமலை, பச்சைமலை, படிகமலை, பவழமலை, பழநிமலை, பன்றி மலை, பிரான்மலை, பொதியமலை, மேருகிரி, விராலிமலை, வெள்ளிமலை, வேழமலை.

**மரங்கள் :** ஆரம், இங்கு, இந்துகமதி, இலவங்கம், குங்குமம், குங்குலியம், குந்தம், சந்தனம், சாலம், சுனகம், சோதிவிருட்சம், சோமவிருட்சம், தமாலம், தேவதாரு, நாகம், பிசுமந்தம், ரோமவிருட்சம்.

**தேசங்கள் :** அயோத்தி, அவந்தி, ஆரியம், ஈழம், உச்சினம் ஒட்டியம், கபாடம், கர்நாடம், கலிங்கம், குருதம், குச்சரம், குலிங்கம், கொங்கம், கொல்லம், கொல்லாபுரம், சவுராட்டிரம், சிங்களம், சீனம், துளுவம், தெலுங்கம், பல்லவதேசம், புலிங்கம், மகதம், மராட்டம், மலாக்கா, மலையாளம், மாகதம், வங்கம், வங்காளம், விலாடம்.

**பறவைகள் :** கூழைக்கிடா, கொக்கு, சிறவி, செங்கால்நாரை, தாரா, முத்துக்குளிப்பான்.

**வடசொற்கள் :** அந்தரம் (66), அபிஷேகம் (24), அமிர்த வசனம் (6), அலங்க்ருதம் (6), அவதாரம் (49), அனகன் (34), அஷ்டாங்கயோகம் (30), ஆமலகம் (44), ஆனந்தரூபி (2), ஆஸ்தானம் (30), இங்கிதன் (41), இந்து (72), க்ருபாகரன் (4), கர்ணாவதாரன் (34), கர்த்தன் (66), கனகம் (39), கனகரெத்னம் (76), கிரீடி (6), குவலயம் (10), சங்க்ராமன் (34), சந்தானம் (47), சந்தோஷம் (76), சம்ப்ரமம் (10), சம்ஹார (8), சரவணபவன் (3), சன்னதம் (75), சாயரட்சை (6), சித்தசன் (35), சித்தம் (72), சீதரன் (30), சீலன் (18), சுகந்தம் (6), சுதன் (36), சுந்தரன் (38), சொர்ணம் (47), தமாலம் (39), தனுர்மாசம் (50), தாட்டிகன் (67) தினகரன் (34), தீனரட்சகன் (77), துரந்தரன் (27), துரந்தரிகன் (36). நாரி (46), நித்யவிநோதம் (6), ப்ரகாசன் (5), ப்ரசண்டன் (6), ப்ரபை (6), பஞ்சகதி (6), பரிபால (68), பரிமளம (25), பவுசிய (32), பாரிசம் (52), பாலநன் (2), பிரளயம் (68), புண்டரம் (65), பூத (32), பூபன் (29), பூர்ணகும்பம் (45), மகவான் (47), மகீபதி (13), மந்தரம் (28), ரஞ்சிதம் (43), ராசமார்த்தாண்டன் (6), வச்ர தேகம் (28), வடவானலம் (21), வதனம் (6), வர்த்தம் (32), விருட்சம் (39), விலாஸிதம் (8), வேத்திரம் (7).

**பிறமொழிச் சொற்கள்:** பராக்கு, துரை, நிசார்.

**பழமொழிகள்:** 'தான் திருடன் பிறரை நம்பான்' (76)
'விளக்கிருக்கத் தீத்தேடி' (76)
'உண்ட வீட்டுக்கு ரெண்டகஞ் செய்வாருண்டோ' (76)

## பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 19 | மருமோ | மருவுமோ |
| 2 | 29 | விலமாரன் | வில்மாரன் |
| 3 | 26 | தருசினே | தருச்சினே |
| 4 | 18 | பாதள | பரதள |
| 4 | 32 | பாதளவிபாடன் | பரதளவிபாடன் |
| 4 | 32 | பாதளத்தை | பகைவரது படையை |
| 7 | 11 | கடுக்கணும் | கடுக்கனும் |
| 8 | 16 | விசை | விசைய |
| 12 | 26 | பசுப்பு | பசப்பு |
| 15 | 14 | லிகங்வேள் | லிங்கவேள் |
| 18 | 25 | சிம்லபு | சிலம்பு |
| 21 | 28 | நித்ய சுபசோபனமும் — அம்மே நிதம் முழங்கும் வாசலிது. | |
| 24 | 30 | —லே | பிரான்மலே |
| 25 | 4 | கந்தமலே | கரந்தமலே |
| 26 | 16 | உண்டாகுமே | உண்டம்மே |
| 26 | 18 | டாமே | டம்மே |
| 27 | 5 | வளமுங்கன | வனமுங்கன |
| 27 | 13 | தொகை | தோகை |
| 30 | 16 | சிங்கன | சிங்கன் |
| 32 | 6 | அகுள் | அருள் |
| 32 | 23 | பொருந்துலாய்க் | பொருந்துதலாய்க் |
| 33 | 20 | சம்பள | கம்பள |
| 34 | 16 | யோசன் | போசன் |
| 35 | 18 | வேந்கன் | வேந்தன் |
| 36 | 5 | குமாரவிங் | குமாரலிங் |
| 39 | 11 | சேருகை | சேருதை |
| 39 | 25 | கொட்டம்பட்டி | கொட்டாம்பட்டி |

# குமாரலிங்கர் குறவஞ்சி

## கணபதி காப்பு

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

1 பொன்னணி மார்ப னுைன புகழேறு தாது லிங்க
மன்னவன் மகிழ்ந்து பெற்ற மால்குமார லிங்கப் பேர்கொள்
தென்னவன் மீதி லன்பாய்ச் செய்குற வஞ்சி பாடக்
கன்னியா முமையாள் தந்த கணபதி காப்புத் தானே

## உமாதேவி காப்பு

2 வேலவர் அருளா லிந்த மேதினி யொருகு டைக்கீழ்ப்
பாலநன் குமார லிங்கப் பார்த்திவன் மீதி லன்பாய்க்
கோலமோ கனமாய் வந்த குறவஞ்சித் தமிழைப் பாட
வாலையா னந்த ருபி மாதங்கி காப்ப தாமே.

## கயிலை நாதர்

3 சரவண பவனு மெங்கள் சண்முகன் மலர்த்தாள் போற்றி
வருதுரை குமார லிங்க மன்னவன் மீதி லன்பாய்க்
குருமணி யிமைக்கும் பைம்பூட் குறவஞ்சித் தமிழைப் பாட
அரவணி கயிலை நாதர் அனுதினம் காப்புத் தானே.

## தோடயம் இராகம்: நாட்டை

4 சத்திதர னிருசரண பத்திமற வாதசக்ர
தரனெனும்குமார லிங்க சித்தசன்மே லன்பாய்ச் - செயசெய
குத்துமுலை தளதளென ரத்னவளை கலகலெனச்
கொஞ்சுகிளிக் குறவஞ்சி செஞ்சொல்தமிழ் கூறச் - செயசெய

---

### குறிப்புரை

1. பொன் அணி மார்பன் - பொன்னால் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்துள்ள மார்பினையுடையவன்.
2. மேதினி - பூமி. பாலநன்- காப்பாற்றுபவன். வாலை - அம்பிகை. மாதங்கி - மதங்க முனிவரின் பெண்.
8. குரு - நிறத்தையுடைய. இமைக்கும் - விளங்கும். அரவு - பாம்பு.
4. தோடயம்-நாடகத்தின் தொடக்கத்தில் பாடும் பாட்டு. சத்திதரன்- வேலைத் தரித்த முருகன். சித்தசன்-மன்மதன். செஞ்சொல்-தெளிவாகப்பொருள் விளங்கும் சொல்.

*மத்தமதி பணிகங்கை கொத்தறுகு தளிர்கொன்றை*
*வைத்தசடை யான்மகிழும் உத்தமிதன் பாலா - செயசெய*
*வெற்றிவடி வேலர்துணை பெற்றஅனு கூலரெனும்*
*உத்தமகிரு பாகரரென் னத்திமுக வன்துணையே - செயசெய*

**மங்களம்**

(பல்லவி)

5 *வாதுசொல்வார் சூரனுக்கு வளர்தனகு பேரனுக்குக்*
*கோதையர்வில் மாரனுக்கு மங்களம்;*
*குமாரலிங்க தீரனுக்கு மங்களம்.*

(அநுபல்லவி)

*ஆறுமுகன் நேசனுக்கு அவனியில்ப்ர காசனுக்குக்*
*கூறுவிசு வாசனுக்கு மங்களம்;*
*குமாரலிங்க தீரனுக்கு மங்களம்.*
*முந்துபல வீமனுக்கு மோகமின்னார் காமனுக்குக்*
*கொந்துமுல்லைத் தாமனுக்கு மங்களம்;*
*குமாரலிங்க போஜனுக்கு மங்களம்.*

**அகவல்**

6 *திருமகள் மருவிச் செறிந்திடு மிடமும்*
*மருமோ திமங்கள் வளர்ந்திடு தடமும்,*
*நந்தன வனமும் நயந்திடு புனமும்,*
*வந்தனு தினமும் மறையவர் கனமுடன்*
*முறைமுறை வேத முழங்குவர் கீதம்;*
*நிறைநிறை போதம் நித்யவி னோதம்*
*பசித்தவர்க் கன்னம் பால்பழ மின்னம்*
*புசித்திடு முன்னம் புகழ்பெறச் சொன்னம்*
*தந்திடு தியாகி தருமனு யூகி*

---

மத்தம்-ஊமத்தைமலர். மதி-சந்திரன். பணி-பாம்பு. அத்திமுகவன்-யானை முகத்தையுடைய விநாயகக்கடவுள்.

5 வாது-தருக்கம். தனம்-செல்வம். விலமாரன்-மன்மதன். மின்னார்-பெண்கள். முல்லைத் தாமன்-முல்லை மாலையையுடையவன்.

6 2, ஓதிமம்-அன்னம். தடம்-குளம். புனம்-தினைக்கொல்லை. 11. சில்லவார் குலம்-நாயக்கமார் குலம்.

மந்த்ர விவேகி வளரனு போகி
சில்லவார் குலத்தான் சிறந்திடு நலத்தான்
வல்லமை வலத்தான் வளம்பெறு தலத்தான்
எறிசையின் இடத்தான் இகலரை நடத்தான்
செறிமனத் திடத்தான் சேர்முத்து வடத்தான்

தருச்சினைக் கவியும் அருச்சனைக் கவியும்
தாவிய மரையும் காவிய மரையும்
தந்தமா சுணமும் முந்துமா சுணமும்
தந்தியின் கொம்பும் மந்தியின் கும்பும்
சாடி அமர்ந்தும் ஓடி அயர்ந்தும்

மந்தரத் தெடுக்கும் கந்தரத் தடுக்கும்
மாதவ னூரும் ஆதவ னேரும்
பூச்சினை வேங்கையும் பாய்சினை வேங்கையும்
வான வரம்பையும் கான வரம்பையும்
பற்றுமெய்ப் பன்றியும் சுற்றுமெய்ப் பன்றியும்

மாதவர் உறைவும் நீதமே நிறைவும்
உற்றமா மலையான் ஓங்குதிண் சிலையான்
கற்றிடு கலையான் கரந்தை மாமலையான்
உத்தம கதியான் ஓங்கிய நிதியான்
வித்தக மதியான் விரிசிலை நதியான்

ஏட்டினில் அடங்கா எழில்வளம் செழிக்கும்
நாட்டினில் துவரா பதியின்நன் னுடன்
எழுகதிர்ப் படையான் இயல்பெறு நடையான்
முழுமதிக் குடையான் முல்லையந் தொடையான்
பஞ்சகதி கொண்டு மிஞ்சுகதி கண்டு

---

13. இகலர்-பகைவர். 15. தருசினை கவியும்-மரக்கிளைகளிலுள்ள குரங்குகளும். 16. மரை-மான். காவியமரை-காவிநிறம்பெற்ற செந்தாமரை. 17. மாசுணம்-பாம்பு. மாச்சுண்ணமும்-பெரிய பூந்தாதும். 18. தந்தி-யானை. 20. மந்தரத்தெடுக்கும்-மநதரத்தைப்போல உயர்நதிருக்கும். கந்தரம்-குகை. 22. பூச்சினை வேங்கை-பூவையுடைய கிளைகளைப்பெற்ற வேங்கை மரமும். வேங்கை மரத்துககுச் சூரியன் உவமை. 23, வான அரம்பை-வானுலகத்திலுளள ரம்பை. கான அரமபை-காட்டில் முளைத்த வாழை. 24. சுற்றும் மெய்ப்பன்றியும்-இளைப்பில்லாமல் சுற்றித்திரியும் உடறசிறப்பையுடைய காட்டுப்பனறியும்.

25. உறைவு-தங்குமிடம். நீதம்-நீதி. 28. கதி-நடை. 29. விததகம்-கலையறிந்த பண்பு. விரிசிலைநதியான்-விரிசிலை என்னும் நதியையுடையவன். 31. துவராபதி: இப்போது துவரங்குறிச்சி என வழங்கும். 33. தொடை-மாலை. 34. பஞ்ச கதி-மயூரகதி மல்லகதி, வானரகதி, இடபகதி, வியாக்கிரகதி என்னும் ஐந்துவகை நடை.

அஞ்சினர் வெருண்டு வெஞ்சமர் அருண்டிட
ஆதவன் ஊர்பரி ஏழையும் மீறியே
பாதலம் வானினும் ஓடி உலாவிய
அண்டத் துலவிப்ர சண்டக் கதிகொடு
அந்தக் கலனை இலங்க ப்ரபைவிடும்

அட்ட கசத்தை நெருக்கி உரத்திடு
துட்டர் சிரத்தில் மிதித்து நெரித்திடு
சோரிசிந்த வாரிவந்து தூளிமுந்து கூறுகந்த
போரில் பரியான் புலவருக் குரியான்
எழுதுசித் திரத்தான் இருமணித் தரத்தான்

செழுநிதிக் கரத்தான் தெறுகட்குஞ் சரத்தான்
புரூரவா எனத்தான் பொருநரைப் பொருத்தான்
கிரீடிநேர் எனத்தான் கெருடகே தனத்தான்
பேதைமை கொள்ளான் பின்னுரை விள்ளான்
மூதுரை எள்ளான் மும்முர சுள்ளான்

பகீரதன் எனவே பகரும்உத் தண்டன்
திகிரிமன் னவன்போற் செலுத்துமாக் கிளையான்
பாதள விபாடன் பல்கலைச் சேடன்
தரணிஉத் தண்டன் சமர்தெறத் தண்டன்
வஞ்சியம் பதியான் வஞ்சரை மதியான்

---

38, ப்ரசண்டம் - கடுமை. 39. கலனை-கடிவாளம்.ப்ரபை- ஒளி.
40. அட்ட கசம்-எட்டுத்திக்கில் உள்ள யானைகள்.

1 ஐராவதம் 2 புண்டரீகம் 3 வாமநம் 4 குமுதம் 5 அஞ்சனம் 6 புட்பகந்தம் 7 சார்வபூமம் 8 சுப்ரதீபம். 42. சோரி-இரத்தம். வாரிவந்து, கடலில் கலந்து. 44. எழுது சித்திரத்தான்-எழுதிய சித்திரம் போன்ற அழகையுடையவன். 45.தெறுகண்-கொடுமையையுடைய. குஞ்சரம்-யானை.

47. கிரீடி-அருச்சுனன். கெருடகேதனத்தான்-கருடனைத் தன்னுடைய கொடியில் அடையாளமாக உள்ளவன். 48.பின் உரை விள்ளான-முன்சொன்ன சொல்லுக்கு மாருகப் பின்னர் ஒருசொல்லைச் சொல்லாதவன். 49. மூதுரை எள்ளான்-பழைய நூல்களிலுள்ள உரைகளை இழிவு படுத்தாதவன். மும்முரசு-வீர முரசு, 'நியாய முரசு, மணமுரசு. 50.உத்தண்டன்-பெருமிதமுடையவன். 51.திகிரி-ஆக்ஞாசக்ரம 52. பாதளவிபாடன்,-பாதாளத்தைப் பிளந்துசெல்லும் துணிவு உடையவன. 53. தண்டன்-யமனைப்போன்றவன.

மிஞ்சிய நிதியான் வேகமா நதியான்
பொன்னியந் துறையான் பொய்தனை உரையான்
மன்னிய நிறையான் வயதிளம் பிறையான்
அன்னசத் திரமும் சொன்னசொற் றிரமும்
வேலவர் தமக்குமுக் கால நைவேத்யமும்

பட்சமாய் மங்கை பாகற்கே சாய
ரட்சைபூ சனையும் நைவே தனமும்
அசத்தி சுரர்க்கும் அருந்துவ ராபதி
மகத்துவம் அறிந்து வரிசைய தாகச்
செம்மலாம் எங்கள் திருக்கோடி நாதர்க்கும்

காமனை வென்ற கயிலாச நாதர்க்கும்
கனப்படிக் கட்டளை காலகா லத்தில்
தினப்படி நடத்திச் செழித்திடு திருநாள்
நித்யநை மித்திகமும் நேயம தாகப்
பத்தியாய் நடத்தும் பாக்கிய சாலி

எதிர்த்திடும் ஒன்னார் இகல்பொரு தளத்தில்
மிதித்தெதி ரேறி வேகம தாக
ஐங்கதி கொண்டு விதிர்பெற நடக்கும்
துங்கவான் பரியைத் தூள்பட உதறிச்
சீறிச் சினமொடு தூறிக் கடலது

மாறிச் சுவறிட மீறிக் கதிகொடு
தந்திரர் எதிர்ந்து வந்தவர் சிரங்கள்
பந்தென எழுந்து தொந்தி மெனநின்று
ஆடக் கழுகுகள் கூடித் திரளொடு
பாடிக் குருதிகள் நாடித் தசைகளைக்

56. பொன்னி-காவிரி. 57. நிறை-உள்ளத்தை நிறுத்தும் ஆற்றல்.
60. மங்கைபாகர் - பிரான்மலையிலுள்ள சிவபெருமான். 62 மகத்துவம்-பெருமை.
68. நித்தியம்-நாள்தோறும் செய்யும்பூசை. நைமித்திகம்-விசேடபூசை. 70, ஒன்னார்-பகைவர். இகல்-போர். தளம்-படை. 72. விதிர்பெற-நடுங்கும்படி. 73. பரி-குதிரை.
75, சுவறிட-வற்றிட. 76, தந்திரர்-படைவீரர்கள்.

கூடிக் களியொடு குடல்மூளைதயிர்
சாடிநரி யோரிபல பேய்களவை கூடியுண
வைத்ததள யுத்தரண பத்ரனுயிர் சத்திதரன்
அடையலர் தளத்தை முறிபட அடித்த
கரடமத மத்த கசமதை நடத்து

வீர சூர பார மேரு
இலகு கமல வதன லலித
இசையின் அமிர்த வசன மதுரன்
ராசாதி ராசன் ராசகெம் பீரன்
ராசசிந் தாமணி ராசமார்த் தாண்டன்

குமர சரவண குகன்றன் மனதில்
அமர அருளின் அரசுசெய் லோலன்
சண்முகர் அருளால் சந்தானம் பெற்றோன்;
கண்மணிப் புதல்வரைக் காங்கேயன் காத்திட
வருபிறை ஆயிரந் தொழுதுமா நிலத்தில்

குரிசிலாய் இருக்கக் குகனருள் பெற்றோன்,
சிவகிரி முருகரைச் சிந்தையின் நினைந்தே
அவரருள் கிருபையால் அகிலமே புரந்தோன்
அருணோ தயத்தின் அபயனாய் எழுந்து
திருமணி முத்தா நதியினிற் சென்று

வருமனம் குளிர மகிழ்ந்துநீ ராடிக்
குருவுப தேசக் கொள்கையின் படியே
நித்திய கருமமும் நேமமாய் முடித்து
உத்தம மான உயர்ந்திடு குலத்தில்
அரியநான் மறையின் அழக ரையங்கார்

பெரியோர் களுக்கும் பெருநதாம் பூலம்
நித்தியம் தானம் நிலைபெறக் கொடுத்துக்
கயிலாச நாதர் கமலபொற் பாதம்
மயிலாள் செண்பக வல்லிசே வடியும்
அன்பொடு வணங்கி அரண்மனை எய்தி

---

81. சாடி-மோதி. ஓரி-ஒருவகைநரி. 82. ரணபத்ரன்-யுத்தத்தில் சிறந்து விளங்குபவன். 83. அடையலா தளத்தை-பகைவர் சேனையை. 86. லலித-அழகிய. 89. ராச மார்த் தாண்டன-அரசர்களில் சூரியனைப் போன்றவன். 91. அருளின்-அருளினால். 92. சந்தானம்-மக்கட்பேறு. 93. காங்கேயன்-முருகன். 98. அபயனாய்-பயமில்லாதவனாய் 108. மயிலாள்-மயிலைப்போன்ற உமாதேவி.

இன்பமாய் முருகர் இணையடி வணங்கி
அடியவர் தமக்கும் அனதானம் செய்து
கெடிதுரை மக்கள் கிளர்வன் னியரும்
தன்மரு மக்கள் சந்ததி உடனே
மன்மதன் போல வந்தரு கிருந்தே

அறுசுவை அடிசில் அருந்திவாய் பூசி
நெறியுடன் அடைக்காய் நேமமாய் அருந்தி
முருகர்தாள் வணங்கு முடியதற் கிசைந்த
சரிகைநற் பாகு சதிருடன் அணிந்து
ஏதிலாச் சிவகதை என்றுமே கேட்கும்

காதில்முத் தொண்டிக் கடுக்கணும் அணிந்து
சரப்பணி பதக்கம் தாழ்த்தொ டரைஞாண்
விரற்கணி மோதிரம் விளங்குகைச் சரமும்
அஞ்சின பேருக் கபயமே கொடுக்கும்
மிஞ்சியை மலர்த்தாள் விரலினிற் றரித்து

பாங்குடன் நிசாரும் பரிவுட னங்கி
வாங்குடன் சூரி மருங்கினிற் சேர்த்துச்
சந்தனம் புனு கு சவ்வாதுகஸ் தூரி
வந்திடு சுகந்த மலர்களும் முடித்து
ஒயிலிள முலையார் உகந்திரு பாலும்

கைலா கேந்தக் கண்பணி முகப்பில்
இந்திரன் போலும் எழில்பெற இருந்தே
அலங்க்ருத மான அந்த மாதங்கத்
திலங்கிய சகடோ லேறிமீ திருந்து
நட்டுவர் பாடப் பாவைய ராடக்

---

112. கெடி துரைமக்கள்-மிடுக்கையுடைய அரசகுலமக்கள். வன்னியர்-மந்திரி.
115. வாய்பூசி-வாயைக் கழுவி.
116. அடைக்காய்-தாம்பூலம்.
118. நற்பாகு - தலைப்பாகை.
119. ஏது இலா - குற்றம் இல்லாத
121. சரப்பணி - வயிரம் பதித்த கழுத்தணி.
125. அங்கி - சட்டை.
126. வாங்கு - வளைந்த அரிவாள. சூரி - கத்தி. மருங்கினில் - இடையில்.
129. ஒயில- அழகு- உகந்து-விருமபி. இருபாலும-இரண்டு பக்கமும்.
132. மாதங்கத்து-சிறந்த தங்கத்தால் செய்த. 133. சகடோல்-அம்பாரி.
134. கவரி-சாமரை.

*கட்டியங் கூறக் கவரிகள் இரட்ட*
*அன்னமென் நடையார் மின்னென நடிக்கத்*
*துன்று சங்கீதம் உன்னியே முழங்கப்*
*பேரிகை கறங்கப் பெரியளக் காளம்*
*பூரிகை கொம்பு புயலென முழங்க*

*இடக்கயம் சுருட்டி இருபுறம் நெருங்கக்*
*குடைத்திரள் நிழற்றக் குஞ்சகா ளாஞ்சி*
*ஏந்துசிற் றூழியத் தினத்தவர் நெருங்க*
*வல்லயக் காரர் மதித்தவிற் காரர்*
*சொல்லிய ஒண்தடி காரரும் துலங்கப்*

*பட்டாணி மார்கள் பாய்பரி ஏற்றித்*
*திட்டமாய் இருபுறம் சிறந்தவர் வரவும்*
*தளகர்த்தர் மந்திரித் தலைவர் கணக்கர்*
*விடுமணி யத்தார் விலக்கிமுன் வரவே*
*நெடிய இந்திரன் போலமன் மதன்போல்*

*வடிவினில் விசை மாதவன் போலும்*
*கொடிபெறு ராகவ கிருஷ்ணனே போலும்*
*வாலசீ வகன்போல் வந்திடும் பவனி*
*பாலெனும் மொழியார் பார்த்தமா தருக்குள்*
*மதன ஒய்யாரி மதரச கேணி*

*பிடியெனும் நடையாள் துடியெனும் இடையாள்*
*வெடிமலர்ச் சடையாள் படிமதன் படையாள்*
*புன்னகை அரும்பு புகலுநெஞ் சிரும்பு*
*பன்னுசொல் கரும்பு துன்னுவிழி சுரும்பு*
*விளங்குமுக் கனியாள் விரகமோ கினியாள்*

---

136. இரட்ட-வீச. 137. கறங்க-ஒலிக்க.
138. பூரிகை - ஊதுகுழல். காளாஞ்சி - தாம்பூலம் துப்பும் கலம்.
139. இடக்கயம் - தோக்கொடி.
சுருட்டி - ஓர் எடுபிடி.
143. வல்லயக்காரர் - ஈட்டியைக் கையில் ஏந்தியவர்கள்- 144. துலங்க-விளங்க.
145. பட்டாணிமார்கள் - உருதுமொழி பேசும் முகம்மதியர்களுள் ஒருவகையார்
பாய்பரி : வினைத்தொகை.

154. ஒய்யாரி- அழகுடையவள். 155. பிடி-பெண்யானை. துடி - உடுக்கை.
156. வெடிமலர்ச்சடையாள் - மலர்ந்த மலரணிந்த கூந்தலையுடையவள்.
159. முக்கனி - மா, பலா, வாழை.

வளங்கெழு மயலார் வாடினுள் அயலார்
கண்டிட மருண்டு காதலே கொண்டு
வண்டெனத் துவண்டு மையலால் வெருண்டு
ஆகமும் தியங்கி அறிவுள மயங்கி
மோகமே பூண்ட மோகினி தனக்குக்

கைக்குறி பார்த்து மெய்க்குறி உரைக்கும்
குறவஞ்சி வந்து குறிகள் சொன்னதுவும்
திறமுள்ள சிங்கியைச் சிங்கன்தே டினதும்
வேட்டைகள் ஆடி மிகமகிழ்ந் ததுவும்
நாட்டினில் குறவஞ்சி நாடக மாகச்

செந்திரு இலங்கச் செகமெலாம் துலங்கப்
பைந்தமிழ் தன்னில் பாடுகின் றேனே.

## கட்டியக்காரன் வருகை

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

7 சரிகைநற் பாகு கட்டிச் சபைதனில் தட்டிப் பின்னும்
விருதுகுப் பாயம் பூட்டி வேத்திரக் கையை நீட்டித்
தருவெனும் குமார லிங்க சாமிதன் சமுகந் தன்னில்
கருதிய விருது சொல்லும் கட்டியக் காரன் வந்தான்.

### தரு

8 சோமகிரி நகராளும் ராமா பராக்கு
சோபன விலாசபெல வீமா பராக்கு
தாமநறு முல்லையணி சாந்தா பராக்கு
சாம்பிராச்ய லட்சுமி காந்தா பராக்கு
சில்லவார் குலதிலக சீலா பராக்கு

சிவசமய பரிபால லோலா பராக்கு
வல்லமைப் புயசயில மன்னு பராக்கு
மார்த்தாண்ட மண்டலசம் பன்னு பராக்கு
சத்ருசன சம்மார விதுரா பராக்கு
சதுரங்க தளசவுரிய சதுரா பராக்கு

---

163. ஆகம் - சரீரம். தியங்கி - இளைத்து. 170. செகம் - உலகம்.
7. பாகு - தலைப்பாகை. குப்பாயம் - சட்டை. வேத்திரம் - பிரம்பு.
8. சத்ருசன சம்மார விதுரா-பகைவர்களை அழிப்பதில சாமர்த்தியமுடையவன்.

*மித்துரு பரிபாலனெனும் வீரா பராக்கு*
*விலாஸித கஜேந்திர கம்பீரா பராக்கு*
*நாட்டிலெறி சைப்பதியின் நாதா பராக்கு*
*நயகுணவி லாசநவ நீதா பராக்கு*
*கோஷ்ட மன்ன ராஷ்டிரஅத் திரா பராக்கு*
*குமாரலிங்க ராசாதி சூரா பராக்கு.*

## தோழி வருகை

*அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்*

9 *தருவேறும் தாது லிங்க சாமிதன் வரத்தால் வந்த*
*துருவனும் குமார லிங்க துரந்தரன் எறிசை நாட்டில்*
*அருவரை மயில்போல் மோக னுங்கிமா மயலைத் தீர்க்கப்*
*பருவமாம் சித்ர லேகைப் பாங்கியும் தோன்றி னளே.*

தரு

*இராகம்: சங்கராபரணம்*

*(பல்லவி)*

10 *நவசித்ர ரேகையும் வந்தாள் — சிங்காரமாக*
*நவசித்ர ரேகையும் வந்தாள்*

*(அநுபல்லவி)*

*குவலயம் மதிக்கவரு குமாரலிங் கைய நாட்டில்*
*புவனிக் குழுவியர்சஞ் சீவிபோல்எல் லோருங்காண (நவ)*

*(சரணம்)*

*பஞ்செனும் மலர்ப்பதத்தில் செஞ்சிலம் பொலிகள்கொஞ்சக்*
*கஞ்சமுகக் காந்திதானே மிஞ்சமிஞ்சவே*
*கஞ்சுகந் தருரஞ்சிதப் பெண்ணெனவே இன்சொல்கூறி*
*நஞ்செனக் கறுத்திரண்டு செஞ்சர மலர்க்கண் கொண்டு(நவ)*
*கொம்பினிற் கனிந்தரச விம்ப விதழ்ப் பிரபைவீச*
*கும்பமுலைக் கணியணி சொம்பு சொம்பதாய்*
*சம்ப்ரம அரம்பையை நேர்தம்புருக்கம் பிகள்மீட்டிச்*
*செம்பவளக் கொடிபோல் அம்பதுமக் கையைநீட்டி (நவ)*

---

மித்ரு பரிபாலன் – நண்பர்களைக் காப்பாற்றுகிறவன்.
பராக்கு – சாக்கிரதை என்னும் பொருளில் வழங்கும் குறிப்புச் சொல்.
9. தாதுலிங்கன் – குமார லிங்கனுடைய தந்தை.
எறிசைநாடு – நத்தம் ஜமீன் உள்ள நாட்டிற்கு எறிசை நாடு என்று பெயர். 10. கஞ்சம் – தாமரை. விம்ப இதழ், கொவ்வைப்பழம் போன்ற இதழ். பணி – அணிகலன. சொம்பு – அழகு.

*சரவண குகனைப்பணி திரவசனன் குமாரலிங்கப்*
*புரவல எறிசைநாட்டில் சரசர வேயணைந்து*
*சுரதமிக்க ரதிபோலவர் மலருந்திரு ஒய்யார*
*விரகமோ கினியைநாடிச் சரசசல் லாபம்பாடி (நவ)*

## விரகமோகினி வருதல்

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

11 கொடியவற் கிடியே றென்னும் குமாரலிங்கேந்த்ரன் நாட்டில்
பிடிநடை அன்னப் பேடு பெண்களுக் கரசி மிக்க
வடிவுள இரதி போற்றும் மடந்தைமார் வாசம் மேவும்
முடிமலர் தாங்கி மெள்ள விரகமோ கினிவந் தாளே.

### தரு

இராகம்: மத்யமாவதி

(பல்லவி)

12 விரகமோ கினியும் வந்தாள் - சிங்காரமாக
விரகமோ கினியும் வந்தாள் (விரக)

(அநுபல்லவி)

சற்சன குமாரலிங்க சாமி எறிசை - நாட்டில்
கச்சையணி தாளவி தத்துடனேசதி
திக்கின தோம் ததிங்கணதோமென்று (விரக)

(சரணம்)

பாதச் சிலம்பு தண்டை கொஞ்ச - அளவிலாத
மாது பணிந்து பின்னே கெஞ்ச - மணம்மிகுந்த
தாது திகழும் கஞ்சத் தாளில் மதனிறைஞ்சத்
தக்கவர் நாளும் மதித்திட வேயெய்திச்
செங்கிண செந்ததிங்கணத் தோமென (விரக)

---

12. கச்சை - கெஜ்ஜை; காலில் கட்டும் சதங்கை. கஞ்சத்தாளில்-தாமரை போன்ற அடியில்,

நஞ்சஞ்சும் கண்மலர் வண்டு - வனிதைதிரண்
டஞ்சாறு மாதமேதான் உண்டு - மதுரமொழி
சஞ்சீவி இதழ்கண்டு சந்திர வதனங்கொண்டு
சற்பன பாஷையும் உற்பன மாகவே
தத்த ளாங்குதோந் ததிங்கணத் தோமென (விரக)

சேரும் விரகமதை நாடிக் - குமாரலிங்க
தீரன் புகழ்தனையே பாடி - மிகுந்தகன
சாரமிகவே கோடி சங்கீத ராகம்பாடிச்
சற்குரு மாலசதி கற்றிட வோதி
தக்க ததிக்க ததிங்கண தோமென— (விரக)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

13 நரபதி குமார லிங்க மகீபதி நாட்டில் வளர்ந்திடுதா
மரைமலர் போலும் முகஞ்சசி கண்டிடு மாறெனும்முகம்வேறு
இருவிழி நீர்தர வேமுலை இரண்டும் இணைந்து பசப்பேறத்
தருவுடல் சோர்ந்திடும் மோகினி நின்று தவிப்பது
சொல்வாயே

தரு

இராகம்: பந்துவராளி

(பல்லவி)

14 இந்த வேளை அந்திநேரம்
என்றன் மைய லோகொ டூரம்
பந்துமுலை ரெண்டு பாரம் - பாங்கியே கேளாய் (இந்த)

(அநுபல்லவி)

இரவொரு யுகமாகுது இக்குவேள் கணை தைக்குது
பரவசமாய் வருகுது பாங்கியே கேளாய்— (இந்த)

---

சற்பன பாஷை-சைகைகளால் புலப்படுத்தும் மொழி. உற்பனம்-உத்தபனம்.
13. மகீபதி-அரசன. சசி-சந்திரன். பசப்பு-பசலை.
14. இக்குவேள்-கரும்பு வில்லையுடைய மன்மதன். கணை-அம்பு.

(சரணம்)

அஞ்சன விழிதுஞ்சாதுபால் அன்னமும் தான்இறங்காது
பஞ்சணையும் பொருந்தாது பாங்கியே -கேளாய்
தொலைவில்லா மய்யல் பூணுதே
துரைகுமார லிங்கையனைக் காணுதே
பலகாலும் நான்சொல்ல நாணுதே பாங்கியே-கேளாய்
(இந்த)

தரு

இராகம்: ஆனந்த பைரவி

15 மாவிற் குயிலும் வந்து கூவுதே - அந்த
மதியும் தழலைமொண்டு தூவுதே
நாவிற் கமுதமுங் கைக்குதே - மத
ராசன் கணைகள் வந்து தைக்குதே
ஆசைக் கடலில்மெள்ளத் தள்ளுதே - தென்றல்
அன்றி லுடன்கோட்டி கொள்ளுதே - மெள்ள
மோசக் கொண்டாட்டமே பண்ணுதே - கடல்
மோகமே என்னுயிர் உண்ணுதே - என்றன்
சரீரமும் வாடுமோ - அன்னை சகிக்கவும் கூடுமோ
சிந்தனை யுந்தினந் தேடுமோ - ஆசைத்
தியக்கமே வந்தென்னை மூடுமோ
காதல் தனையும் வெல்லவே - சாமி
கருத்துக் கிசைந்தசேதி சொல்லவோ
தூதுநீ செல்லடி அன்னமே - எங்கள்
துரைகுமார லிங்கையன் முன்னமே.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

16 அண்ணலார் அருளும் செந்தி அறுமுகக் கடவுள் பாதம்
நண்ணிய குமார லிங்க ராசரா சேந்த்ரன் மீதில்
எண்ணிலா மையல் கொண்டே இரவுமோர் உகம தாக
வெண்ணிலா வருத்த வாடி விரகமோ கினிநொந் தாளே.

துஞ்சது—ா தூங்காமல். பஞ்சணை- மெதகை. தொலைவு இல்லை.

## விரகமோகினி சந்திரனை நிந்தித்தல்

### தரு

இராகம்: எதுகுலகாம்போதி

17 பெண்ணுடனே நீபிறந்தும் கண்ணில் என்னைக் கரியாதே
எண்ண மில்லா தென்னைக் காய்ந்தாய் - நிலவே துரை
அண்ணலெனுங் குமாரலிங்கன் வண்ணமுலை மேலணைய
நண்ணி இங்கே வாரானோ நிலவே (பெண்ணுடனே) (1)

பாற்கடலி லேபிறந்தும் ஏற்கைநல மேமறந்தாய்
ஆர்க்குமிது சரியாமோ நிலவே நீதுன்
மார்க்கமிக வேபுரிந்து மூர்க்கவற மேசெய்தால்
ஏற்குமோ இதுவுனக்கு நிலவே (பெண்ணுடனே) (2)

சீதமதி யாயிருந்தென் மீதுதழ லேசொரிந்து
பேதகமே செய்வதென்ன நிலவே - உன்றன்
நீதம்அறிந் தன்றரனார் பாதமதனு லுதைத்த
சேதியறி யாததென்ன நிலவே (பெண்ணுடனே) (3)

ஈசர்முடி மீதிருந்து வாசமுகம் பெற்றேனென்று
நேசமுடனென்னைக் காய்ந்தாய் - நிலவே மக
ராசனெனுங் குமாரலிங்க போசனென்னைச் சேர்ந்தணையில்
வீசுகதி ரென்னசெய்யும் நிலவே (பெண்ணுடனே) (4)

18 சீலனெனும் தாதுலிங்க தீரன்செய் தவத்தில்வரு
பாலன் குமாரலிங்க பார்த்திபன்மேல் ஆசைகொண்ட
வாலமதன் மோகினிதான் வந்துசகி வேடத்தில்
கோலா கலமாய்க் குயில்வருத்தம் சொல்வாளே.

---

17. 1. கரியாதே-கரிக்காதே; வெறுக்காதே. 2. துன்மார்க்கம்-கெட்ட நடத்தை. 3. நீதம்-இயலபு. 4. வாசமுகம் பெற்றேன் எனறு-உன்னைப்போன்ற மணம் மிக்க முகத்தைப் பெற்றேன் என்று பொருமையுற்று. கதிர்-கிரணம். வீசுகதிர்: வினைத்தொகை.

18. சீலன்-ஒழுககமுடையவன. சகிவேடம்-தோழி வேடம.

## தரு

(இராகம்: காம்போதி)

19 காகத் துடன்வளர்ந்த குணமோ
உனக்குச் சொன்னேன் குயிலே நாளும்
காரிகையார் மீதில் மாரீசம் செயலாமோ குயிலே
மோகமதன் காளமாக வந்தாய் சிறுகுயிலே - மிக
முற்றினுலு மேயென்னை மெத்த வருத்தினுய் குயிலே
தாய்முலைப் பாலுண்டா லல்லோ குணம்வருங்குயிலே - இது
தர்மம் அல்ல சொன்னேன் வர்மம்பா ராட்டாதே - குயிலே
தூயமலர்க் காவிலே வளருஞ்சிறு குயிலே-எங்கள்
துரைகுமார லிங்கையன் வரிலெண்செய்வாய் இளங்குயிலே
(காகத்)

## கட்டளைக் கலிப்பா

20 செந்தி வேலவர் பத்ம பதாம்புயம்
சேவை செய்யுமொரு தாது லிகங்வேள்
தந்த செல்வன் குமாரலிங் கேந்திர
சாமி மேவு பவனிமுன் பாகிய
பந்து மாமுலை மின்னிடை மோகனப்
பாவையாள் அதிமாமய லாகவே
வந்து மாருதம் வெம்புலி போலவே
வந்து பாய மயங்கினள் காணுமே.

## தென்றலைப் பழித்தல்

## தரு

இராகம்: காம்போதி

21 தென்மலை தானுனக் கென்முலை யோஇளந் தென்றலே-காமத்
தீயினை மூட்டுதற் கேஇங்கே வாராய்நீ தென்றலே
மன்மதன் ஏறி வருரதம் ஆகிய தென்றலே - என்னை
வாதிக்க வோவரம் சாதிக்கி ருயிளந் தென்றலே

---

19. காரிகையார்-பெண்கள்.
மாரீசம்-வஞ்சகம், காளம்-சின்னம், வர்மம்-பகை. கா-சோலை.
20. செந்தி-திருசசெந்தூர். சேவை-தொண்டு. மாருதம்-தென்றல்,
21. தென்மலை-பொதியமலை.

வடமுக மாய்வட வானலம் போல்வரு தென்றலே - எதிர்
வாடைப் புலிஉன்னை ஓடத் துரத்தாதோ தென்றலே
குடமுனி வாரியைக் கொண்டது போலுன்னைத் தென்றலே—
சீறும்

கொடுநாகம் உண்டுவாய் கொள்ளாமல் விடுத்ததோ
தென்றலே
சந்தன வாடைத் தழுவோடும் தாவுருய் தென்றலே-என்மேல்
க்ஷாத்திரம் செய்யவும் பாத்திரம் நானல்ல தென்றலே
சீதரன் குமார லிங்கையன் எனைச்சேர்ந்தால் தென்றலே
-என்ன
செய்குவாய் நான்உன்னை வைகுவன்அப் போது தென்றலே.

### அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

22 குஞ்சரி மணாளன் செந்திக் குருபரன் அடிகள் போற்றும்
ரஞ்சிதன் குமார லிங்க ராசரா சேந்த்ரன் மோகம்
மிஞ்சியே மதியை வைது மேவுதென் றலையே நொந்து
வஞ்சமா மதனைத் தூற்றி வருந்துவள் வருந்து வாளே.

### மன்மதனை நிந்தித்தல்

### தரு

இராகம்: மோகனம்

23 மாதர் படையால் என்றன்மீது பொருத வந்தாய் மன்மதா-
கொண்ட
காதல் அறிந்திருந்தும் வாதுநீ செய்யலாமோ மன்மதா
தென்றல் மீதுவந்து நின்று சிலைவளைத்தாய் மன்மதா-உனக்கு
அன்று சிவனார்செய்த தினறு மறந்தனையோ மன்மதா
வர்மமே செய்யுறுய் தர்மமோ உனக்கிது மன்மதா பெண்கள்
மரியாதை எல்லோருக்கும் சரியல்ல வோசொல்லாய்-
மன்மதா

---

வடவானலம் - வடவைத்தீ. வாடைப்புலி-வாடைக்காற்றாகிய புலி.
குடமுனி-அகத்தியர். வாரி-கடல். க்ஷாத்திரம்-கோபம்.
22. குஞ்சரி மணாளன்-முருகன். ரஞ்சிதன-மனத்தைக் கவரும்படியான
அழகு உள்ளவன்.
23. சிலை-வில்.

ஏறவிட் டேணிபின் மாறிவிட்டாய் என்ன மன்மதா-உனக்கு
எத்தனை சொன்னாலும் புத்திபோ காதடா மன்மதா
வல்லைநேர் தனத்தில் முல்லையரும் பாலெய்தாய் மன்மதா
உன்கை
வில்லை ஒருவர்சிறு வில்லைசெய் யாரோசொல் மன்மதா
சோர மகோரமுதற் சாமநே ரம்பாராய் மன்மதா-நாளும்
தூயன் குமாரலிங்க ராயன்வரில் என்செய்வாய் மன்மதா

## குறத்தி வருகை

(அகவல்)

24 திருமகள் போலச் சிறந்துமெய் வளரும்
மருமணம் சிறந்த மதனபி ஷேகம்
கலைப்பெண் எனவே மலர்ப்பெண் வடிவாய்
இருள்குடி இருக்கும் கரியமைக் குழலில்
மல்லிகை மலருடன் முல்லையும் முடித்துச்

சுட்டியும் நுதற்குள் பட்டமும் அணிந்து
கொப்புடன் காதில் ஒப்பில்பொன் தோடும்
நஞ்செனும் கண்ணுக் கஞ்சனம் தீட்டி
உச்சித மான வச்ரமூக் குத்தியும்
தரித்துவெண் தரளத் தாவடம் சவடி

திருத்தமாய்க் கழுத்திற் சிறந்திட அணிந்து
அக்கு மணியும் வக்காப் பாசியும்
தனங்களில் செழுஞ்சந் தனத்துடன் இளைஞர்
மனங்களும் அணியா வடங்களும் அணிந்து
இடையினில் கலைமேல் இலங்குமே கலையும்

---

வல்லை-சூதுகருவியை. நேர்-ஒத்த. வில்லை செய்யாரோ-வில்லையைப்போல அழித்துவிடமாட்டாரோ. 24. 2. மதனபிஷேகம்-மன்மதனுடைய முடி. 3. கலைப்பெண்-கலைமகள். 4. மலர்ப்பெண்-திருமகள். சுட்டி-முன் நெற்றியில அணிந்துகொள்ளும் ஆபரணம். 7. கொப்பு-மேற்காதில் அணியும் அணிவகை. 8. அஞ்சனம்-மை.
10. தாவடம்-மாலை. சவடி-பொற்சரடுகள் கொத்தாக அமைந்த கழுத்தணி.
12. அக்குமணி-சங்குமணி. வக்கா-சிப்பிவகை.

வடிவுறு சங்க வளைகரத் தணிந்து
அடிக்குநூ புரமும் அணிந்து மாத்திரைக்
கோல்பிடித் தொருகைக் குறப்பெட்டி ஏந்திக்
குறித்திடு வள்ளி கொழுநனை நினைத்துச்
சிறக்கும்மே னகைஇந் திராணியே போலும்

பொன்னின் கமலம் போதின்மேல் உலவும்
அன்னமோ இவள்தான் ஆமென நடந்து
உரைக்குறி பகரும் முச்சிதக் கரந்தை
வரைக்குற வஞ்சி வந்துதோன் றினளே.

தரு

இராகம்: ஆரபி

பல்லவி

வஞ்சி வந்தாள் — குற
வஞ்சி வந்தாள்

அநுபல்லவி

புடவி தனிலெழில் நடன மிடுமயில்
வடிவு கொடுரதி இவளென
நெடியவிழி கயல் துடியை நிகரும்நுண்
ணிடையும் நடை யனமெனவே (குறவஞ்சி)

சரணம்

வெம்பு மதன்மலர் அரம்பை அளகம்நி
ரம்ப அணிமலர்க் கொம்பென
விம்ப களப கதம்ப பரிமள
கும்ப வனமுலை ரம்பைபோல் (வஞ்சி) 1

---

17. நூபுரம்-சிலம்பு. 25. புடவி-பூமி. துடி-உடுக்கை.
அளகம்-கூந்தல். களபம்-கலவைச் சந்தனம். கும்பம்-குடம்.

விஞ்சை வனிதை கொஞ்சு கிளி மொழி
தஞ்சமெனவும் இறைஞ்சவே
கஞ்ச மலரடி வஞ்சியெனும் அப
ரஞ்சி கெருவித மிஞ்சவே (வஞ்சி) 2

ராச னெங்கள்கு மார லிங்கைய
போசன் எறிசைநன் னாட்டிலே
வாசம் மிஞ்சிய மாது ரஞ்சித
நேச முங்குறி சொல்லவே (வஞ்சி) 3

தரு

இராகம்: மத்யமாவதி

(பல்லவி)

26 சல்லாபக் குறவஞ்சி வந்தாள் - ஒய்யாரமான
சல்லாபக் குறவஞ்சி வந்தாள்

(அநுபல்லவி)

உல்லாசன் குமாரலிங்க உசித னெறிசை நாட்டில் (சல்லாபக்)

சரணம்

திங்கள் வதனந்தான் துலங்க நிறைமுத்தாரி
கொங்கை இணைகள்தாம் குலுங்க - கதிரெறிக்கும்
சங்கொளிர் தன்கை யிலங்க அலங்கிருத
அங்கசன் இங்கித மங்கையைப் போலவே (சல்லாபக்) 1

கோகிலத் திசைதனை வெல்ல - மொழிபுகலும்
மோகினிக்குத் தான்குறி சொல்ல - மிகுந்தரச
பாகினு மிகுமொழி யாகிய யோகசை
யோகவை போகநன் மோகினி போலவே (சல்லாபக்) 2

---

2 விஞ்சை-வித்தைகளைக் கற்ற. கஞ்சமலா-தாமரைப்பூ. அபரஞ்சி-அபரஞ்சி என்னும் பொன்னைப போன்றவள். கெருவிதம்-கர்வம். 26. சல்லாப-இனியபேச்சையுடைய. ஒய்யாரம்-அழகு.

26.1. சங்கு-வளை. அங்கசன்-மன்மதன், மங்கை-இரதி. 2. கோகிலம்-குயில்

*கொங்கை சுமந்திடை துள்ளாட - மலர்ப்பதத்தின்*
*துங்கச் சிலம்பிசைகள் பாட - மயல்மிகுந்த*
*மங்கையர் மோகனன் அங்கச ஞகிய*
*எங்கள் குமாரலிங் கையன்றன் நாட்டினில் (சல்லாபக்)* 3

*அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்*

27 *பங்கய வாவி சூழ்ந்த பதியெனும் எறிசை மேவும்*
*துங்கனும் குமார லிங்க துரந்தரன் மகிழும் நாட்டில்*
*மங்கள மாக வந்த மாமயிற் சாயல் மாதே*
*தங்கமே குறப்பெண் ணேஉன் சாதியின் முறைசொல் வாயே,*

தரு

*இராகம்: எதுகுல காம்போதி*

28 *எங்கள்குறச் சாதியம்மே தெய்வகுறச் சாதி - புவி*
*எங்கணும்போய்ச் சஞ்சரிப்போம் எங்களுடை நீதி*
*எங்கள்தாது லிங்கமக ராசன்தரு கின்ற*
*துங்கனும் குமாரலிங்க சுமுகன்வரை மானே,* (1)

பூனைவாடை மாசுசாந்தம் சந்தனமும் பூசோம் - எங்கள்
புருஷரல்லால் மற்றுமொரு புருஷருடன் பேசோம்
மாநிலமேல் சஞ்சரிக்க நாங்கள்மனம் கூசோம் - எங்கள்
மரபுதப்பி வாய்மதங்கள் சொல்லியே ஏசோம். (2)

*மந்தரங்கள் தோறுந்தினஞ் சென்றுசஞ் சரிப்போம்—அம்மே*
*வக்காமணி அக்குமணி வகைவகையாய்த் தரிப்போம்*
*விந்தைவிந்தை யாய்மணலைக் கயிறுகத் திரிப்போம் - காதல்*
*மெல்லியர்க்கெல் லாம்மயலை விரும்பிப்பரி கரிப்போம்.* (3)

காக்கைகழு காந்தையொடு கடமானும் அருந்தோம் - பிறர்
கைப்பொருளைப் பொய்சொல்லி வாங்கமனம் திருந்தோம்
சேர்க்கையின்றிச் சஞ்சரிக்கத் தினந்தினமும் பொருந்தோம்
சிறுதெட்டு மாதரைப்போல் தேகமுந்தான் வருந்தோம். (4)

---

27. வாவி-பொய்கை. துங்கன்-சிறந்தவன்.
28. 2. பூனைவாடை-புனுகு. மாசு-குற்றம். சாந்தம்-சாந்துவகை. 3. மந்தரங்கள்-மலைகள். பரிகரிப்போம்- போக்குவோம். 4. கடமான்-ஒருவகைக் காட்டுவிலங்கு சேர்க்கையின்றி-சேர்ந்து செல்லும் குறவனையில்லாமல். தெட்டு-ஏமாற்றம்

கள்ளொடுசா ராயம்ஒன்றும் நாங்கள்குடித் தறியோம்-ஒரு
காயகவி சேடங்கள் கனவிற்படித் தறியோம்
விள்ளும்பொய் குறளைசொல்ல நாங்கள்மனம் பிடியோம்-நல்ல
வேங்கைமலர் அல்லாது வெண்மலரை முடியோம். (5)

நானிலம் புகழும்க்ஷத்ரிய ராமன்வசிர தேகம் - பெற்ற
ராசன்கு மாரலிங்கன் நாட்டிலெங்கள் சினேகம்
வேனில்அந்த வேள்தனக்கு உண்டந்த யோகம் - எங்கள்
விந்தைபல உண்டுமானே கேளாய் அனேகம். (6)

கொச்சகக் கலிப்பா

29 போசனெனும் தாதுலிங்க பூபன் தவத்தில்வரு
நேசன் குமார லிங்க நிருபன்மகிழ் நன்னாட்டில்
வீசு புகழுடை வேந்தர் திறையளக்கும்
வாசல் வளமெல்லாம் வஞ்சிவந்து சொல்வாளே.

### வாசல் வளம்

தரு

இராகம்: சங்கராபரணம்

30 வாசலிது வாசலிது - அம்மே
மலர் மகள்சேர் வாசலிது
தேசம்புகழ் நான்மறையோர் - அம்மே
சிறந்திருக்கும் வாசலிது
அன்னசத்ரம் தழைத்தோங்கும்
ஆஸ்தான வாசலிது
பன்னுதமிழ் குமுகுமென்று - அம்மே
பரிமளிக்கும் வாசலிது
ஆறுமுக வேலருடன் - அம்மே
அருள்பெருகும் வாசலிது
விருதிகழ் மும்முரசு - அம்மே
விளங்குமணி வாசலிது
வைத்ததிறை மாற்றலர்கள் - அம்மே
வந்தளக்கும் வாசலிது

5. காயகம்-பாட்டு. குறளை-புறங்கூறுதல். 6. வேள்-மன்மதன்.
29. திறை-கப்பம். 30 மாற்றலர்கள்-பகைவர்கள்.

தீனருக்கும் யாசகர்க்கும் - அம்மே
செல்வமருள் வாசலிது
மாநிலம் எலாஞ் செழிக்கும் - அம்மே
மநுநீதி வாசலிது

வேதபுரா ணாகமங்கள் - அம்மே
வேதியர்சொல் வாசலிது
சீதரனும் குமாரலிங்கன் - அம்மே
செயவிசயன் வாசலிது.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

31 தஞ்சமென் றடைந்த பேர்க்குச் சகலசாம் ராஜ்யம் நல்கும்
குஞ்சரம் அனைய வீரன் குமாரலிங் கேந்த்ரன் நாட்டில்
கொஞ்சிய கிளிபோல் வாசல் வளமெலாம்கூறி னற்போல்
மிஞ்சிய குறமா தேஉன் வித்தைகள் விளம்பு வாயே.

## வித்தை

தரு

இராகம் : மோகனம்

(பல்லவி)

32 எனது விந்தையைச் சொல்வேனே — புவிக்கு
இந்திரையே யினிநானே (எனது)

(அநுபல்லவி)

நனிமலர்த் தேனே — குமாரலிங்கைய
ராசன் வரையில்பயில் மானே (எனது)

(சரணம்)

பாரினில் இந்திர ஜாலமாயை
பண்ணு மகேந்திர ஜாலம்
நாரியர் தங்களை வசியம் செய்ய
ராஜ வசியமும் அறிவேன் (எனது) (1)

---

தீனர்-ஏழையா. 32. இந்திரையே-திருமகளைப் போன்றவளே.

அக்கினித் தம்பமும் அறிவேன்-தேவர்
அஷ்டாங்க யோகமும் அறிவேன்
முக்கிய ஜலஸ்தம்பம் அறிவேன் - திவ்ய
மோகன வித்தையும் அறிவேன் - (எனது) (2)

நரைதிரை மாற்றவும் அறிவேன் - செம்பொன்
ரசவாத வித்தையும் அறிவேன்
பரரிருதயம் அறிவேன் - பூத
பவுசிய வர்த்தமும் அறிவேன் (எனது) (3)

நல்லுரை என்மொழி யீதே - குமாரலிங்க
நாட்டினிலிப் போதே
வல்லரும்புமுலை மீதே - முத்து
மாலை தரித்திடு மாதே (எனது) (4)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

33 வன்னமென் முலையார் வேளர் மாலேறு தாது லிங்கன்
தன்னரு ளதனால் வந்த சங்க்ராமன் குமார லிங்க
மன்னவன் எறிசை நாட்டில் உள்ளநல் வளங்கள் எல்லாம்
அன்னமே எனக்கிங் கிப்போ தறியநீ உரைசெய் வாயே.

## நாட்டு வளம்

தரு

(பல்லவி)

34 பொன்னுரும் எறிசை வளம் புகலக்கே ளம்மே
மன்னவனும் குமாரலிங்க மகராசன் வாழும்; (பொன்னுரும்)

சரணம்

காவில்மது உண்டுவண்டு கனராகம் படிக்கும்;
தூவிஅன்னம் சிறைவிரித்துத் தோகைமயில் நடிக்கும்;
வாவிஇளங் கயல்தாவி மடற்கமுகை ஒடிக்கும்
மேவிவள வயற்கரும்பு மீறிமுத்தம் வெடிக்கும் (பொன்) 1

---

2. அக்கினித்தம்பம்-அக்னிசுடாமல் இருக்கச்செய்யும் வித்தை.
ஜலஸ்தம்பம்-நீரைநிறுத்தல். மோகன வித்தை-பிறரை மயங்கச்செய்யும் வித்தை
3. பரர்-பிறர். பூதம்-இறந்த காலம். பவுசியம்-வருங்காலம், வர்த்தம்-நிகழ்காலம்.
33. சங்க்ராமன்-போரிற் சிறந்து விளங்குபவன். 34. கா-சோலை. மது-தேன்.

செங்குமுத முகையவிழத் தேனருவி ஓடும்
எங்கும் நித்ய கலியாணம் எவர்க்குங்கை கூடும்
மங்கையர்க்குத் தாதுபஞ்ச வனக்கிளிகள் நாடும்
கங்கையிம சேதுமட்டும் கனபுகழ்கொண் டாடும் (பொன்)(2)

கனகமிட்டு நிதிஉதவு கர்ணுவ தாரன்
தினகரனை நிகர்விசயம் செலுத்துமன தீரன்
தனகமலை மேவுசெல்வம் தழைத்தருள்கு பேரன்
அனகனெனுங் குமாரலிங்க அதிசூர வீரன் (பொன்) (3)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

35 முத்தணி முலையார் கண்டு மோகிக்கும் மதனன் முல்லைக்
கொத்தலர் புனையும் எங்கள் குமாரலிங் கையமால் நாட்டில்
சித்தச ரதிபோற் பாரில் திகழ்தூற வஞ்சிப் பெண்ணே
மத்தகக் கரிகள் சேர்ந்த வரையெல்லாம் உரைசெய் வாயே.

## குறத்தி மலைவளம் கூறல்

தரு

இராகம் : புன்னாகவராளி

36 சதுரகிரி இமையகிரி சத்யகிரி மேருகிரி
சதிஉதவும் அருணகிரி கைலாச கிரியும்
சோலைமலை பொதியமலை சுவாமிமலை விராலிமலை
நீலமலை பழனிமலை நெடியபிரான் மலையும்

பச்சைமலை வெள்ளிமலை பவழமலை நிடதம்
பன்றிமலை வேழமலை படிகமலை உடனே

கொச்சிமலை நாகமலை தோகைமலை கந்தக்
கொல்லிமலை குடகுமலை கோகர்ணம் அறிவேன்

சகலகலை நிபுணனெனும் தாதுலிங் கையமால்
தந்தசுதன் சுமுகமுடை சமரசெய மாரன்

---

2. முகை-அரும்பு. பஞ்சவனக்கிளிகள்-பஞ்சவர்ணக் கிளிகள்.
கங்கை இமசேதுமட்டும்-கங்கை தோன்றும் இமயம்முதல் தனுஷ்கோடிவரை.
3. தினகரன்-சூரியன்.
கமலை-திருமகள். அனகன்-பாவமற்றவன். சித்தசரதி-மன்மதனுக்கு மனைவி.
36. பிரான்மலை-கொடுங்குன்றம். சுதன்-மைந்தன்.

பகைமருவார் பணிபாதன் துரைகுமார லிங்க
பருப்புயம்போல் சோமகிரிப் பதியில்வளர் மானே
துரந்தரிகன் மிகுந்தரண சூரன்குமார லிங்கன்
கந்தமலை எங்கள்குடிக் காணிமலை அம்மே.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

37 கந்தவேள் மலர்த்தாள் என்றும் கருத்தினுல் உகந்து போற்றும்
கொந்தலர் குழலார் மோகன் குமாரலிங் கையமால் நாட்டில்
அந்தமா மலையில் தோன்றும் அதிசயம் உள்ள தெல்லாம்
எந்தமக் கரிய வேதான் இக்கணத் துரைசெய் வாயே.

தரு

38 குலதிலகன் எறிசைவளர் குமார லிங்கையன் கரத்தை
மலையிலுள்ள வளமெல்லாம் வழுத்தக்கே ளம்மே.
வானுலவு தென்னஞ்சோலை மழைமுகிலைத் தோயும்—வரி
வண்டினம் செங்காந்தள் மலரிற்குளிர் காயும்

தேனிறல் வெண்மதியம் போலப்பத்தி பாயும்—யாளி
சிங்கமும் யானையும் ஒன்றாய்ச்சேர்ந்து மேயும்
சந்தன மரங்கள்மிகப் புதுமணம் குலாவும்—வரு
தந்திமருப் பேறிக்கரு மந்திவான் தாவும்

செந்தினைவி ளைந்திடவே வேங்கைமலர் தூவும்—இரும்பைச்
செம்பொன்செய்யு மூலிகைகள் சிறந்துமிக மேவும்
மதியதனி லேயிருந்து முயல்நாவை நீட்டும்—கண்டு
வானரங்கள் சுனைநீரை அள்ளி அள்ளி ஊட்டும்
துதிசெய்ரத்னம் சூரியன்போற் பொற்பிரபை காட்டும்—மேகம்

பகைமருவார்-பகையையுடைய எதிரிகள். துரந்தரிகன்-வல்லவன்.
ரணசூரன்-போரில் வலிமையுள்ளவன். காணி-உரிமை.
37. கொந்து-கொத்து. 38. வழுத்த-சொல்ல. தேனிறல்-தேன்கூடு.
தந்திமருப்பு-யானையின் கொம்பு. மந்தி-பெண்குரங்கு. செந்தினைவிளைந்திடவே-
வேங்கை மலர் தூவும்-வேங்கை மலரும்போது தினைவிளைந்து முற்றும்.
பொற்பிரபை-பொன்னைப்போன்ற ஒளி.

சுந்தரமன் மதன்போல் இந்திரசிலை பூட்டும்
அற்புதமி லங்கியிட வெயின்முத்தம் சொரியும்—மதன்
ஆட்சிமதிக் குடைபோலக் கமுகமடல் விரியும்
வெற்பில்வந் தவர்களுக்குத் தெய்வலோகம் தெரியும்—குற
மின்னுரைக் கண்டவர்கள் விரும்பிமணம் புரியும்.

தரு

39 அந்த மான கரந்தை மாமலை
விந்தை நான்சொல்லக் கேளாய்—அதில்
ஆரு மாரமும் தேவ தாரு
அநேக தாருஉண் டம்மே.

பந்த மாமுலை உந்துமாதருக்
கிந்த மாமதன் எனவே
பாரில் ஒங்குகு மார லிங்கைய
நேரியன்திரு நாட்டில் (1)

குந்த மும்நல்ல திந்துகமதி
குங்கிலியம் உண்டாகுமே
கோல மோடுத மால மும்நல்ல
சாலம் வேணதுஉண் டாமே (2)

சந்தனம் அகில் மந்தரம்பிசு
மந்த மாதிகள் உண்டு
தாரில் நாகமும் பாரில் நாகமும்
சாரு மாமரம்உண் டம்மே (3)

இங்குவும்இல வங்க மும்நிறை
குங்கு மங்களுண் டம்மே
இருக்கும் பாடலம் முருக்கி ஞெடலர்
வருக்கை கோடிக ளுண்டு
செங்குமுதம் கங்கு முத்தமும்
அங்கு வேணதுண் டம்மே

இந்திரசிலை-வானவில். 39. அந்தம்-அழகு. ஆரும்-ஆத்திமரமும். ஆரமும்-சந்தன மரமும். நேரியன்-சோழனைப் போன்றவன். குந்தம், இந்துகம் முதலியன மரவகைகள். தமாலம்-பச்சிலை மரம். பிசுமந்தம்-வேப்ப மரம். நாகம்-சுரபுன்னை, புன்னை. இங்கு-பெருங்காய மரம். கங்கு-கருந்தினை.

சேரும் வால்மிள காருஞ் சீரகம்
பாரும் வேணதுண்டங் கம்மே
சோம விருட்சமும் ரோம விருட்சமும்
சோதி விருட்சமும்உண் டம்மே.

சுனகமரம் பனகங்கவர் வளமுங்கன கொடுமை
காம சிட்சைசெய் நேமநிட்டையின் மாமு னித்திர ளதனில்
கற்பர் தாம் நிற்பர் தவமெய் யார்ஒரு கோடி நேமமாய் அந்த
ரோம விருட்சத்தை நாமெல் லோருமே பூசித் தால்வய-
தட்சயம்
ஒன்றும் அலட்சிய மில்லையம்மே.

கனக எருமைப் பாலது கண்டே பூசித்துண் டாலவர்
கனக மயமாகி நல்ல கதியுந்தரு மம்மே
சோதி விருட்சமுண் டாவது சொல்ல முடியாது
தொகை யேவிருத்தர் பால ராகியே சுகிப்பர்மகிழ்ந்
திருப்பார்
சோம விருட்சப்பால் சோம லதைமிக வுண்டால் முன்னால்
தோன்றுப் பகிரண்ட மெல்லாந் தோன்றுமடி யம்மே.

கன்னி மார்கள்சுனைக் கரைமேற்கரு நெல்லியது உண்டு
காய சித்தியும் உலகப்பொருள் காட்டுமடி யம்மே
சீரு லாவிய குமார லிங்கையன் செந்நெற் களஞ்சியத்தில்
செப்பு மூலிகை ஒப்பி லாதசொற் செப்புவேனடி அம்மே
வேதன் மாலான தேவர் மானிடர் விளங்கும் பட்சி
அருளுனக்கும்
விரும்பு வாரந்த மூலி கைக்கிணை வேறில்லையடி அம்மே.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

40 பொருபல வீமன் முல்லைப் புயதரன் அதிக யோகம்
மருவிய குமார லிங்க மனுபதி எறிசை நாட்டில்
குருமணி தரளக் கொங்கைக் குறவஞ்சிப் பெண்ணே பார்மேற்
திருவள ரைம்பத் தாறு தேசம்நீ உரைசெய் வாயே.

---

பனகம்-பன்னகம்; பாம்பு. காயசித்தி - சரீரத்தை நரைதிரையின்றி நெடுநாள் இருக்கச் செய்யும் சித்தி, 40. மனுபதி-மக்கள் தலைவன். குரு-நிறம். தரளம்-முத்து.

தரு

(இராகம்: மோகனம்)

41 செங்கயல் வேல்விழி மானே - மன்னர்
தேசமெல் லாஞ்சொல்லு வேனே
மங்கையர் மோகன் குமார லிங்கேந்திர
மன்னன் எறிசை வளரும்நன் னாட்டில் (செங்கயல்) (1)

கொங்கணங் கலிங்கங் குலிங்கங் கல்லி
யாணங் குச்சரங் கொச்சி உச்சினம்
வங்கம் புலிங்கம் மராட்டம் விராடம்
மாகதம் ஒட்டியம் ஆரியம் ஈழம் (செங்கயல்) (2)

குகுதம் தெலுங்கந்த்ரி கூடம் கபாடம்
கொல்லம் கொல்லாபுரம் பல்லவ தேசம்
மகதம் துளுவம் கர்நாடம் வங்காளம்
மலையாளம் சிங்களம் கலிங்க தேசம் (செங்கயல்) (3)

அங்கதஞ் சீனஞ்சவு ராஷ்டரம் மலாக்கா
அவந்தி அயோத்தி அநேகம்நான் கண்டேன்
இங்கித னாகு மாரலிங் கேந்திரன்
எறிசை வளங்களும்நான் பார்க்க வந்தேன்
(செங்கயல்) 4

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

42 இசைவல்லோர்க் குதவு கீர்த்தி குமாரலிங் கேந்த்ரன் நாட்டில்
விசையமாம் குறமா தேஉன் வித்தைகள் கேட்டுப் பத்துத்
திசையின்மங் கையர்கள் பேரும் செப்பிய குறிக்கு மெச்சி
நசையுடன் அவர்கள் நல்கும் வரிசையும் நவிலு வாயே

தரு

43 இந்திரன் தேவிஇந்தி ராணிக்கு
விந்தை யாய்க்குறி உரைத்தேன் - அவள்
நத்தையும் ரெத்தினப் பந்தையும் காதிற்
கொந்த ளோலையும் தந்தாள்

சேலஞ் சீனத்து வால மாதருக்கு
    ஏல வேகுறி சொன்னேன் - பொன்னின்
ஓலை யும்முத்து மாலையும் கெண்டைச்
    சேலை யுமவர் தந்தார்

பாடி மாதரைத் தேடி யேழுகம்
    நாடி யேகுறி சொன்னேன் - கெட்டி
ஆடை யும்பொன்னின் ஆடையும் மாய
    வாடை யும்அவர் தந்தார்

அப்போ சானஷி மெய்ப்ப தாய்மணம்
    தப்பா தெனக்குறி சொன்னேன் - அவள்
ஒப்பி லாவிலைக் கொப்பு மோதிரம்
    செப்ப மாகவே தந்தாள்

விரவும் வேலரைப் பரவும் வள்ளிக்குத்
    தரவு பூண்குறி சொன்னேன் - திவ்ய
வரவும் பரிபுர முங்கண்ட சரமுமவள் தந்தாள்.

சேரர் தேச உதார மாதர்க்குச்
சார மாய்க்குறி சொன்னேன் - கே
யூர மாமுலைக் காரம் ஆதிய
கம்பீர மாகவே தந்தார்

ஒட்டிய தேசத்துத் தொட்டிய மாதர்க்குக்
கெட்டி யாய்க்குறி சொன்னேன் - ரத்னச்
சுட்டியும் தங்கக் கட்டி யும்குறப்
பெட்டி யும்அவர் தந்தார்

சேல தாம்விழி வாலை யார்க்கனு
கூல மாய்க்குறி சொன்னேன் - செழு
நீல மேகலை சீல மாத்திரைக் கோலுமேயவர் தந்தார்
சீரு லாவிய குமார லிங்கையன்

    நேரி யன்திரு நாட்டில்
பார மாமுலை மாதர்க் குக்குறி
    வார மாய்ச் சொல்ல வந்தேன்
கொங்கம் விலாடத்துப் பெண்களுக் கேநல்
    இங்கித மாய்க்குறி சொன்னேன்

---

43 வாலமாதர்-இளைய மங்கையர். ஏலவே-பொருந்தவே. மெய்ப்பதாய்-உண்மையாய். பரிபுரம்-சிலம்பு. கண்டசரம்-கழுத்தணிவகை. கேயூரம்-தோள்வளை. ஆரம்-முத்துமாலை. வாலையார்-இளம்பெண்கள். வாரமாய்-அன்பாய்.

அங்கமெ லாம்பச்சை ஆகி விடவொரு
தங்க வளையமும் தந்தார்.

கச்சியிற் பெண்களும் மெச்சிடத் தானெங்கள்
மச்சினி போய்க்குறி சொன்னாள் - முத்துக்
குச்சுட னேமுலைக் கச்சையும் வங்காளப்
பச்சையு மேஅவர் தந்தார்.

பண்ணவர் தேசத்து வண்ண முலையர்க்கென்
அண்ணன் பெண்டுகுறி சொன்னாள் - பால்
வட்டியுங் காப்பும்பொற் சுட்டியும் என்குஞ்சுத்
தொட்டியும் மாராப்புமே தந்தார்
கேரள தேசத்து நேரிழைக் கென்மாமி
சீருட னேகுறி சொன்னாள் - வெகு
கெம்பீர மாகவே அம்பீரத் தாயித்தும்
சம்பிர முடனவர் தந்தார்
தஞ்சை நகரத்து வஞ்சியர்க் கென்பாட்டி
ரஞ்சித மாய்க்குறி சொன்னாள் - தங்கக்
கங்கணமும் சிங்கன அங்கணி யுங்குறக்
கொங்கணி யும்அவர் தந்தார்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

44 வள்ளலெனும் குமாரலிங்க மகாராசன் எந்நாளும் வளரும் நாட்டில்
இள்ளைமொழிக் குறமயிலே பாரிலுள்ள வனிதையருக்கெல்லா மங்கை
விள்ளருமா மலகமென விளங்குறி உரைத்ததுபோல் விரும்பும் என்றன்
உள்ளமதில் நினைத்தபடி உயர்குறிகள் தப்பாமல் உரைசெய் வாயே.

தரு

45 சாந்து கொண்டு நிலத்தை மெழுகடி
சந்தனத்தில் அந்தமாய்க் கோலம் சமையடி
சேர்ந்த பூம்பந்த லிட்டே அலங்கரி
சிறப்பு டன்மருக் கொழுந்து வேருட னிருக்கவாழைகள் கட்டி

---

தொட்டி-தொட்டில். மாராப்பு-மார்பில் கட்டும் தாவணி. கொங்கணி தலையில் அணியும் தொப்பிபோன்ற உடைவகை. 44. ஆமலகம்-நெல்லிக்கனி. 45. சாந்து-சந்தனம்.

விந்தை யாகும் கணபதி பூசைக்கு
மிக்க பாக்கிலை முக்கனியுடன் விளங்கு மோதகங் கொண்டுவா
வெந்த பிட்டுடன் எள்ளுருண்டை தோசையும்
வெள்ளை அவலொடு துள்ளு பொரிகளும்
அள்ளி யேவைத்து வேண்டிக்கொள்
பொன்னி னாலொரு பூர்ண கும்பம் வை
போதவே நாழி முத்தளந்துவை
பொங்க மாயடிப் பரப்படி
மின்னிய கண்டச் சேலை வாங்கிவைத்து
விருப்ப மாய் அடி பணிந்தமே
விரும்பிக் கும்பிட்டு வேண்டிக்கொள்.
உன் மனக்குறிதான் சொல்லக் கேளம்மே
ஊர்க்காவலன் வீரண்ணன் குறி உரைக்கிறான் மெத்தக்
கலைக்கிறான்

வர்ம மேதோ அறிந்திலன் பூசைக்கு
வளர்கிடாய் வெட்டிப் பொங்கலும் இட்டு
வைக்கிறே மென்று வேண்டிக்கொள்.
நாயன் மாருக்குத் தாயக மாகவே
நலமுடனொரு முடிப்பு வைத்துமே
நாலு திக்கிலுங் கும்பிடு.
மாய மாயுங்கள் வீட்டுச்சேலைக்காரி அதோ
வண்ணச் சேலையும் கேட்டல்லோ
வந்து மறிக்கிறாள் கும்பிட்டு வாங்கிவை
சோலை மாமலை அழகருக்கு அஞ்சுபொன்
தோசைக்கும் அவர்பூசைக்கும் இப்போ
சொல்லடிகுறி சொல்லுகிறேன்
வாலை யான கரந்தை மலைக்கன்னி மனது வையாமல்
இருக்கிறாள் - பலே

மரத்திற்கே பணிந்தேத்திக்கோ
இலகு குமாரலிங் கேந்திரன்
குலதெய்வம் எங்கள் வேலவர் பங்கயப்பதம்
இன்ப மாய் அடி பணிந்துக்கோ தலை மையாமந்த
மாரியம் மாளுக்குத் தரக்குச் சோறு புண்ணுக்கு
இலைக் கறியாக்கி முன்வைத்து வேண்டிக்கொள்
அந்த மாரன் குமாரலிங் கேந்திரன்
அன்புடன்பணி யங்கா ளம்மையை ஏத்திக்கொள்
பிழை தீர்த்துக்கொள் சந்தி வீரண்ணன் பூசைக் குகந்திடு
செல்வன் பணியு மிலகுகாவலுஞ் சாட்டிக்கொள்
மனுக்கேட்டுக் கொள் என்றன் குஞ்சுதன் உச்சி

காயாமலே என்னெண்ணெய் கொண்டுவா வண்மையாகவே
இன்னம் சொல்லுகிறேன் கேளடி.

தரு

46 தலையாட்டி விநாயகனே தந்திமுகப் பிள்ளையாரே
இலகியதென் கரந்தைமலை ஏழுகன்னித் தாயாரே
காரியமாய் அருள்கொடுக்கும் மாரியம்மைத் தாயாரே
நாரியெனும் மங்களநாயகியே முன்நடவாய்
சீதளிவாழ் வயிரவனே சேகரவாய் முன்நடவாய்
ஆதரவாம் கொடுங்குன்றில் அஷ்டவயிரவமூர்த்தி
சத்தியுள்ள சிங்கநகர் தழைத்திடுசேவகராயர்
உத்தமியே கங்காளி ஓங்குது வராபதியே
பாங்கான சோலைமலை பதினெட்டாம் படிக்கறுப்பா
ஓங்கிட நான் குறிசொலவே ஓடிவந்து முன்நடவாய்
மஞ்சமலை சாத்தாவே மலையாள பகவதியே
ரஞ்சிதமாய் அருள்கொடுக்கும் நல்ல கறுப்பணனே
ஏறுமயில் ஏறிவரும் எங்கள்வள்ளி நாயகனே
கூறுமலை களில்வாழும் குமாரவேலாயுதனே
சூரரைச் சங்கரிக்கும் தோகைமயில் வாகனனே
சீராய்நான் குறிசொலவே சிறப்புடனே வந்துதவு
மாத்திரைக்கோல் குறக்கூடை மணிவிரலில் ஒன்றுதொடு
சாற்றிடுமுன் சுண்டுவிரல் தயவாய்நீ தொட்டதனால்
ஆணழகன் ஒருவன்மேல் ஆசைபோல தோணுதம்மே
பூணுர மார்பனை நீ பொருந்துவாய்க் காணுதம்மே.

தரு

47 மங்கையே மங்களமாக மணஞ்சேரும் உண்மை
சங்கரேகை உன்கரத்தில் இங்கிதமாய் இருக்குதுபார்
மங்கையரே மலர்மகள்போல் வளர்ந்திருக்கும் யோக
மதனரேகை உன்கரத்தில் அனமே இதோ இருக்குது பார்
கனமான அன்னசொர்ணம் காசினியிற் பெறுவாயம்மே
கூர்மரேகை உன்கரத்தில் சீர்மருவி இருப்பதனால்
பார்மகளைப் போலவெகு பாக்கியவதி ஆவாய்

---

46. சீதளி–திருப்புத்தூர்த் திருக்கோயில். கொடுங்குன்று–பிரான்மலை.

47. அனமே–அன்னமே. சொர்ணம்–தங்கம்.

ஊர்த்த ரேகை உன் கரத்தில் தீர்க்கமாய் இருக்குதுபார்
ஏற்றவர்க்கொன் றில்லை யென்று வார்த்தையுடன்
வாழ்வாயம்மே
சுகமாக உன்கரத்தில் வடமாக இருப்பதனால்
மகவானைப் போலுனக்கோர் மாப்பிள்ளை தான்வருவான்
சந்தான ரேகையில் அந்தமாய் இருப்பதனால்
நந்தாத சவுரிபோல ராசன்வந்து சேர்வான்
கொவ்வைநறுங் கனிபோலுமுன் செவ்விதழ்கள் சிவந்ததனால்
மைவிழியார் மதனனைப்போல் மணவாளன் வருவான்
கயலெனச்செவ் வரிபரந்துன் நயனவிழி சிவந்ததனால்
செயமிகுவில் விசையனைப்போல் செயபுருஷன் வருவான்
பங்கயமாம் உனதுமுகம் திங்களொளி சிறந்ததனால்
அங்கையில்வே லரைப்போல அரசன்வந்து சேர்வான்.

## கொச்சகம்

48 செல்பொறுத்த வாவிநிறை தென்னெறிசை நன்னாட்டில்
வேல்பொறுத்த கண்ணிரண்டு மீனே குறமானே
மால்கொடுத்தோ னூர்பேர் வடிவுகுலம் வாய்மை
மேல்மிகுத்த மாலைபுகழ் மேன்மைஎல்லாம் சொல்வாயே.

## தரு

49 சம்பள குலாதிபனடிசுப மங்கள கெம்பீரனடி
தாங்குமுல்லைத் தாரனடி செல்வம்ஓங்குகு பேரனடி
நல்லகுண சீலனடி நிறை சொல்லுமனு கூலனடி
மெல்லியர்கள் லீலனடி கல்வி மிகுந்திருக்கும் லோலனடி
விஞ்சையர்கள் போசனடி நல்ல செஞ்சொலறி நேசனடி
ரஞ்சிதவுல் லாசனடி மிஞ்சுதன ராசனடி
திரவசன தூயனடி இவன் குமாரலிங்க தேயனடி
இரவலர்ச காயனடி கல்விச் சதுர்வித பூபனடி.

47. ஊர்த்தரேகை - ஊர்த்துவரேகை; மேல் நோக்கியரேகை. மகவான்—இந்திரன். சவுரி - திருமால. 48. மால் - காமம். 49. திரவசனம் - மாறுமல நிலைபெற்ற வார்த்தை.

வசனம்

வாராய் விரகமோகினியே. சுரதசல்லாபம் செய்யும்
புருஷ மன்மதாவதாரனானவன், பேரும் ஊரும் சொல்ல
ஒரு மாசமும் ஒரு பூவும் ஒரு ராசியும் சொல்லு பெண்ணே
ஆனால் அப்படியே மெய்யாகச் செப்புகிறேன் கேளடி
குறவஞ்சி மாதே; தனுர்மாசம்; சிங்கராசி, தாமரைப்பூ.

தரு

50 தனுர்மாசம் சொன்னதனால் தாரணியிற் சோமகிரி
மனுபதி குமாரலிங்க மன்னவன்கா ணம்மே (1)
கனமான சிங்கராசி மனமகிழ்ந்து சொன்னதனால்
அனசோமன் தென்னெறிசை நராதிபன்கா ணம்மே (2)
மோகினியே தாமரைப்பூ வாகாக மொழிந்ததனால்
கோகனகை சேருமந்தக் குமாரலிங்க ராசனம்மே (3)

கட்டளைக் கலிப்பா

51 நாகரீகன் குமாரலிங் கேந்திர
ராசயோசன் நயஞ்சேரு மந்தர
வாகன் முல்லை மலர்த்தாமன் தந்திர
மாக மீறு மலர்மெத்தை மீதிலே

ஏக போகசை யோகத் துடன்மகிழ்ந்
திருக்கும் நல்ல சுபதினம் என்றைக்கென்
ஆக மேம கிழுங்குற வஞ்சியே
அதுவும் பார்த்தித மாகச்சொல் லன்னமே.

தரு

பல்லவி

52 இந்தத் தினத்தில் வருவான்
என்குறி பொய்யாது (இந்தத்)

---

50. தனுர்மாசம் - மார்கழிமாதம். வாகு - அழகு. கோகனகை - திருமகள்.
51. மந்தரவாகன் மந்தரமலை போன்ற தோளையுடையவன்.

அநுபல்லவி

எந்தப் படியும் குமாரலிங் கேந்த்ரன் உனைமேவ (இந்தத்)

சரணம்

பந்துமுலை தடிக்குது உனதிடது பாரிசமுந் துடிக்குது
வந்துபாருன் வாசல்தனில் வட்டமிடு ருன்கருடன் (இந்தத்)

குருவிற் கெவுளி சொல்லுது ஆந்தைகிளை
கூட்டுது மிகநல்லது
கருமுகிற் சுண்டன்குறி கைகண்ட பலனதால் (இந்தத்)

மாமலர் மடந்தை யொருத்தி தூதுரைத்த
வனமாலை வாங்கிவந் தாளொருத்தி
மாமன் குமாரலிங்க மகாராசன் தனைச்சேர (இந்தத்)

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்

53 நகைமுகன் குமார லிங்க ராசன்மேல் ஆசை யான
அகமதில் உண்மை எல்லாம் அறிந்துசொல் குறப்பெண் ணாரே
தொகைபெறு நிதியம் ஆடை சொர்ணபூ ஷணங்கள் நானே
வகைபெறத் தரமே லான வரிசைநீ கைக்கொள் வாயே.

சிங்கன் வருகை

54 கொஞ்சிய பரிக்கு வேந்தன் குமாரலிங் கேந்த்ரன் நாட்டில்
வெஞ்சிலை தோளில் ஏந்தி மிகுசில கோலும் கொண்டு
வஞ்சியர் ஆசை கொள்ள வளரக்கு மணிகள் பூண்டு
செஞ்சிறு நகைஇ லங்கச் சிங்கனும் தோன்றி னானே.

55 நீலவுரு மாலைக் கட்டும் நெற்றியில்கஸ் தூரிப் பொட்டும்
சாலமொழி பேசத் தட்டும் தாவிக்குள்ள நெட்டும் எட்டும்
கோலவரி வல்ல வாட்டும் குத்துக்கோ லுங்கையில் கொண்டு
மூலைச்சல் லடமுந் தொட்டு முறுக்குமீசைச் சிங்கன் வந்தான்.

---

52 இடதுபாரிசம் - இடதுபக்கம். குருவில் - குருவைப்போல சுண்டன் - மூஞ்சூறு. 53. சொர்ண பூஷணங்கள் - பொன் அணிகலன்கள். 54. சிலை - வில. அக்குமணி - சங்குமணி. சிங்கன் - குறவஞ்சியின கணவன். 55. வல்ல வாட்டு - அங்கவஸ்திரம் சல்லடம - இடுப்பினின்று அடித்தொடைவரைத் தரிக்கும் உடை.

### பல்லவி

56 சிங்கனும் வந்தானே - அதிரூபச்
சிங்கனும் வந்தானே (சிங்கனும்)

### அநுபல்லவி

அங்க சனை நிகரி துங்கன் குமாரலிங் கயவேள் நாட்டினில்
(சிங்கனும்)

### சரணம்

செக்கர் நிறச்சல் வடக்கலை தொட்டு
மிக்க வடிக்கணை கைக்குள் அணைத்து
அக்கொடு மிக்க பதக்கன் வகைப்பணி
மெய்க்குள் நிலைத்திடும் இக்குவேள் என்னவே (சிங்கனும்) (1)

பருத்திடு கொண்டை பரித்தெழில் மீசை
திருத்திய பார்வை உருத்திர ஞகப்
கருத்தினில் மோக விருத்திய தாகப்
பொருத்திய வஞ்சி ஒருத்தியை நாடிச் (சிங்கனும்) (2)

வித்தகர் நாளும் மதித்திட எவரும்
நத்துகு மாரலிங் கையன்றன் நாட்டினில்
வைத்த பணக்குறி மத்தகம் ஒத்திடு
குத்து முலைச்சி குறத்தியைத் தேடிச் (சிங்கனும்) (3)

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

57 வஞ்சியர் மோகன் எங்கள் மால்குமார லிங்க போசன்
ரஞ்சிதன் வளரும் நாட்டில் நாடிய பட்சி எல்லாம்
மிஞ்சியே கண்ணி போட்டு விரைந்துமே வேட்டை யாடக்
கொஞ்சிய மொழிஉல் லாசக் குளுவனும் தோன்றினனே.

---

56. அங்கசன்-மன்மதன். செக்கர் நிறம்-சிவப்பு நிறம். வடி-கூர்மை. பதககன-பதக்கம்; மார்பணி. இக்குவேள-கரும்பையுடைய மன்மதன். பரித்து-தாஙகி. நதது-விரும்பும. மத்தகம-யானையின் தலை. 57. வஞசியா-பெண்கள். குளுவன்-குறத்தியின கணவனுகிய சிங்கனுக்கு வேலையாள்.

## குளுவன் கூற்று

### தரு

58 செந்திரு வளரும் குமார லிங்கேந்த்ர
திரன் எறிசை செழித்திடு நாட்டில்
வந்திடு கொக்கு பட்சிகள் பிடிக்க
வகையுடன் வந்த குளுவனும் நானே. (1)

அடையலர் பணியும் குமார லிங்கேந்த்ர
அங்கசன் வளரும் எறிசைநன் னாட்டில்
திடமுடன் கொக்கு வேட்டைக ளாடும்
செயம்பெறு சித்திரக் குளுவனும் நானே. (2)

பூவையர் மோகன் குமார லிங்கேந்திர
புரவலன் வளரும எறிசைநன் னாட்டில்
தேவையாய்ப் பட்சி அநேகங்கள் பிடிக்கும்
செழித்திடு சித்திரக் குளுவனும் நானே. (3)

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

59 திருவளர் எறிசை தன்னில் செழித்திட வளர்பெற் றோங்கி
வருதுறை குமார லிங்க மன்னவன் வளரும் நாட்டில்
பெருகிய கண்மாய் தன்னில் பிரளய மான பட்சி
கருதியே வேட்டை யாடக் கண்ணிகள் திருத்து வேனே.

### தரு

#### பல்லவி

60 கண்ணி திருத்துவனே - பறவைக்குக்
கண்ணி திருத்துவனே

#### சரணம்

கண்ணி திருத்துவனே குமாரலிங்கையக்
கந்தன் வளரும் எறிசைநன் னாட்டினில்
நண்ணிய தாராவும் கொக்கும் பிடிக்கவே
நாக ரிகமாக வேகத் துடனேதான் (கண்ணி) (1)

58. அடையலா-பகைவர். அங்கசன-மன்மதனைப்போன்றவன். பூவையர்-பெண்கள். 59. கண்மாய-ஏரி. பிரளயமான-மிகுதியான. 60. கணணி-பறவைகளைப் பிடிக்கும் சிறு வலை. 60. தாரா-வாத்து,“பச்சைத் தாராவுக்கு” (கும்பேசர். கு. 93.)

போச னெனுங்கு மாரலிங் கையசாமி
புரேவி சதிக்கம்மாய் வயற்பாறை தன்னிலே
நேசம தாகிய செங்கால் நாரையில்
ரெண்டா யிரம்பட்சி நேராய்ப் பிடிக்கவே (கண்ணி) (2)

அட்ட திசையோர்பணி குமாரலிங்கைய
ஐயன் புதுக்குளக் கம்மாய்க் கலிங்கியில்
சட்டமாய்த் தாராவும் முக்குளிப் பாேனாடு
தானே பிடித்துச் சமைத்துநான் தின்னவே (கண்ணி) (3)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

61 சில்லவார் குலனும் செந்நெல் செழித்திடும் எறிசை வாழும்
வல்லவன் குமார லிங்க மகராசன் புதுக்கண் மாயில்
எல்லையில் அடங்காப் பட்சி இருந்தொரு கோடி தானும்
செல்லமாய்க் கிணற்று மீனைச் சேர்ந்துமே மேயு தையே.

தரு

பல்லவி

62 மேயினு மையே - பறவைகள்
மேயினு மையே (மேயினும்)

சரணம்

மேயினு மையே குமாரலிங் கேந்திர
வேந்தன் மகிழும் உதினிக் குளத்தினில்
நேய முடன்வெகு செங்கால் நாரையும்
ரெண்டா யிரம்பட்சி ஒன்றாகக் கூடியே (மேயினும்)

அன்ன தருவாம் தாது லிங்கையன்
அன்பாய் அருளும் கனயோக ஞகிய
மன்னன் குமாரலிங் கேந்த்ர னென்னும்
மகிழ்கின்ற மரவடி வட்டத்தில்

மன்னுசெங் கால்நாரை ஆள்காட் டி தாராவும்
வேண்டிய கூழைக்கிடாவும் சிறகியும்
நன்னய மாகவே கெண்டைமீ னைக்கொத்தி
நாளும் பறவைகள் கீச்சி எனவே. (மேயினும்)

---

முக்குளிப்பான்-சிறுபறவை வகை. 61. சில்லவார் குலம்-நாயக்கமார் குலம்.
62. கூழைக்கிடா-நீர்வாழ் பறவை. சிறகி-ஒருவகை நீர்வாழ் பறவை.

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

63 விருதுயர் புகழும் கீர்த்தி விளங்கேறு தாது லிங்கம்
தருதுரை குமார லிங்க தயாநிதி வளரும் நாட்டில்
குருகுமம் மட்டித் தாராவும் கொக்குடன் அநேகம் பட்சி
திருநிறை மணப்பச் சேரி தனில்வந்து சேரு தையே.

### தரு

#### பல்லவி

64 சேருதையே - பறவைகள்
சேருதையே.

#### அநுபல்லவி

சேருதை யேகு மாரலிங் கேந்திரன்
செல்வ மிகுந்திடு பண்ணை வயலிலே
பார்வை யான விரால் கெண்டைக் காகவே
பத்துலட் சங்கொக்கு மெத்தமெத் தவந்து சேருதையே.

#### சரணம்

சங்க நிதிபோலும் தாதுலிங் கேந்திர
சாமி அருளும் தயாநிதி ஆகிய
மங்கையர் மோகன் குமாரலிங் கேந்திர
மன்னன் மகிழ்கின்ற பண்ணை வயலிலும்
எங்கும் புகழ்பிரண் டாடிக் குளத்திலும்
ஏலுவை யாய்வானை மங்கலந் தன்னிலும்
சிங்கார மாய்ப்பாரி சாத வயலிலும்
சேர்ந்து சேர்ந்து பட்சி மேய்ந்து மேய்ந்து கொண்டு
(சேருதையே)

---

63. ஏறு - ஆண்சிங்கம் போன்றவன். மணப்பச்சேரி: இவ்வூர் மதுரை மாவட்டத்திலுள்ள கொட்டம்பட்டியிலிருந்து 2 கி.மீ, தொலைவில் நத்தம் சாலையில் உள்ளது. பல துறைகளில் வளர்ச்சியடைந்து மாதிரிக் கிராமமாக விளங்குகிறது. 64. பார்வையான - நல்லதோற்றமுடைய. ஏலுவையாய். பொருத்தமாய்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

65 புண்டரம் சுற்று செம்பால் புலவுமே வீசும வேலான்
மண்டலா திபருக் கெல்லாம் மகுடமாம் தளவ மார்பன்
திண்டிறல் குமார லிங்க தீரன் நன் எறிசை நாட்டில்
சண்டமா ருதம்போல் கொக்குத் தளமெல்லாம் வருகு
தையே.

தரு

பல்லவி

66 வருகுதையே-பறவைகள்
வருகுதையே

சரணம்

வருகுதை யேகுமார லிங்கேந்திர
மன்னன் எறிசை வளருநன் னாட்டில்
பெருகு முதினிக் குளத்து வயல்தனில்
பேரான பட்சிகள் ஏராள மாகவே (வருகுதையே) (1)

இந்திர குமார லிங்கய நாட்டில்
இருக்கும் பறவை வயிரி தனைக்கண்டு
அந்தர மாய்வருஞ் செங்கால் நாரையும்
ஐந்நூறு மம்மட்டித் தாராவும் சேர்ந்துமே
(வருகுதையே) (2)

சத்ய அரிச்சந்த்ரன் ஆனவ னும்ஏறு
தாதுலிங் கேந்திரன் தன்னரு ளால்வரு
கர்த்தன் குமாரலிங் கேந்திரன் நாட்டில் ஆள்
காட்டிச் சிறகியோர் கூட்டம தாகவே
(வருகுதையே) (3)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

67 தாட்டிக னுமி லங்கைத் தலைவன்றன் மார்பில் அம்பு
பூட்டிய குமார லிங்கப் புரவலன் புதுக்கம் மாயில்
வாட்டமி லாத மீனை வாய்ப்புடன் சாப்பிட் டேக
நாட்டமாய்த் திரியு திப்போ நலமுடன் கெம்பா ரையே

65. புண்டரம கழுகு. செம்பால-இரத்தம. புலவு-புலால நாறறம. தளவம்-முலலை. சணடமாருதம-பெருங்காறறு. தளம-படை; கூட்டம்.
66. வயிரி-வலலூறு. அந்தரமாய-ஆகாசததின வழியே. ஆள்காட்டி, சிறகி-பறவை வகைகள்.
67. தாட்டிகன்-துஷ்டன். இலங்கைத் தலைவன்-இராவணன்.

### தரு

### பல்லவி

68 கெம்பா ரையே பொறுபொறு-கெம்பா ரையே

### அநுபல்லவி

எறிசை வருகின்ற கீர்த்திக் குமாரலிங்
கேந்திரன் நாட்டினில் பறவை வருகுது (கெம்)

### சரணம்

சம்பிரம மான புதுக்குளந் தன்னிலே
தாவும் கூழைக் கிடாவுமே மேயுது (கெம்பாரையே) (1)

தந்தச் சிமிழ்முலை மாதர்கள் மோகன
தயாநிதி யான குமாரலிங் கேந்திரன்
சொந்தப் புதுக்குளந் தன்னில் பறவைகள்
தூரத்தி லேவந்து இப்ப திரியுது. (கெம்பாரையே) (2)

செங்கதிர் வேல்முரு கேசரி பதம்பணி
தீரன் குமாரலிங் கேந்திரன் நாட்டினில்
பொங்க முடனே வயலிக் குளத்திலே
பொருந்திய பட்சி அநேகம் இருக்குது.(கெம்பாரையே)(3)

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

69 கருத்தினில் பழனி மேவும் கந்தர்தம் பதத்தைப் போற்றும்
தருக்கிலி குமார லிங்க சாமிதன் எறிசை நாட்டில்
பெருத்திடும் தாரா நாரை பிரளய மாகத் தானே
திருத்திய கண்ணி தன்னில் சிக்கிக்கொண் டிருக்கு தையே.

---

68. கெம்பாரையே-கெம்பாதே அட ஐயே என்பதன் மரூஉமொழி.
கெம்புதல்-உரத்துப் பேசுதல். கூழைக்கிடா-நீர்வாழ் பறவை வகை. தருக்கிலி-கர்வமில்லாதவன். 69. பிரளயமாக-கூட்டமாக.

தரு

பல்லவி

70 சிக்கிச் சடையே - பறவைகள் - சிக்கிச் சடையே

அநுபல்லவி

எறிசை நகர்வாழுந் திரன் குமாரலிங்
கேந்திரன் நாட்டினில் கொக்குவக் காவுடன்
தாராவும் நாரையும் கூழைக் கிடாவுமே (சிக்கிச்)

சரணம்

பேகன் எறிசையேறு தாதுலிங் கையன்
பெற்ற வரசுத னாக வருதுரை
வாகன் எனவரு குமாரலிங் கேந்திர
மன்னவன் வளர்பதி நண்ணிடு நாட்டினில்
நாக ரிகமாம் புரேவிசதி தன்னிலும்
நன்றாய் புதுக்குளத் துளவயல் தன்னிலும்
ஏக போகமா யனேகம் பறவைகள்
எண்ணத் தொலையாத வர்ணக் கண்ணிதனில் (சிக்கிச்)

## சிங்கன் சிங்கியைத் தேடல்

கொச்சகம்

71 சாந்தனுயர் தாதுலிங்க சாமி வரத்தில்வரு
வேந்தன்கு மாரலிங்க விசையன்நன் னாட்டினிலே
பாந்தமுடன் எழும் நற் பரிவாக வருவேட்டை
சேர்ந்து கலந்துணையச் சிங்கியைத்தான் தேடினனே.

## சிங்கன் கூற்று

தரு

72 மத்தகம் ஒத்திடு குத்துமுலைச்சிய ளய்யே-மையல்
வைத்த மனத்தை அமைத்து சமத்திய ளேயே
ஆருக்கு மேட்டிஎன் ஆருயிர் வாட்டி
ஆசைக்கண் ணாட்டி அழகுசீ மாட்டி

---

70. வக்கா-ஒரு பறவை. புரேவிசதி-கணமாயின பெயர். 71. பாந்தம-இணக்கம. பரிவாக-அன்புடனு. 72. மத்தகம-யானையின தலை.

சித்திர மொத்திடு வித்தகக் கள்ளியனையே-என்
சித்தம் உருக்கிய செகக் சிவப்பியள் ஐயே-தன்
வல்லமை காட்டி வெல்லச்சா றூட்டி
கொல்லுஞ்சீ மாட்டி செல்லுங்கண் ஞூட்டி
அந்த மிகுந்து வளர்ந்தவ ளாம்அடஐயே-மத
மந்திர தந்திர விந்தையெல் லாம்வரு மையே
அந்த நடையாள் விந்தை உடையாள்
இந்து சடையாள் நொந்த இடையாள்
தந்திர மதன்கல வித்தொழி லுக்கயி ராணி - குண
சாந்தன் குமாரலிங் கேந்த்ர நாடவள் காணி
ஆரத் தனத்தாள் பாரப் புனத்தாள்
கூரும் மனத்தாள் சேரும் இனத்தாள்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

73 நீடிய உடலம் ஆவி நித்திய முருகர்க் கென்றும்
நாடிய குமார லிங்க ராசரா சேந்திரன் நாட்டில்
ஊடிய சிங்கி தனைன உடம்பெலாம் தொய்ய ஓடித்
தேடியே திரிந்து வந்த தேசம்நீ உரைசெய் வாயே.

தரு

74 தேடினேனே தேசமெங்கும் தானே
தேடினேன் குமாரலிங்க தெசரதன்நன் ஞட்டில்
(தேடினேனே)
காக்கை மூக்குத் தேச மோடு காம்பிலிய தேசம்
ஆக்கமுட னொருகாலின் ஆடவர்கள் தேசம்
வடகலிங்கம் மலையாளம் மாசீனம் கொச்சி
திடமுடைய சவுராட்ரம் செழிக்கும்தில்லி முதலாய்த் (தேடி)

கனத்தமுலைச் சிங்கியைநீ காட்டிவிட்டால் இப்போது-ஐயே
வனத்திலுள்ள மூலிரச வாதவித்தை சொல்வே னையே
கன்னியரெல் லாந்தொடரக் கைக்குளிகை தருவேனையே
நன்னயனும் குமாரலிங்க ராசன்திரு நாட்டிலையே (தேடி)

---

72. காணி-உரிமை. ஆரம்-முத்துமாலை. புனத்தாள்-தினைக்கொல்லையில் இருப்பவள். கூரும்-அன்பு மிகும். 73. தொய்ய-இளைக்க. 74. மூலி-மூலிகை.

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

75 நன்கருணை நிதிஎறிசைப் பதியில் மேவும்
நல்லறிவு பெறுகுமார லிங்க பூபன்
தங்கவரைப் புயமீதில் அணையக் காம
சன்னதங்கொண் டுளமயங்கித் தணித்து மேபொற்
கொங்கைதனைச் சுமந்திடுமோ கிளிக்குக் கைமெய்க்
குறிபார்த்து வரிசையொன்றுங் குறைவில் லாமல்
செங்கையிற்பொன் பெற்றெதிரே மகிழ்ந்து வந்த
சிங்கியைக்கண் டான்தேடுஞ் சிங்கன் தானே.

### சிங்கனும் சிங்கியும் உரையாடல்

#### தரு

76 மங்கையேநீ என்னைவிட்டு மாநிலத்தில் வந்ததென்ன சிங்கி
மன்னர்மெச்சும் சோமகிரி வளம்பார்க்க வந்தேனடா சிங்கா
சங்கையில்லாக் குடிமரபு தப்பமிதித் திடலாமோ சிங்கி
தான் திருடன் பிறரை நம்பான்தகைமையைப்போலென்னை
உரைத்தாய் சிங்கா
மதியாமல் மானம்விட்டு மயங்கிஎவர் பின்தொடர்ந்தாய்
சிங்கி
மனத்தால்மாளிகைசமைத்து வம்புசெய்ய லாகாதடா சிங்கா
பதிமீதுன் அழகுகண்டால் பார்த்தவர்கள் விடுவார்களோ
சிங்கி
படுநீலம் சொல்வதென்ன பாவையர்முந் தானைகாவல் சிங்கா
ஊனமில்லாக் குறச்சாதிக் குன்னாலழுக் குண்டாச்சு சிங்கி
உள்ளக்கருத் தைப்பழனி வள்ளலறிந் திருப்பாரடா சிங்கா
வேனில்மதன் கணையதனை விலக்கவல்ல பேருமுண்டோ சிங்கி
விளக்கிருக்கத் தீத்தேடி வீணேதிரி வாருமுண்டோ
சிங்கா
கன்னல்செறி காமனுக்குக் கண்டவிடம் கண்ணல்லவோ
சிங்கி
கள்ளமனம் துள்ளிவிழும் கறுகுறுப்புத் தோணுதடா சிங்கா

---

75. தங்கவரைப் புயம்-மேருமலை போன்ற தோள். சன்னதம்-ஆவேசம்.

76. 'தான் திருடன் பிறரை நம்பான்' எனபது பழமொழி, (தியாகேசர் குறவஞ்சி: 65.) படுநீலம்-மிக்க பொய். மதன் கணை-மனமத பாணம். கன்னல்-கரும்புவில்.

உன்னைநம்பும் என்னைவிட்டே ஊர்தோறுந் திரிந்ததென்ன
சிங்கி
உண்டவீட்டுக் கேயாரும் ரெண்டகஞ்செய் வாருண்டோ
சிங்கா
கொண்டகனை வன்றனக்கு ரெண்டகஞ்செய் திடலாமோ
சிங்கி
குற்றமில்லா நெஞ்சினுக்குக் குற்றஞ்சொல்லி
வருவாருண்டோ சிங்கா
திண்டுமுண்டு பண்ணியுன்றன் சிந்தனைவே றுனதென்ன சிங்கி
தேருத நெஞ்சினுக்குத் தெய்வமொன்று சாட்சியடா சிங்கா
மனதறிந்து தூறுசொன்ன மார்க்கமென்ன சொல்லு
இப்போ சிங்கா
தனதாய்என் மயல்தீரத் தழுவிமுத்தம் தந்தருள்வாய் சிங்கி
தென்எறி சைப்பதி மின்னுருக் கேகுறிசொல்லிச்
சொர்ணா பரணம் துகிலொடு வாங்கினேன் சிங்கா
அந்தமோ கினிக்குநீ விந்தை யுடன்குறி சொல்லி-எனக்கு
எந்த வெகுமதி தந்தார்கள் நீ கொண்டுவந்தாய்-சிங்கி
வச்சிர முருக்குடன் வாங்கரிவாள்சிலைக் கோலும்-நல்ல
உச்சிதக் கொங்கணி மெச்சக் கொண்டுவந்தேன்-சிங்கா
நெற்றியில் செய்யானை வைத்து முடிப்பானேன் சிங்கி-எங்கள்
கர்த்தன் குமாரலிங் கேந்திரன் தந்தகனகரெத் தினச்சுட்டி
சிங்கா
பொங்கமுடன்வெகு இங்கித மாய்த்தலை மீதில்-அந்தப்
பூசணிப் பூவை நேசமாய் வைப்பானேன்-சிங்கி
துங்க முடனந்த மங்கையர்க் கேகுறி சொன்னேன்-சந்
தோஷத் துடன் தந்த சூரியப் பிறையது சிங்கா
தொழுதமெய்க் காதினில் துத்திப்பூ ஏதடி சிங்கி-நத்தம்
தோகையர் தந்திடு மாகன கக்கொப்புச் சிங்கா
பூலாம் பழக்கோவை மேலே அணிவானேன் சிங்கி-நல்ல
பூவையர் தந்திடு முத்துச் சரமடா சிங்கா
செம்மண் உருண்டையைச் செங்கையிற் சேர்த்ததென் சிங்கி-
எங்கள்

---

திண்டு முண்டு-ஏமாற்று. தூறு-பழிமொழி. முருக்கு-ஒரு வகைததடி. வாங் கரிவாள்-வளைந்த அரிவாள். சிலைக்கோல-வில்லுக்குரிய அம்பு. கொங்கணி-தலையில் அணிவது. செயயான-செமபூரான. கொபபு-காதணிவகையுள ஒன்று.

தர்ம துரைசுப்பு சாமி எனக்குத் தந்த பவழஞ் சிங்கா
இடையில்கா விச்சிலே ஏதுக்குக் கட்டினாய் சிங்கி-எங்கள்
இந்திரன் பிள்ளையார் தந்தபட் டுச்சீலே சிங்கா
சுந்தர ஞான குமாரலிங் கேந்திரனைப் பாடி நாளும்
இந்திரன் இந்திராணி போலிருப் போமடா சிங்கா.

## வாழ்த்து

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

77 ஆனிரை வாழி மேன்மேல் அந்தணர் வாழி என்றும்
மாநிலம் வாழி மன்னர் மநுநெறி வாழி வாழி
தீனரட் சகனும் எங்கள் செல்லவார் குலத்தில் வந்த
மானவேற் குமார லிங்க மநுபதி வாழி வாழி.

---

77. ஆனிரை-பசுக்கூட்டம். தீனரட்சகன்-ஏழைகளைக் காப்பாற்றுகின்றவன். மானவேல-பெருமையுடைய வேல.

❖ ❖ ❖

# செய்யுள் முதற் குறிப்பகராதி

[எண் - செய்யுள் எண்]


| | |
|---|---|
| அண்ணலாரி | 16 |
| அந்தமான | 39 |
| ஆனிரைவாழி | 77 |
| இசைவல்லோர் | 42 |
| இந்தத் தினத்தில் | 52 |
| இந்த வேளை | 14 |
| இந்திரன் | 43 |
| எங்கள் குறச்சாதி | 28 |
| எனது வித்தை | 32 |
| கண்ணி | 60 |
| கந்தவேள் | 37 |
| கம்பள குலாதிப | 49 |
| கருத்தினில் | 69 |
| காகத்துடன் | 19 |
| குஞ்சரி மணாளன் | 22 |
| குலதிலகன் | 38 |
| கெம்பாரையே | 68 |
| கொஞ்சிய | 54 |
| கொடியவற்கு | 11 |
| சத்திதர | 4 |
| சதுரகிரி | 36 |
| சரவணபவ | 3 |
| சரிகை | 7 |
| சல்லாபக் | 26 |
| சாந்தனுயரி | 71 |
| சாந்துகொண்டு | 45 |
| சிக்கிச்சடையே | 70 |
| சிங்கனும் | 56 |
| சில்லவாரி | 61 |
| சீலனெனும் | 18 |
| செங்கயல் | 41 |
| செந்திரு | 58 |
| செந்தி வேலவர் | 20 |
| சேருதையே | 64 |
| சேல் பொறுத்த | 48 |
| சோமகிரி | 8 |
| தஞ்சமென்று | 31 |
| தருவேறு | 9 |
| தலையாட்டி | 46 |
| தனுர்மாசம் | 50 |
| தாட்டிகனும் | 67 |
| திருமகள்போலச் | 24 |
| திருமகள் மருவி | 6 |
| திருவளர் எறிசை | 59 |
| தென்மலை | 21 |
| தேடினேனே | 74 |
| நகைமுகன் | 53 |
| நரபதி | 13 |
| நவசித்திர | 10 |
| நன்கருணாநிதி | 75 |
| நாகரீகன் | 51 |
| நீடியவுடலம் | 73 |
| நீலவுரு | 55 |
| பங்கய | 27 |
| புண்டரம் | 65 |
| பெண்ணுடனே நீ | 17 |
| பொருபல வீமன் | 40 |
| பொன்னணி | 1 |
| பொன்னுரும் | 34 |
| போசனெனும் | 29 |
| மங்கையேநீ | 76 |
| மங்கையே மங்களா | 47 |
| மத்தகம் | 72 |
| மாதர்படையால் | 23 |
| மாவிற் குயிலும் | 15 |
| முத்தணி | 35 |
| மேயினுமையே | 62 |
| வஞ்சி | 25 |
| வஞ்சியர் | 57 |
| வருதுதையே | 66 |
| வள்ளலெனும் | 44 |
| வன்னமென் | 33 |
| வாசலிது வாசல் | 30 |
| வாதுசொல்வார் | 5 |
| விரகமோகினி | 12 |
| விருதுயர் | 63 |
| வேலவர் | 2 |

# அரும்பத முதலியவற்றின் அகராதி

எண் - செய்யுள் எண்


| | |
|---|---|
| அக்கினி ஸ்தம்பம் | 31 |
| அக்குமணி | 23,27,53 |
| அகில் | 38 |
| அகிலம் | 5 |
| அங்கசன் | 25,55,57 |
| அங்கணி | 43 |
| அங்கதம் | 40 |
| அங்கி | 5 |
| அஞ்சனம் | 14,23 |
| அஞ்சுபொன் | 44 |
| அட்சயம் | 38 |
| அட்டகெசம் | 6 |
| அடிசில் | 6 |
| அடைக்காய் | 6 |
| அடையலர் | 6 |
| அண்டம் | 6 |
| அத்திமுகவன் | 4 |
| அதிசூரன் | 33 |
| அந்தணர் | 76 |
| அந்தரம் | 65 |
| அபயன் | 6 |
| அபரஞ்சி | 24 |
| அயோத்தி | 40 |
| அரவு | 3 |
| அரனர் | 16 |
| அருச்சனைக்கவியும் | 6 |
| அருணகிரி | 35 |
| அருணோதயம் | 6 |
| அலங்கிருதம் | 25 |
| அவதாரம் | 48 |
| அவந்தி | 40 |
| அவல் | 44 |
| அவனி | 4 |
| அறுசுவை | 6 |
| அன்னசத்திரம் | 6,29 |
| அனுகூலம் | 42 |
| அனுதினம் | 3,6 |
| அஷ்டதிசை | 59 |
| அஷ்டாங்கயோகம் | 31 |
| ஆக்கினை | 6 |
| ஆகமம் | 6 |
| ஆதவன் | 6 |
| ஆரம் | 39 |
| ஆளி | 37 |
| ஆரமுகநேசன் | 5 |
| ஆறுமுகவேலர் | 29 |
| ஆனந்தரூபி | 2 |
| ஆனிரை | 77 |
| இருக்குவேன் | 14,56 |
| இகல் | 6 |
| இகலரை | 6 |
| இங்கிதம் | 26,41,43 |
| இங்குவும் | 39 |
| இகம் | 51 |
| இந்திரகிலை | 38 |
| இந்திரஜாலம் | 32 |
| இந்திரன் | 6,43 |
| இந்திராணி | 24 43 |
| இந்துகமதி | 39 |
| இமையகிரி | 36 |
| இருதயம் | 32 |
| இரும்பு | 38 |
| இலகு | 45 |
| இலகுகடல் | 6 |
| இலங்கு | 24 |
| இலங்கைத்தலைவன் | 67 |
| இலைங்கம் | 39 |
| ஈழம் | 41 |
| உச்சித | 76 |
| உத்தண்டன் | 6 |

எழில் 6
எழுகதிர் 6
எறிசை 6,25,33,34,40,48,58,59,68
எறிசைநாடு 12
ஒய்யாரி 6
ஒபில் 6
ஓரி 6
கங்கணம் 43
கங்கை 4
கச்சி 43
கச்சையணி 12
கஞ்சத்தாள் 10
கஞ்சம் 25
கஞ்சமலரடி 12
கட்டியம் 6
கடமான் 28
கடுக்கன் 6
கண்டசரம் 43
கண்மாய் 58,59,60
கணை 15
கந்தரம் 6
கந்தவேள் 37
கபாடம் 41
கம்பளகுலாதிபன் 49
கமலப்போது 24
கமலம் 6
கமுகமடல் 38
கமுகு 34
கயல் 25,34
கயிலாசநாதர் 6
கயிலைநாதர் 3
கர்த்தன் 66,76
கர்ணடம் 41
கரந்தைமலை 36
கரந்தைமலைக்கண்ணி 45
கரந்தைமாமலை 39
கரந்தைமாமலையான் 6
கரந்தைவரை 24
கரம் 6,47
கருநெல்லி 39
கருமந்தி 38
கருமுகில் 52
கலிங்கம் 41
கலிங்கி 60
கலை 24
கலைப்பெண் 24
கவரிகள் 6
களபம் 25
கன்னல் 76
கன்னி 1
கனகமயம் 39
கனபுகழ் 34
கனகரெத்தினம் 76
கஸ்தூரி 4
கா 34
காந்தா 8
காந்தி 10
காயகவிசேடம் 28
காயசித்தி 39
காமசிட்சை 39
காமத்தீ 21
காமன் 6
காரிகை 19
காவிச்சீலை 76
காவியமரை 6
காளாஞ்சி 6
கிருபாகரன் 5
குங்கிலியம் 39
குங்குமம் 39

| | | | |
|---|---|---|---|
| குஞ்சரம் | 6,31 | கொங்கை | 26, 40 |
| குஞ்சரி மணாளன் | 22 | கொச்சி | 41 |
| குடகுமலை | 36 | கொச்சிமலை | 36 |
| குடமுனி | 21 | கொல்லம் | 41 |
| குந்தம் | 39 | கொல்லாபுரம் | 41 |
| குபேரன் | 34 | கொல்லிமலை | 36 |
| குமாரலிங்கதீரன் | 5 | கொழுநன் | 24 |
| குமாரலிங்கநிருபன் | 29 | கோகிலம் | 26 |
| குமாரலிங்கபோஜன் | 5 | சக்கரதரன் | 4 |
| குமாரலிங்கராயன் | 23 | சகலகலை நிபுணன் | 36 |
| குமாரலிங்கேந்திரபுரவலன் | 58 | சகி | 18 |
| குமாரலிங்க சுமுகன் | 28 | சங்க்ராமன் | 33 |
| குமாரலிங்க தயாநிதி | 63 | சங்கரேகை | 47 |
| குமாரலிங்க துரந்தரன் | 27 | சங்கை | 76 |
| குமுதினிக்குளம் | 66 | சஞ்சீவி | 12 |
| குரிசில் | 6 | சண்முகன் | 3 |
| குருதி | 6 | சத்திதரன் | 4 |
| குருமணி | 40 | சத்தியகிரி | 36 |
| குலிங்கம் | 41 | சத்ய அரிச்சந்திரன் | 6 |
| குவலயம் | 10 | சதுரகிரி | 36 |
| குணுவன் | 58 | சந்ததி | 9 |
| குறக்கொங்கணி | 43 | சந்தனம் | 6,38 |
| குறப்பெட்டி | 43 | சந்தன மரம் | 38 |
| குறவஞ்சி | 2 | சந்தன வாடை | 21 |
| குறளை | 28 | சந்தானம் | 6 |
| கூழைக்கடா-நீர்வாழ்பறவை வகை | 62,68 | சந்திரவதனம் | 12 |
| | | சம்பிரமம் | 68 |
| கூளி | 6 | சம்பிரமுடன் | 43 |
| கெம்பாரு | 68 | சமர் | 6 |
| கெருடகேதனம் | 6 | சரப்பணி | 6 |
| கெவுளி | 52 | சரவணபவன் | 3 |
| கேயூரம்-தோளணி | 43 | சல்லடம்-காற்சட்டை | 55 |
| கைச்சரம் | 6 | சவ்வாது | 6 |
| கைலாசகிரி | 36 | சவுராட்டம் | 40,41,71 |
| கொக்கு | 58 | சாடி | 4 |
| கொங்கணி | 76 | சாம்ராஜ்யம் | 21 |
| கொங்கம் | 41 | சானகி | 48 |

சிங்கம் 38
சிங்கராசி 49
சிங்களம் 41
சிங்காரம் 10
சித்தசரதி 35
சித்திரக்குளுவன் 58
சித்திர ரேகை 9
சில்லவார்குலம் 6,8,61,77
சிலை 23
சிவகதை 6
சிவகிரி 6
சிறகி 62
சினம் 6
சினேகம் 28
தங்கக் கங்கணம் 43
தஞ்சம் 31
தண்டை 12
தந்திமருப்பு 38
தந்திமுகப்பிள்ளையார் 46
தந்தியின் கொம்பு 6
தம்புருக்கம்பி 10
தமாலம் 39
தரணி 6
தரளம் 40
தரு-இசைப்பாட்டுவகையுள் ஒன்று 11
தருச்சினை 6
தலையாட்டிவிநாயகன் 46
தழல் 17,21
தளகர்த்தர் 6
தனம் 23
தனுர்மாசம் 49,50
தாட்டிகன் 67
தாதுலிங்கபூபன் 29
தாதுலிங்கவேள் 20
தாம்பூலம் 6
தாமரைப்பூ 50
தாவியமரை 6
திகிரி 6
திங்கள் 26
திண்சிலை 6
தியாகி 6
திரிகூடம் 41
திருக்கோடி நாதர் 6
திருமகள் 6,24
திரு மணிமுத்தாநதி 6
தில்லி 74
தினகரன் 34
தீனர் 30
தீனரட்சகன் 77
துங்கவான்பரியை 6
துங்கன் 27,28
துட்டர் 6,25
துடி 6,25
துத்திப்பூ 76
துரந்தரிகன் 36
துலங்க 6,26
துவராபதி 6
துளுவம் 41
துன்மார்க்கம் 17
துன்னு 6
தெய்வலோகம் 38
தெலுங்கம் 41
தென்றல் 11
தென்னவன் 1
தேவதாரு 33
தேனருவி 34
தேனிறால் 38

| | | | |
|---|---|---|---|
| தோகைமலை | 36 | பச்சைமலை | 36 |
| நகைமுகன் | 53 | பஞ்ச | 6 |
| நகை | 42 | பஞ்சணை | 14 |
| நஞ்சு | 10,24 | பஞ்சவனக்கிளிகள் | 34 |
| நண்ணி | 17 | பட்டாணிமார்கள் | 6 |
| நந்தனவனம் | 6 | படிகமலை | 36 |
| நரபதி | 13 | பத்மபதாம்புயம் | 20 |
| நரை திரை | 32 | பராக்கு | 8 |
| நணி | 32 | பரிபாலன் | 8 |
| நாகம் | 39 | பரிமளம் | 25 |
| நாகமலை | 36 | பரிமளித்தல் | 30 |
| நாகரிகம் | 60 | பல்லவ தேசம் | 41 |
| நாகரிகன் | 51 | பவழம் | 76 |
| நாரி | 46 | பவழமலை | 36 |
| நாரியர் | 32 | பவனி | 6 |
| நாரை | 69 | பன்றிமலை | 36 |
| நாழி | 45 | பன்னு தமிழ் | 37 |
| நான்மறையோர் | 30 | பாக்கியசாலி | 66 |
| நித்தியதானம் | 6 | பாதச்சிலம்பு | 12 |
| நிதி | 6 | பாய்சினை வேங்கை | 6 |
| நிறை நிறை போதம் | 6 | பார்த்திபன் | 2 |
| நீதம் | 6,17 | பாரிசாதவயல் | 64 |
| நீலமேகலை | 43 | பாலநன் | 2 |
| நீலிமலை | 36 | பாலன்னம் | 14 |
| நுண்ணிடை | 25 | பாவையர் | 6 |
| நுதல் | 24 | பிசுமந்தம்-வேப்பமரம் | 39 |
| நூபுரம் | 24 | பிரண்டாடிக்குளம் | 64 |
| நேமம் | 6 | பிரபை | 6,10 |
| நேமநிட்டை | 39 | பிரான்மலை | 36 |
| நேயம் | 6 | புடவி-பூமி | 25 |
| நேரியன் | 39,43 | புதுக்குளம் | 68,69 |
| பகரும் | 6 | புதுமணம் | 38 |
| பகிரண்டம் | 39 | புயம் | 36 |
| பகீரதன் | 6 | புராணகமம் | 30 |
| பங்கயம் | 27 | புரூரவா | 6 |

| | | | |
|---|---|---|---|
| புவனி | 10 | மதி | 4 |
| புவி | 28, 32 | மதிக்குடை | 38 |
| புளிங்கம் | 41 | மந்த்ரம் | 28, 39 |
| புனுகு | 46 | மநுநீதிவாசல் | 30 |
| புனேவிசதி | 60, 70 | மநுபதி | 77 |
| பூத பவுசியம் | 32 | மராட்டம் | 41 |
| பூபன் | 49 | மருமக்கள் | 6 |
| பூரணகும்பம் | 45 | மலர்க்கா | 19 |
| பூரிகை | 6 | மலர்த்தாள் | 3, 37 |
| பூலாம்பழம் | 76 | மலர்ப்பெண் | 24 |
| பூவையர் | 76 | மலர்மகள் | 30 |
| பேதகம் | 17 | மலாக்கா | 41 |
| பேதமை | 6 | மலேயாளம் | 41 |
| பேரிகை | 6 | மழைமுகில் | 38 |
| பைந்தமிழ் | 6 | மறையவர் | 6 |
| பைம்பூண் | 3 | மன்மதன் | 6, 23 |
| பொதியமலே | 36 | மாகதம் | 39, 41 |
| பொற்பாதம் | 6 | மாகநகக்கொப்பு | 6 |
| பொற்பிரபை | 38 | மாசுணம் | 6 |
| பொன்னியந்துறையான் | 6 | மாத்திரைக்கோல் | 24 46 |
| போசன் | 29 | மாதங்கம் | 6 |
| மகத்துவம் | 6 | மாதங்கி | 2 |
| மகதம் | 41 | மாதவர் | 6 |
| மகீபதி | 13 | மாதவன் | 6 |
| மகேந்திர ஜாலம் | 32 | மார்க்கம் | 76 |
| மச்சினி | 43 | மார்த்தாண்ட | 8 |
| மணப்பச்சேரி | 63 | மாரன் | 36, 45 |
| மந்தகக்கரிகள் | 55 | மாருதம் | 20 |
| மத்தகெசம் | 6 | மால் | 1 |
| மதரசகேணி | 6 | முக்கனி | 6, 45 |
| மதராசன் | 15 | முக்காலம் | 6 |
| மதன் | 12 | முகையவிழ்தல் | 34 |
| மதனன் | 47 | முத்தம் | 38 |
| மதனுட்சி | 38 | முத்துக்குச்சு | 3 |
| மதனபிஷேகம் | 24 | முந்து | 4 |

| | | | |
|---|---|---|---|
| மும்முரசு | 6 | வடவானலம் | 21 |
| முயல் | 38 | வடிவேலர் | 4 |
| முல்லைத்தாமன் | 5 | வதனம் | 26 |
| முல்லையந்தொடை | 6 | வயற்கரும்பு | 34 |
| முலைக்கச்சு | 43 | வயிரி, | 66 |
| முழுமதி | 6 | வர்மம் | 19,45 |
| மூதுரை | 6 | வருக்கை | 39 |
| மூலிகை | 38, 39 | வனமுலை | 25 |
| மெய்ப்பன்றி | 6 | வனிதையர் | 25 |
| மேகலை | 24 | வாகு | 50 |
| மேதினி | 2 | வாம்பரி | 6 |
| மேருகிரி | 36 | வாரி | 21 |
| மேனகை | 24 | வால்மிளகு | 39 |
| மையல் | 6,16 | வாலமாதர் | 43 |
| மைவிழியார் | 47 | வாலை | 2 |
| மோகனவித்தை | 32 | வாலையார் | 43 |
| யாசகர் | 30 | வாவி | 27,34,48 |
| யானை | 38 | வானரங்கள் | 38 |
| யூகி | 6 | விசயன் | 34 |
| ரஞ்சிதன் | 22 | விசுவாசன் | 5 |
| ரத்னச்சுட்டி | 43 | விசையமாதவன் | 6 |
| ராகவகிருஷ்ணன் | . 6 | வித்தகமதியான் | 6 |
| ராஜ வசியம் | 32 | விதுரா | 8 |
| ரோமவிருட்சம் | 39 | விந்தை | 39 |
| வக்கா-ஒரு பட்சி | 70 | விம்பவிதழ் | 10 |
| வக்காப்பாசி | 24 | விபாடனன் | 9 |
| வக்காமணி | 28 | விரகமோகினி | 6,16 49 |
| வங்கம் | 41 | விராவிமலை | 36 |
| வங்காளப் பச்சை | 43 | விரிசிலை நதியான் | 6 |
| வங்காளம் | 41 | விருத்தர் | 39 |
| வச்சிரதேகம் | 28 | விருது | 7 |
| வச்சிர மூக்குத்தி | 24 | வில்மாரன் | 5 |
| வசியம் | 32 | விவேகி | 6 |
| வஞ்சியம்பதி | 6 | வீசுகதிர் | 17 |
| வடகலிங்கம் | 74 | | |

## இதுவரை அச்சான குறவஞ்சி நூல்கள்

| | நூலின் பெயர் | ஆசிரியர் |
|---|---|---|
| 1. | அழகர் குறவஞ்சி | கவிகுஞ்சர பாரதி |
| 2. | இரிஷிவந்தக் குறவஞ்சி | தெரியவில்லை |
| 3. | இலக்ஷணக் குறவஞ்சி | முனியப்ப முதலியார் |
| 4. | ஓதாளர் குறவஞ்சி என்னும் அலகுமலைக் குறவஞ்சி | சின்னத்தம்பி நாவலர் |
| 5. | காங்கேயன் குறவஞ்சி | பொன்மணி செல்லப்பன் |
| 6. | கும்பேசர் குறவஞ்சி நாடகம் | பாபநாச முதலியார் |
| 7. | குறுக்குத்துறைக் குறவஞ்சி | தி.சு. ஆறுமுகன் (சிவதாசன்) |
| 8. | கூட்டுறவுக் குறவஞ்சி | தஞ்சைவாணன் துரை<br>சீனிவாசன் |
| 9. | சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் | சிவக்கொழுந்து தேசிகர் |
| 10. | சிக்கல் நவநீதசுவர சுவாமி குறவஞ்சி | சொக்கலிங்கம் பிள்ளை |
| 11. | சிதம்பரக் குறவஞ்சி | தெரியவில்லை |
| 11A. | சிற்றம்பலக் குறவஞ்சி | கே. என். தண்டாயுதபாணி |
| 12. | சோலைமலைக் குறவஞ்சி | கிருஷ்ணய்யங்கார் சுவாமி |
| 13. | ஞானக் குறவஞ்சி | முதல் 2 பகுதிகள் குமரகுருபரர்<br>3-ஆம் பகுதி பீரு முகம்மது |
| 14. | ஞானரத்னக் குறவஞ்சி | பீருமுகம்மது சாகிபு |
| 15. | தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி | தெரியவில்லை |
| 16. | தமிழரசி குறவஞ்சி | அ. வரதநஞ்சைய பிள்ளை |
| 17. | தியாகேசர் குறவஞ்சி | தெரியவில்லை |
| 18. | திருக்குற்றாலக் குறவஞ்சி | திரிகூடராசப்பக் கவிராயர் |
| 19. | திருமலையாண்டவர் குறவஞ்சி | தெரியவில்லை |

20. பாம்பணகவுண்டன்
குறவஞ்சி பாலபாரதி முத்துச்சாமி
அய்யர்
21. பெத்லகேம்
குறவஞ்சி வேதநாயக சாஸ்திரியார்
22. பொய்யாமொழியீசர்
குறவஞ்சி தத்துவலிங்கன்
23. மண்ணிப்படிக்கரை
நீலகண்டர் குறவஞ்சி ஆதிபுரி சாமிநாதையர்
24. முத்தானந்தர் ஞானக்
குறவஞ்சி முத்தானந்தர்
25. விராலிமலைக்
குறவஞ்சி தெரியவில்லை
26. ஸ்ரீகிருஷ்ணகுமாரி
குறவஞ்சி தேவி கருமாரிதாசர்

குறவஞ்சி வரிசையில் பல குறவஞ்சிகள் உள்ளன. அவை வருமாறு:

| நூற் பெயர் | ஆசிரியர் |
|---|---|
| 1. அமரவிடங்கன் குறவஞ்சி | தெரியவில்லை |
| 2. அர்த்தநாரீசுவரர் குறவஞ்சி | தெரியவில்லை |
| 3. அழகர் குறவஞ்சி | கவிகுஞ்சர பாரதி |
| 4. அனலைத் தீவுக் குறவஞ்சி | முத்துக் குமாரப்புலவர் |
| 5. ஆதிமூலேசர் குறவஞ்சி | தில்லைவிடங்கன் மாரிமுத்தா பிள்ளை |
| 6. இராமபத்திர மூப்பனார் குறவஞ்சி | க. சுப்பராமய்யர் |
| 7. இராஜமோகனக் குறவஞ்சி | கிரிராஜ கவி |
| 8. இரிஷிவந்தக் குறவஞ்சி | இராசப்ப உபாத்தியாயர் |
| 9. இலக்ஷணக் குறவஞ்சி | முனிபப்ப முதலியார் |
| 10. ஓதாளர் குறவஞ்சி என்னும் அலகுமலைக் குறவஞ்சி | சின்னத் தம்பி நாவலர் |
| 11. கச்சாய்க் குறவஞ்சி | ஐமாப்பாண முதலியார் |
| 12. கச்சேரி முதலியார் குறவஞ்சி | இன்பக் கவி |

13. கண்ணப்பர் குறவஞ்சி — மார்க்கண்ட நாவலர்
14. கதிரைமலைக் குறவஞ்சி — தெரியவில்லை
15. கபாலீச்சுரர் குறவஞ்சி — தெரியவில்லை
16. காங்கேயன் குறவஞ்சி — பொன்மணி செல்லப்பன்
17. காயாரோகணக் குறவஞ்சி — அழகு முத்துப் புலவர்
18 காரைக் குறவஞ்சி — யாழ்ப்பாணம் சுப்பையர்
19. கும்பேசர் குறவஞ்சி நாடகம் — பாபநாச முதலியார்
20. குறவஞ்சி — தாமோதரக் கவிராயர்
21. குறுக்குத்துறைக் குறவஞ்சி — தி.சு. ஆறுமுகன் (சிவதாசன்)
22. குன்றக்குடிக் குறவஞ்சி — வீரபத்திரக் கவிராயர்
23. கூட்டுறவுக் குறவஞ்சி — தஞ்சைவாணன் (துரை சீனிவாசன்)
24. கொடுமளூர்க் குறவஞ்சி — நல்ல வீரப்பப்பிள்ளை
25. கோமாசிக் குறவஞ்சி — ச. து .சு. யோகி
26. சந்திரசேகரக் குறவஞ்சி — தெரியவில்லை
27. சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் — சிவக்கொழுந்து தேசிகர்
28. சாப்டூர் குறவஞ்சி — நகரம் முத்துசாமிக் கவிராயர்
29. சஹாஜிராசன் குறவஞ்சி — முத்துக் கவி
30. சிக்கல் நவநீதஸ்வாமிபேரில் குறவஞ்சி — சொக்கலிங்கம் பிள்ளை
31. சிதம்பரக் குறவஞ்சி — செல்லப்பப் பிள்ளை
32. சிதம்பரக் குறவஞ்சி — தெரியவில்லை
33. சிவபெருமான் குறவஞ்சி — தாமோதரக் கவிராயர்
34. சிவன்மலைக் குறவஞ்சி — தே. இலட்சுமண பாரதியார்
35. சிற்றம்பலக் குறவஞ்சி — கே. என். தண்டாயுதபாணி
36. சுவாமிமலை முருகன் குறவஞ்சி — இலிங்கப்பையர்
37. செந்தில் குறவஞ்சி — தெரியவில்லை
38. சேற்றூர் முத்துசாமித் துரைக் குறவஞ்சி — இராமசாமிக் கவிராயர்
39. சோலைமலைக் குறவஞ்சி — கிருஷ்ண ஐயங்கார் சுவாமி
40. சோழக் குறவஞ்சி — கம்பர்
41. ஞானக் குறவஞ்சி — குமரகுருபர தேசிகர்

| | | |
|---|---|---|
| 42. | ஞானரத்தினக் குறவஞ்சி | பீர்முகம்மது சாகிபு |
| 43. | டெல்லிக் குறவஞ்சி | தெரியவில்லை |
| 44. | தஞ்சைக் குறவஞ்சி | தெரியவில்லை |
| 45. | தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி | தெரியவில்லை |
| 46. | தத்துவக் குறவஞ்சி | முருகேச பண்டிதர் |
| 47. | தமிழரசி குறவஞ்சி | அ. வரதநஞ்சைய பிள்ளை |
| 48. | தியாகராசர் குறவஞ்சி | தெரியவில்லை |
| 49. | தியாகேசர் குறவஞ்சி | (பதி) டாக்டர் வி. பிரேமலதா |
| 50. | திருக்குற்றாலக் குறவஞ்சி | மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் |
| 51. | திருச்செங்கோட்டுக் குறவஞ்சி | தெரியவில்லை |
| 52. | திருமயிலைக் குறவஞ்சி | யாழ்ப்பாணம் வீரமணி |
| 53. | திருமலையாண்டவர் குறவஞ்சி | தெரியவில்லை |
| 54. | திருவாரூர் தியாகராசர் குறவஞ்சி | |
| 55. | திருவிடைக்கழிக் குறவஞ்சி | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| 56. | திருவேற்காடு ஸ்ரீகிருஷ்ண குமாரி குறவஞ்சி | தேவி கருமாரி தாசர் |
| 57. | துரோபதைக் குறவஞ்சி | தெரியவில்லை |
| 58. | தேவேந்திரக் குறவஞ்சி | தஞ்சை சரபோஜி மாமன்னர் |
| 59. | நகுலமலைக் குறவஞ்சி | சேனாதிராய முதலியார் |
| 60. | நகுலமலைக் குறவஞ்சி | விசுவநாத சாஸ்திரியார் |
| 61. | நல்லைக் குறவஞ்சி | சேனாதிராய முதலியார் |
| 62. | நல்லைநகர்க் குறவஞ்சி | ப. கந்தப்பிள்ளை |
| 63. | நவபாரதக் குறவஞ்சி | ச. து. சு. யோகியார் |
| 64. | நவபாரதக் குறவஞ்சி | தெரியவில்லை |
| 65. | நெல்லைக் குறவஞ்சி | தொண்டையான் முதலியார் |
| 66. | பழனிக் குறவஞ்சி | வே. முத்தனாச்சாரியார் |
| 67. | பாண்டிக் கொடுமுடிக் குறவஞ்சி | தெரியவில்லை |

68. பாம்பண கவுண்டன் குறவஞ்சி — பாலபாரதி முத்துச்சாமி ஐயர்
69. பிரகதீசுவரர் குறவஞ்சி — சிவக்கொழுந்து தேசிகர்
70. பிலிப்புவிரோட்ரிக்கோ முத்துக்கிருஷ்ணன் குறவஞ்சி — இன்பக் கவி
71. பெத்லகேம் குறவஞ்சி — வேதநாயக சாஸ்திரியார்
72. பெம்பண்ணக் கவுண்டர் குறவஞ்சி — அருணாசலக் கவிராயர்
73. பொங்கலூரர்க் குறவஞ்சி — பிரமயனப் புலவர்
74. பொய்யாமொழியீசர் குறவஞ்சி — சிதம்பர தத்துவலிங்கையர்
75. மண்ணிப்படிக்கரை நீலகண்டர் குறவஞ்சி — ஆதிபுரி. சாமிநாதையர்
76. மருங்காபுரிச் சிற்றரசர் குறவஞ்சி — வெறிமங்கைபாகக் கவிராயர்
77. மருதப்பக் குறவஞ்சி — பிலிப்பு தெ மெல்லோ
78. மல்வில் குறவஞ்சி — வெற்றிவேலுப் புலவர்
79. மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சி — நவாலியூர் சு. சொக்கநாதன்
80. மாந்தைக் குறவஞ்சி — வீரபத்திரக் கவிராயர்
81. மின்னொளிக் குறவஞ்சி — தெரியவில்லை
82. முத்தானந்தர் குறவஞ்சி — ஆற்றூர் மூத்தானந்தர்
83. முத்துசாமித்துறைக் குறவஞ்சி — முகலூர் கந்தசாமிக் கவிராயர்
84. முருகக் கடவுள் குறவஞ்சி — இலிங்கப்பையர்
85. முருகர் குறவஞ்சி — நல்ல வீரப்பப்பிள்ளை
86. மெய்ஞ்ஞானக் குறவஞ்சி — முகம்மது
87. யாழ்ப்பாணத்துச் செல்வர் குறவஞ்சி — இன்பக்கவிப்புலவர்
88. வண்ணைக் குறவஞ்சி — விசுவநாத சாஸ்திரியார்
89. வண்ணை வைத்தியலிங்கர் குறவஞ்சி — கணபதி ஐயர்
90. வருணபுரி ஆதிமூலேசர் குறவஞ்சி — தில்லைவிடங்கன் மாரிமுத்தாப் பிள்ளை

| | | |
|---|---|---|
| 91. | வள்ளிக் குறவஞ்சி | தெரியவில்லை |
| 92. | வள்ளியம்மன் ஆயலோட்டக் குறவஞ்சி | கந்தசாமி முதலியார் |
| 93. | வன்னிக் குறவஞ்சி | வெற்றிவேலுப் புலவர் |
| 94. | வாதசெயக் குறவஞ்சி | தெரியவில்லை |
| 95. | விராலிமலைக் குறவஞ்சி | பிள்ளைப் பெருமாள் கவிராயர் |
| 96. | வெங்கடசாமி நாயக்கர் குறவஞ்சி | மாம்பழக் கவிச்சிங்க நாவலர் |
| 97. | வெங்களப்ப நாயக்கர் குறவஞ்சி | அழகிய சிற்றம்பலக் கவிராயர் |
| 98. | வைணவக் குறவஞ்சி | முருகேச ராமானுச ஏதாங்கி சுவாமிகள் |
| 99. | வைத்தியக் குறவஞ்சி | கொங்கணர் |
| 100. | வையாபுரிக் குறவஞ்சி | தெரியவில்லை |

---

குறிப்பு: இந்தப் பட்டியல் பலருடைய பட்டியல்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது.

❋

## இந்நூல் நிலையத்தின் வெளியீடுகள்

—o—

| | | |
|---|---|---|
| 1. | பரிபாடல் | 15 00 |
| 2. | ஐங்குறுநூறு | 12 00 |
| 3. | மணிமேகலை | 30 00 |
| 4. | பதிற்றுப்பத்து | 18 00 |
| 5. | நான் கண்டதும் கேட்டதும் | 5 00 |
| 6. | தமிழ்விடு தூது | 3 00 |
| 7. | சொர்ணபுரி அம்பிகை பிள்ளைத் தமிழ் | |
| 8. | அபிநயதர்ப்பணம் | 15 00 |
| 9. | The Story of My life | 40 00 |